511

காவேரி

சர்வஜித்து வைகாசி

MADRAS
511

டிடிடியின்

திறன் முழுதும்..

நியோஸிடில் உள்ளது

10% டி.டி.டி பௌடர்

இது கெய்கி தயாரிப்பு

D/K 6019 TAM.

★ நியோஸிட் நீடித்த சக்தியுள்ளது

★ அண்டும் சகல பூச்சிகளும் நாசமடையும்

★ மானிடர்களுக்கு கெடுதலில்லாதது

தென் இந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ்
அடினன் அண்ட் கோ., லிட்.,
மௌண்ட் ரோட், மதராஸ்

DDT Geigy DDT

மைசூர் சமஸ்தானம், கிட்ட ஜில்லாக்களுக்கு
விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ் முகமத் ரஹீம் கனீ,
99-B, ஜும்மான்கான் ரோட்
பெங்களூர் ஸிடி

கெய்கி இன்ஸெக்டிஸைட்ஸ் லிட்., நெவில் ஹவுஸ் நிக்கல் ரோட், பெலார்ட் எஸ்டேட், பம்பாய்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 JUN 1947
MADRAS

PANDYAN INSURANCE COMPANY LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: **மதுரை**

★

சிறந்த சேவை செய்து வருகிறது

நெருப்பு, மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

மொத்த ஆஸ்திகள் ரூ. 62,00,000

★

கிளைகள் { பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

★

பிரதம ஏஜண்டுகள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை Etc.

2270

EASTERNS 379.

BITA CAFFIN

பிடாகாபின்

(தலைவலி மாத்திரைகள்)

தலைவலி, பல்வலி, கால்களிலும் மூட்டுகளிலும் வலி, சூதகத்தின் போதுள்ள வலி முதலிய சகல வலிகளையும் நீக்கும். தூக்கமின்மை, மலேரியாசுரம் இவைகளையும் கண்டிக்கும். இருதயத்துக்கோ, குடலுக்கோ எவ்வித தீங்கும் செய்யாது.

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்

மூன்று மாத்திரைகள் கொண்ட பாக்கெட் அணா 1

BITA LAX

பிடாலாக்ஸ்

(இனிப்பான சாக்லெட் சுகபேதி)

இலேசாகவும், சுகமாகவும், மலச்சிக்கலை போக்க வல்ல குணமுள்ளது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

Stockist:—

M/s DADHA & Co., P. T. Madras

Manufactured by:—

BOMBAY TABLET MANUFACTURING COMPANY,

Post Pox 2092, 176, Zaveri Bazaar, BOMBAY 2

★ ★

உண்மையான நீம் ஆயில் சோப் இதுதான்

சருமத்தைப் பாதுகாக்க அவசியமென்று நிபுணர்கள் கருதும் நீம் எண்ணெயினின்றும் தயாரிக்கப்படுவது **மார்கோ** ஒன்றுதான்.

தினசரி **மார்கோ** உபயோகித்து உங்கள் மேனியை பாதுகாருங்கள்.

மார்கோ சோப்

டாய்லட் & மெடிஸினல்

கல்கத்தா கெமிகல்

CALCUTTA CHEMICAL



மரச்சாமான்கள்

மரங்களை வெட்டி விழ்த்தி மேசை, நாற்காலி, அலமாரி முதலியவைகளாக அமைக்க எஃகு ஆயுதங்கள் இன்றி யமையாதவை.

டாடா எஃகு

தி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

தலைமை சேல்ஸ் ஆபீஸ்: 102A, கிளைவ் தெரு, கல்கத்தா.

★

கற்பனா சக்தி

★

கர்னாடக சங்கீதத்தில் சுருதி லய சுத்தி இருக்க வேண்டியது அவசியமென்றாலும், கற்பனை இல்லாவிட்டால் 'சப்' என்றுதானிருக்கும். நல்ல சாரீரத்துடனும் ஞானத்துடனும் விசேஷ கற்பனை கூடியிருப்பதால்தான் ஒரு வித்வானுடைய சங்கீதம் பிரபலமாக விளங்குவது.

இக் கற்பனா சக்தி இசைஒளி கும்பகோணம் **A. D. சுல்தானின்** சங்கீதத்தில் அபாரமாக இருப்பதால்தான் அவருக்கு விசேஷ ஆதரவு. நீங்கள் இவர் இசையைக் கேட்டு ஆனந்திக்கா மலிருந்தால் இங்கே குறிப்பிட்டிருக்கும் இடங் களில் கேட்டு அனுபவிக்கலாம்.

16—5—47 சாத்தான்குளம் (நாசரேத் S.I.Ry.)
18—5—47 சேலம்
1—6—47 உதகமண்டலம் (ஊட்டி)
28—6—47 திருச்சினப்பள்ளி

N. B:- கூடியசீக்கிரம் மலேயாவிற்கு புறப்படுகிறார்.

தீக்கிரையானாலும் தீங்கு அதிகமில்லை

சின்னஞ் சிறுபொறிதான். பெருங்காற்றின் துணை, முடிவு பெருந்தீ. இம்மாதிரி எதிர்பாராத விபத்துக்களை தவிர்ப்பது சாத்தியமில்லைதான். ஆனால் இவை காரணமாக விளையும் பெரும் நஷ்டத்தில் சிக்காமல் தப்புவது என்றும் சாத்தியமே.

காலமறிந்து செய்யும் இன்ஷ்யூரென்ஸ் என்றும் இன்றியமையாக பாதுகாப்பளிக்கும். பிருத்வி தீ விபத்து பாலிஸிகள் உங்கள் ஒவ்வொரு தேவைக்கும் உகந்தது.

பிருத்வி பரிபூர்ண பாதுகாப்பளிக்கிறது.

பிருத்வி இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி, லிமிடெட்.
12, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை. 1.

CP/P/TM/102

1947-ஆம் ஆண்டு

உங்களுக்கு வைத்திருப்பது என்ன?

அறியவேண்டாமா? என்றைய தினம் என்ன ஸம்பவம் நடக்க இருக்கிறது என்பதை எளிதில் நீங்கள் அறிந்துகொண்டுவிடலாமே! இன்றே ஒரு கார்ட்டு எழுதுங்கள். உங்கள் முழு விலாஸமும் நீங்கள் நினைக்கும் ஓர் புஷ்பத்தின் பெயரும் கண்டு எழுதுங்கள் போதும். எழுதும் தேதியிலேயிருந்து வரும் பன்னிரண்டு மாதங்களுக்கு உங்களுக்கு கிடைக்கப்போகும் லாபம், நஷ்டம், எந்த வியாபாரத்தின் மூலம் எந்தவிதமாக ஏற்படப் போகிறது என்ற விபரம், வேலை எப்பொழுது கிடைக்கும், சம்பளம் எப்பொழுது உயரும், பரீக்ஷையில் நீங்கள் தேருவது முதலான எல்லா விஷயங்களையும் மாதவாரியாக பலன் குறித்து ரூ. 1—4—0க்கு வி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

•

தபால் செலவு தனி.

இங்கிலீஷிலேயே எழுதியனுப்பவும்

•

Shree
Swami Yogiraj Jyotish Asram,
C. K. PHAGWARA. (Kapurthala State)

அடுத்த விளையாட்டுப் பந்தயத்தில்

அம்ருதா

ரத்த சுத்தி திராவகம்..

கலக்கம், ஆயாசமில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.

நரம்புகளை முறுக்கேற்றுகிறது

கேசரி குடீரம் லிட், மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு

ஏஜண்டுகள்:-

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,
பேர்ஹாம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை.



தாய்மார்கள் அறிவர்

— உட்வர்ட்ஸ் க்ரைப் வாட்டரின் —
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S
GRIPE WATER
keeps baby well

1-WW108-111 W WOODWARD LTD LONDON, ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.
12A Lingha Chetty Street — G. T. MADRAS.

அறிவிப்பு

●

சமீபத்தில் நமது காரியாலயத்தின் கிளை சென்னையில் திறக்கப்படும் என்பதை நேயர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம்.

நமது சென்னை காரியாலயத்தில் பொறுப்பு வகித்து நிர்வாகம் செய்ய ஒரு அனுபவசாலி தேவை. விளம்பர சம்பந்தமான சகல அலுவல்களும் தெரிந்திருப்பது விசேஷ அம்சமாகக் கருதப்படும்.

நமது தலைமைக் காரியாலயத்தில் வேலை செய்ய திறமை வாய்ந்த ஆர்டிஸ்ட் தேவை. குறைந்தபக்ஷ சம்பளம், அனுபவம், வேலைத் திறமைக்கு அத்தாட்சி இவைகளுடன் தகுதியுள்ளவர்கள் மனுப் போடவும்.

●

மானேஜிங் புரோப்ரைடர்
"காவேரி"
பெஸண்ட் ரோடு கும்பகோணம்

பொருளடக்கம்

சர்வஜித்து மலர் 6 — வைகாசி இதழ் 10

அரசியல் வானம் 9

கதம்பம் 12

தேசபக்தரின் தீரச்செயல் 15

"அருமறை சோரு மறிவிலான்" 19
"சாரி"

கண்டேன் ஐயரை 25
யோகி சுத்தானந்த பாரதியார்

பூமி 29
ஆர். கே. விசுவநாதன்

கவியும் ரசிகனும் 33
டி. சேஷாத்திரி

ஓரிளைஞனுக்குக் கடிதம் 38
வே. சாரநாதன்

சித்ரா 41
கே. சுந்தரம்மாள்

விவாக ரத்து 57
து. ராஜகோபால்

மௌன மண்டபம் 66
ரா. ஸ்ரீ. தேசிகன்

தர்மத்தின் வெற்றி 70
"ஜய்லன்"

பாழும் பணம் 77
கௌரீ

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

காவேரி

சர்வஜித்து மலர் 6	"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்	வைகாசி இதழ் 10

அரசியல் வானம்

இந்திய சுதந்திர போராட்டத்தைக் குறித்து "கத்தி யின்றி, ரத்த மின்றி யுத்தமொன்று வருகுது" என்று ஒரு கவி பாடியிருக்கிறார். இன்று நடப்பதென்ன? போராட்ட மின்றியே வெள்ளை அரசாங்கம் சுதந்திர மளிக்கத் தீர்மானித்துவிட்டது. ஆனால் நம்மில் ஒருசமூகம் கத்தியை உருவி, இரத்தத்தைச் சிந்தித் சுதந்திரத்தை அடைய, திட்டம் கொண்டுள்ளது. இந்த வினோத திருவிளையாடலைத் தடுக்காமல் வெள்ளை அரசாங்கம் ஒதுங்கி நிற்கின்றது. பலமில்லாத, அதிகாரமில்லாத இடைக்கால இந்திய அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியாமல் திகைத்து நிற்கின்றது. நமது நிலைமையைக் கண்டு உலகம் நகைக்கின்றது.

பாகிஸ்தான் என்ற பூதத்தை ஜின்னா சாகிப் பலமாக ஏவி விட்டுவிட்டார். இனி அதை அடக்கக்கூடிய சக்தி அவருக்கே இல்லாத நிலைமை ஏற்பட்டு விட்டது.

பாகிஸ்தான் பூதத்தின் பயங்கர விளையாட்டுக்களால் லீகர்கள் எதிர்பாராத விபரீத நிலைமை ஏற்பட்டுள்ளது. பஞ்சாப் மாகாணமும், வங்காள மாகாணமும் லீகர்களுக்குத் தலை வலியை உண்டாக்கிவிட்டன. முஸ்லீம்கள் அல்லாதார் தனித் தாயகம் அடையத் தீர்மானித்துவிட்டனர். இப்படிப்பட்ட குழப்ப நிலையில் வங்காள பிரதம மந்திரி சுகரவர்த்தி சாகிப் 'சுதந்திர ஐக்ய வங்காளம்' என்ற புதிய மந்திரத்தை உரக்க ஜபிக்கின்றார்.

ஐக்ய இந்தியா, ஐக்ய இந்திய மத்திய அரசாங்கம் என்ற வார்த்தைகள் மறைந்து வருகின்றன. நாட்டைத் துண்டுகள் போட்டே தீரவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. எத்தனை துண்டுகள் என்பதைப்பற்றியே சர்ச்சைகள். மலையாள ராஜ்யத்தில் 'மாப்பிளஸ்த்தான்' என்ற மெல்லிய கூக்குரலும் காதில் விழுகின்றது!

அரசியல் நிர்ணய சபை தங்கு தடையின்றி, காரியங்களைச் செய்துவருகின்றது. சுதேச சமஸ்தானாதிபதிகள் அதில் சேருவதில் மீன மேஷம் பார்க்கும் கொள்கையைச் சற்றே தளர்த்தியுள்ளார்கள்.

குழப்ப நிலைமை இப்படியே நீடிக்குமானால் சுதந்திரத்தில் வெறுப்புக் கொள்ளவும் மக்கள் துணியலாம்!

இப்பொழுது தேவை நாட்டில் அமைதி. அதிகாரத்தை மாற்றுவதெப்படி என்று வெள்ளை அரசாங்கம் யோசிப்பதைவிட அமைதியை நிலை நாட்டுவதில் சிரத்தை காட்டுவதே முதற்கடமை. பாதுஷாக்களையும், நவாப்புக்களையும், சுல்தான்களையும், மகாராஜாக்களையும், பீஷ்வாக்களையும் இருந்த இடம் தெரியாமல் செய்துள்ள வெள்ளை அரசாங்கத்துக்கு ஒரு சில மதவெறியர்களை, காலிகளை, குண்டர்களை அடக்கச் சக்தியில்லையாவென்றே நாகரிக உலகம் கேட்கிறது. பிரிட்டிஷ் அதிகாரிகள் எல்லைப்புறத்திலும் வங்காளத்திலும் பஞ்சாபிலும் கலகம், குழப்பம் விளைவிப்பவர்களுடன் ஒத்துழைக்கின்றார்கள் என்ற குற்றச் சாட்டுக்கு ஆதாரமில்லையென்று சொல்வது கடினம். போரில் ஆயிரக்கணக்கான வீரர்களை வென்று, வெற்றிக்கு உதவிய வீரர் திலகமான

வைஸ்ராய்பிரபு லார்ட்லீயிஸ் மௌண்ட் பாட்டன் அவர்கள் மௌனம் சாதிப் பதின் மர்மம் விளங்கவில்லை! தாம் நடவடிக்கைகள் எடுக்க மனம் கொள்ளா விட்டாலும் இடைக்கால மத்திய அரசாங்கத்திற்காவது ஏன் போதிய அதிகாரமளிக்கப்படவில்லை என்ற கேள்வி எழுகின்றது. நிலைமை அதிவிரை வில் சீர்படாமலிருந்தால் பிரிட்டனின் நல்லெண்ணத்தையே மக்கள் சந்தேகிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டு விடலாம்.

ஜனநாயக அரசியல் முறையில் பிரிட்டன் ஆர்வம் காட்டுவது உண்மையானால் எல்லைப்புறத்தில் லீகர்கள் செய்யும் அதிக்கிரமங்கள் அடக்கப்படல் வேண்டும். பஞ்சாபில் அட்டகாசங்கள் ஒடுங்க வேண்டும். அஸ்ஸாமில் நடக்கும் கலாட்டா நசுக்கப்படவேண்டும். வங்காளத்தில் நிகழும் அட்டூழியங்கள் ஒயவேண்டும். இவைகளைச் செய்ய அன்னிய அரசாங்கத்தினால் சாத்யமில்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம்! சகல பொறுப்பையும், அதிகாரங்களையும் நிர்வகிக்க இடைக்கால மத்திய அரசாங்கத்தில் மிக்க திறமை உள்ள, அனுபவமுள்ள தலைவர்கள் இல்லையா? ஏன் தவக்கம்? ஒருவருடம் சென்று பிரிட்டன் வெளியேறத் தீர்மானித்துள்ளதை உதறித்தள்ளி இன்றே வெளியேறத் திட்டமிடுவது நலமென்று காந்திஜி வாதிப்பதில் சற்றே உண்மையுண்டு. நடுவில் நின்று நடிக்கும் வேற்று ஆசாமி உடனடியாக அப்பால் சென்றால் சமாதானம் ஏற்படுவது சுலபமாகு மென்பதில் பொருள் பொதிந்து காணப்படுகிறது. வட்டமேஜை மகாநாடு நாடகம் இனியும் வேண்டாம் என்றே விஷயமறிந்தோர் கூறுகின்றனர்.

பிரிட்டன் கையாளப்போகும் கொள்கை என்ன? ஐக்கிய இந்திய அரசியலா அல்லது சிதைந்த பாகிஸ்தான் திட்டமா? விளக்கம் அதிகார பூர்வமாக விரைவில் வெளியாக வேண்டும். அப்பொழுதே உள்நாட்டில் நிலைமை சற்று தெளிவுபடலாம்.

பாகிஸ்தான் திட்டம் பிரும்மாண்டமானது. ஆசியாவில் அராபிய நாடுகளையும் சேர்த்துக்கொண்டு முஸ்லிம் சாம்ராஜ்யம் ஏற்படுத்தவே திட்டம். நாட்டைப் பிரிப்பதால் ஏற்படும் இந்தியப் பாதுகாப்புப் பிரச்னையைப் பற்றிச் சிந்திப்போர் சிலரே. ராணுவத்தையும் பிரித்து விட வேண்டியதே என்று லீகர்கள் கோஷமிடுகின்றனர். அதன் விளைவுகளைப் பற்றிச் சிந்தித்தார்களா என்பது சந்தேகம். வைசிராய் நிர்வாக சபையில் முன்பு பதவி வகித்த ஸர். ஜகதீஷ் பிரஸாத்அவர்களது ஆழ்ந்தகருத்துக்களை அனைவரும் சிந்தித்துணர வேண்டும்.

"வெளியிலிருந்து ஆபத்து உள்ளது என்பதை மறக்காதீர்கள்? மத்திய அரசாக்கம் சர்வ சுதந்திரத்துடன் நாளையே ஏற்பட்டால்கூட இந்தியாவைப் பாதுகாக்கப் பலம், சக்தி ஏற்படப் பல வருஷங்களாகும். ஐக்கிய நேசதேசத்தை நம்பி மோசம் போகாதீர்கள்! ருஷ்யாவுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதும் ஆபத்து. பிரிட்டனுடன் ராணுவ உதவி ஏற்பாடு செய்து கொள்வதே சாத்யமான வழி! பல்வேறு சுதந்திர அரசாங்கங்கள் அமைக்கப்பட்டால் நிலைமை என்னகும்? ராஜீய பேரங்கள் தலைவிரித்தாடும். இரு அரசாங்கத்தினிடையே குழப்பங்களும் கலகங்களும் ஏற்பட்டால் பிரிட்டனின் கொள்கை எவ்விதமாயிருக்கும்? சுதேச சமஸ்தானதிபதிகள் திருவிளையாடல்கள் புரிந்தால்? இந்தியாவின் நிலைமை சீன தேசத்துக்கு ஏற்பட்டுள்ள துர்ப்பாக்கிய நிலைமைக்கு வந்துவிடும். சுதேச சமஸ்தானதிபதிகளும் பேரம் பேசத் துணிவார்கள். ஆகவே நாட்டைத் துண்டு போடுவது என்று தலைவர்கள் தீர்மானித்து விட்டால் பாதுகாப்பு விஷயமாகப் பின்பு சங்கடங்கள் நேரா வண்ணம் முன்யோசனையுடன் முதலில் திட்டம் வகுத்துக் கொள்ள வேண்டும். இந்தியா மற்றொரு சீன தேசமாக மாறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே இந்திய அரசியல் வானத்தில் கருமேகங்கள் பரவியுள்ளன. இடியும், மின்னலும் அதிகமாகி யுள்ளன. தெளிவான நிலைமை எப்பொழுது ஏற்படும் என்பதைத் திட்டமாகக் கூறுவது கடினம்.

சின்னி

இரா. சந்திரகுப்தன்

காலையில் பின்பனி மூட்டம்
கலையாத அவ்விள நேரம்
சாலையிலே பத நீரைத்
தலை தாங்கித் தயங்கி வருவாள்.

காதள வோடிய கண்கள்;
கருத்தைக் கவர்ந்திடும் பார்வை;
நாதத்திலே நிறையின்பம்—அவள்,
நகைச் சுவைப் பேச்சிலேயுண்டு.

சிட்டிப் புடவையுடுத்தி—நற்
சீராய் ரவிக்கையைக் கட்டி,
நாட்டியக் கன்னிபோல் சின்னி
நடந்து வருவதோர் காட்சி!

அள்ளிச் செருகிய கூந்தல்—காதில்,
அழகாகத் தொங்கும் பொன்னோலை;
கள்ளத்தால் உள்ளத்தையீர்க்கும்—உயர்
கருமை நிறத்தவள் சின்னி.

காலை விழித் தெழும்போது
கன்னிக் குரலினைக் கேட்பேன்;
வாயை, முகத்தைக் கழுவி
வாயிலில் வந்துநான் நிற்பேன்.

கோல முகத்தவள் சின்னி
குடத்தை இறக்கியே வைத்து
கால ணுவுக்குப் பதநீர்—வளைக்
கையால் முகந்து கொடுப்பாள்

குவளைப் பதநீரைத் தந்தோர்
குறும்புச் சிரிப்பையு மீந்து
பவளவிதழ் சேர் தன்வாயின்
பல்முத்தையுங் காட்டி நிற்பாள்.

பனைமரக் கட்சுவை யோடு—சின்னிப்
பாவைதரும் சுவை சேர்ந்து
வானின் சுவையமு தத்தை—இந்த
வையப் பதநீரும் மீறும்!

(16-ஆம் பக்கம் பார்க்க.)

கதம்பம்

நல்ல செய்தி!

இன்னும் இரண்டு மூன்று மாதத்துக்குள்ளாக ஜப்பானிலிருந்து சுமார் 8 கோடி கஜம் ஜவுளியும் 80 லக்ஷம் ராத்தல் நூலும் இந்தியாவுக்கு ஏற்றுமதியாகும்'' நல்ல சேதியல்லவா நமக்கு? ஆனால் நமது மில் முதலாளிகளுக்கு மட்டும் பேரிடியாகத்தானிருக்கும் இந்தச் செய்தி?

உபயோகமில்லாத மட்டரகத் துணிகளைத் தயாரித்துக்கொள்ளை இலாபம் அடிப்பதில் நிபுணர்கள் நமது மில் முதலாளிகள். துணிப்பஞ்சத்தை அதிகரிக்கச் செய்து, நீடிக்கச் செய்யவும் திட்டமிட்டவர்கள் என்றுகூட மில் முதலாளிகளைப் பற்றிக் குறை கூறுவதுண்டு.

யுத்தத்துக்கு முன் ஜப்பானின் போட்டி எவ்வளவு கடுமையாக இருந்தது என்பதை மில் முதலாளிகள் இப்பொழுது மறந்திருந்தாலும் ஞாபகப்படுத்த விரும்புகிறோம். இனி ஜப்பானின் போட்டியைச் சமாளிப்பது கடினம். ஏன்? அமெரிக்காவின் மேற்பார்வை, பராமரிப்பு. பணவசதி, பருத்தி இவைகள் ஒன்று கூடினால் போட்டி சாமான்யமாயிருக்குமா? 'சுதேசியை ஆதரியுங்கள்' என்ற கூச்சலும் பயனளிக்காது.

துணிப்பஞ்சம் நாட்டில் ஏற்பட்டுள்ளதாகச் சொல்லும் நிலைமையில் ஜப்பான் சரக்கு நமக்கு வரப்பிரசாதமேயாகும். நல்ல சரக்குகளைத் தயாரித்து நியாயமான விலைக்கு மக்களுக்குக்கிடைக்க இப்பொழுதே திட்டமிட வேண்டும் நமது மில் முதலாளிகள்.

''அன்னிய நாட்டுச் சரக்கு நமக்கெதற்கு? மில்கள் இங்கே சீக்கிரம் விஸ்தரிக்கப்படப் போகின்றன. அவசியமானால் நூல் மட்டும் தாற்காலிகமாகத் தருவித்துக்கொள்வோம்'' —இவ்விதம் ஒரு பம்பாய் பத்திரிகை இந்திய மில் முதலாளிகளுக்குப் பரிந்து எழுதுகின்றது.

''நூலும் வேண்டும், ஜவுளியும் வேண்டும். எங்கிருந்து வந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை நமக்கு!'' இதுவே இப்போது பரவியுள்ள பொதுஜன அபிப்பிராயம்!

பகல் கொள்ளை!

போகிற போக்கில் போரில் நெருப்பை வைத்துவிட்டுப் போகும் போக்கிலியின் கதையாக, பிரிட்டிஷ் சர்க்காரின் நடவடிக்கைகள் காணப்படுகின்றன!

படேல் அவர்கள் கூறுவதுபோல் 'அதிகாரத்தையும் உபயோகிக்காமல் நடுநிலைமை வகித்து நாட்டில் குழப்பத்தை அதிகரிக்கச் செய்யும்' பிரிட்டிஷ் அதிகாரிகளின் மாயஜாலக் கொள்கையைக் குறிப்பிடவில்லை இங்கு!

இந்தியாவுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஏராளமான கடன் தொகையை ஏமாற்றிவிடச் சூழ்ச்சி நடப்பதையும் குறிப்பிடவில்லை!

வியாபார விசேஷ சலுகைகள் பெறத் திட்டமிடுவதைப் பற்றியும் நாம் இப்பொழுது கவலை கொள்ளவில்லை!

கொள்ளைகள் போதாவென்று, பகல் கொள்ளை ரீதியில் பிரிட்டிஷ் இந்திய சர்வீஸ்காரர்களுக்கு வறண்டுள்ள இந்தியாவிலிருந்து சுரண்டியாவது எடுத்துக் கொடுக்கத் தீர்மானித்ததுதான்!

பிரிட்டிஷ் இந்தியாவில் கைநிறையக் கொழுத்த சம்பளம் வாங்கும் அதிகாரிகளுக்கு அபார கருணை காட்டப் பிரிட்டன் முனைந்துள்ளது. இந்தியப் பிரதிநிதிகளைக் கலக்காமல் அதற்கொரு திட்டம். நஷ்ட ஈடு என்ற நாகரிகப் பெயர் அதற்கு.

திட்டமென்ன? ''அதிகார மாற்றத்தின் விளைவாகப் பதவியை இழப்பவர்களுக்கும் ராஜிநாமா செய்பவர்களுக்கும் சன்மானம்! முந்தினவருக்கு நஷ்ட ஈடு, பிந்தினவருக்கு விகிதாசாரப் பென்ஷன்! நஷ்ட ஈடு, பென்ஷன்! இவைகள்கிடைக்கச் செய்யவேண்டியது பிரிட்டனின் மகத்தான பொறுப்பு!''

இதைத் திட்டமென்று கூறுவதைவிட ஒரு தலைப்பட்சத் தீர்ப்பு என்றே கூறலாம்.

இந்த நஷ்டஈடு பிரச்னை கொஞ்சகாலமாகவே விவாதத்திலிருந்தது. இந்தி

யாவின் தலையில் இந்தப் பெரும்பாரத்தைச் சுமத்துவதை இந்தியத் தலைவர்கள் கண்டித்தார்கள். ஐக்யமாகாண இந்திய சிவில் சர்விஸ் சங்கத்தலைவர் நீதிபதி மெரிடித் ஒரு வெள்ளையராக இருந்தாலும் பெருந்தன்மை பொருந்திய நேர்மையான முறையில் நஷ்டஈட்டுச் சலுகை கோரும் அதிகாரவர்க்கக்கும்பலை அழுத்தமாய்க்கண்டித்தார். உத்தியோககாலத்தை அனுசரித்து வீதாசாரப் பென்ஷன் தருவதே போதிய நஷ்டஈடாகும் என்று பகிரங்க அறிக்கையும் விட்டார். இது சம்பந்தமான பிரிட்டனின் அறிக்கையில் இன்னும் சில முக்கியப் பகுதிகளைக் கவனியுங்கள்:

(1) ராஜிநாமா செய்பவர்களுக்கு விகிதாசாரப் பென்ஷன். வேலை வேண்டாமென்று போகிறவர்களுக்கு வலுவில் இந்தச் சலுகை எதற்கு? இந்தியத் தலைவர்களின் கீழ் உழைக்க மனமில்லாமல் பாதியில் வேலையைவிட்டு விலகுபவர்களே நியாயமாகக் கவனித்தால் சர்க்காருக்கு நஷ்டஈடு செலுத்த வேண்டும். திமிர்பிடித்த பேர்வழிகள்! 'கொழுக்கட்டை தின்ற குரங்கிற்கு குறுணிமோர் தட்சிணை' என்ற கதையாக அல்லவோ இருக்கின்றது.

(2) பென்ஷனே, நஷ்ட ஈடோ கிடைக்கச் செய்வது பிரிட்டனின் மகத்தான பொறுப்பு!

இதற்கெல்லாம் பணம் யார் அழுவது?

(3) பணம் எங்கிருந்து வருவது என்பது இனிமேல் தீர்மானிக்கப்படும்! அதிகாரமாற்றம் செய்வதற்குள் பகல் கொள்ளையாக இந்தியாவிலிருந்து அகப்பட்டதையெல்லாம் சுரண்டிவிடப் பிரிட்டன் 'பிளான்' போட்டுள்ளது போலும்!

அப்பாவிகளின் கூச்சல்

பொறுமைக்கு உதாரணமாகப் பூமாதேவியைக் கூறுவார்கள். உண்மையில் பொறுமையின் சின்னமாக, சிகரமாக விளங்குபவர்கள் நமது ஆரம்ப ஆசிரியர்கள்! அப்பாவிகள் என்றால் அவர்களைச் சொல்ல வேண்டும். இலஞ்ச மோகினியால் வசப்படுத்த முடியாத ஆத்மாக்கள் ஆரம்ப ஆசிரியர்கள். வறுமையின் இருப்பிடம் அவர்களே. குழந்தை குட்டிகளை வஞ்சனையில்லாமல் பெற்று, சம்சார சாகரத்திலிருந்து எப்படியோ கரை சேர்ப்பவர்கள் ஆரம்ப ஆசிரியர்கள்; அபூர்வசிருஷ்டிகள்!

இப்படிப்பட்ட அபூர்வ குணம் வாய்ந்த ஆரம்ப ஆசிரியர்களும் பொறுமை யிழந்து கூச்சல் போடத் தொடங்கி விட்டது ஆச்சரியமே! எல்லாம் வயிற்றுக்கவலையினால்தான்.

வெறும் கூச்சல் அல்ல. கொஞ்சம் பயமுறுத்தலும் கலந்த கூச்சல்! ஜுன்மீ 25உக்குள் தங்கள் கோரிக்கைகள் கவனிக்கப்படாவிடில் வேலை நிறுத்தம் செய்யவும் துணிவோம் என்று பிரகடனம் செய்துவிட்டார்கள். சில ஆந்திரவாடுகள் 'உண்ணாவிரதமும் தொடங்குவோம்' என்றும் கூறிவிட்டார்கள்.

இந்த அப்பாவிகளின் கோரிக்கைகள் தான் என்ன?

(1) குறைந்த பட்சம் ரூ. 50 சம்பளமும் பஞ்சப்படி ரூ. 16-ம் கிடைக்க வேண்டும்.

(2) சம்பளம் நிர்ணயப்பதில் சர்க்கார் நிர்வாகத்திலுள்ள பள்ளிகளில் நிர்ணயக்கப்படும் ஊதியமே ஸ்தலஸ்தாபன நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிகளிலும், உதவி பெறும் பள்ளிகளிலும் வழங்கப்பட வேண்டும், சர்க்கார் பள்ளிகளில் ரூ. 25-ம் இதர பள்ளிகளில் ரூ. 20-ம் அதற்குக் குறைவாகவும் இருத்தல் அநீதி.

நியாயமான கோரிக்கைகள் என்றே தோன்றுகின்றன. நாற்காலியில் படுத்துத் தூங்கும் குமாஸ்தாக்களைவிட ஆசிரியர்கள் மட்டரகப் பேர்வழிகளல்ல; பியூன்கள், தோட்டிகள் இவர்களைவிடக் கேவலமானவர்களல்ல; போலீஸ்காரன், தபால்காரன் இவர்களது தொழில்களைவிட ஆசிரியர்களது தொழில் இழிவானதல்ல. மற்றவர்களுக்குக் கட்டுப்பாடாகக் கூச்சல் போட்டு, ஆர்ப்பாட்டம்செய்து அமர்க்களம் செய்ய வசதியும் சக்தியுமிருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்கள் அப்பாவிகள்! அவர்களது குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டியதே அரசாங்கத்தின் கடமை!

சக்தியில்லை!

"இந்தக் கடன் சுமை மிகப்பெரிது; கிரமமில்லாதது; அநியாயமானது. இதைத் தாங்கக்கூடிய சக்தி எங்களுக்கு இல்லை!"

ஏழை விவசாயிகளின் ஒப்பாரியல்ல. தொழிலாளி மக்களின் அழுகுரல் அல்ல. ஒரு பெரிய வல்லரசின் கீலித்தனம். பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தின் கைவிரிப்பு. பணமாகவும், பவுனாகவும், சாமான்களாகவும் மற்ற நாடுகளிடமிருந்து வாங்கி ஏப்பமிட்டுவிட்டுப் பிறகு, பட்டகடனை மறுப்பதற்குச் சூழ்ச்சி!

பிரிட்டிஷ் நிதிமந்திரி டாக்டர்டால்டன் சமீபத்தில் முகாரிராகத்தில் மேலே சொல்லியபடி 'பிச்சுத்தள்ளிவிட்டார்! சரளமான பல்லவி: "நேசக்கட்சி வெற்றி பெறச் செய்ததற்காகப் பிரிட்டனுக்குக் கைமேல் கிடைத்தபலன் 'பிரும்மாண்டமான கடன் பொறுப்புத்தான்"!

அனுபல்லவி:—"விரைவில் இவற்றில் கணிசமான பகுதி குறைக்கப்பட்டாக வேண்டும்".

சரணம்:—"இதை எங்களால் தாங்கச் சக்தியில்லை"! ஆகவே இந்தியாவுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கடன்களுக்காக இலேசாக்வாவது நாமத்தைக் குழைத்துத் தீட்ட, சதி ஏற்பாடாகியுள்ளது என்பதில் ஐயமில்லை.

இந்த ஒப்பாரி இப்படியிருக்க, மற்றொரு பக்கம் பிரிட்டிஷ்பத்திரிகைகள் மூலமாக மிரட்டல்கள் வேறு. "எகிப்து, இந்தியா போன்ற நாடுகள் அன்னியர்கள் வசமாகாமல் காப்பாற்றப்பட்டன. ஜப்பான் இந்தியாவை விழுங்கியிருந்தால்? மார்ஷல் ரோமல் எகிப்தை ஆக்ரமித்திருந்தால்? ஆகவே நாம் யாதொருகடனும் திருப்பிக் கொடுக்க நியாயமில்லை. கேட்கவும் யாருக்கும் பாத்தியமில்லை!"

இந்தியாவில் நமக்குள் எவ்வளவோ பூசல்கள் இருந்தாலும் பிரிட்டன் கொடுக்க வேண்டிய கடனைப் பைசா பாக்கியில்லாமல் வசூலித்து விடவேண்டும் என்ற விஷயத்தில் ஒற்றுமை மனப்பான்மை காணப்படுவது நல்ல சகுனம்.

பிரிட்டன் பட்டுள்ளகடன்கள் விஷயமாக சமரசம்பேசலண்டனில் கடன்காரர்களின் மகாநாடு நடக்க இருக்கின்றது. பிரதிநிதிகள் வருவதற்கு முன்னாலேயே டால்டன் துரை அபாயச் சங்கை ஊதிவிட்டார். "ஸரி. கடன்காரர்களாகிய நீங்கள் வழிக்கு வராவிட்டால் எப்படித்தான் வசூலிப்பீர்கள்? என்ன செய்யத்தான் முடியும்"!—இப்படியாக வெடிகுண்டை வீசிவிட்டார்.

பிரிட்டனின் கடன் நிலைமை யாது? இந்தியாவுக்குக் கொடுக்கப்படவேண்டியது 1,200,000,000 பவுன். எகிப்துக்கு 440,000,000 பவுன். அயர்லாந்துக்கு 250,000,000 பவுன். ஆஸ்திரேலியாவுக்கு 170,000,000 பவுன். நார்வே தேசத்துக்கு 80,000,000 பவுன். பிரேஸிலுக்கு 65,000,000 பவுன்.

தொகைபிரும்மாண்டமாகநம்மைமலைக்க வைக்கலாம். ஆனால் பிரிட்டனின் ஆஸ்தி, ஜெர்மனி போன்ற நாடுகளிலிருந்து சுரண்டப்படும் பொருள்கள், இந்தியா போன்ற அடிமை நாடுகளில் பிரிட்டிஷார் நடத்தும் வியாபாரத்தின் மதிப்பு, தொழிற்சாலைகளின் நிதிகள்-இவைகளைக் கணக்கிட்டால் நமக்குப் பிரிட்டனின் கடன் சுமை மலைப்பாகத் தோன்றாது. பிரசாரப் பித்தலாட்டமே மலைப்பேற்படுவதற்குக் காரணம். ஒரு விந்தை பாருங்கள். இந்தியா, எகிப்து இந்த இரு நாடுகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கடன்களைக் குறைக்கவே பிரிட்டன் கவலை கொண்டுள்ளது.

லண்டன் மகாநாட்டில் கடன்களைக் குறைக்கும் விஷயம் தவிர மற்றொரு முக்ய விஷயமும் கவனிக்கப்படுமாம். "கடன் சுமை குறைக்கப்பட்டபிறகு உடனடியாக இந்தியாபோன்ற நாடுகள் தீர்மானிக்கப்பட்ட கடன் தொகையில் எந்த அளவு உடனடியாகப் பெறலாம், அப்படிப் பெறுவதற்கும் ஒரு கால நிர்ணயம் செய்ய வேண்டியது"

ஆகவே லண்டன் மகாநாட்டில் நமது பிரதிநிதிகள் 'கரடியாகக் கத்தினாலும்' பலன் காணமுடியாது என்பது வெளியாகி விட்டது.

இந்தக் குழப்பம் போதாதென்று ஒரு பத்திரிகை "இதுவரை பிரிட்டிஷ் ஆட்சியினால் இந்தியா அடைந்துள்ள நன்மைகள், இலாபங்கள் இவைகளையும் பரிசிலனை செய்து கணக்கிட்டு, அதற்கு ஒரு தொகை ஏன் நாம் கேட்கக்கூடாது?" என்று வேறு சீறுகிறது.

நாமம் தான் முடிவா? அல்லது இன்சால் வெண்டு பேர்வழியின் சொத்திலிருந்து கிடைக்கும் சொல்ப வீதாசாரமா? என்பதைக்கூடத் திட்டமாகக்கூறமுடியவில்லை. கடனை மோசம் செய்யத் திட்டமிடப்படுகிறது என்பதையே இப்பொழுது கூறமுடியும்!

தேசபக்தரின் தீரச்செயல்

இந்தியா விடுதலை அடையும் தறுவாயி லிருக்கிறது. இத் தருணத்தில், நாட்டில் குழப்பங்களும், கலவரங்களும், முட்டுக்கட்டைகளும் ஏற்படுவது சகஜம். ஆனால் சில தீர்க்கதரிசிகள், தேசீய உணர்ச்சி படைத்தவர்கள் இதற்கு இடங்கொடாமல் நாட்டின் நலனையே பெரிதாக எண்ணி நடந்து வருகிறார்கள்.

சுதேச சமஸ்தானங்களில் பல வெவ் வேறு வகையில் இத் தருணத்தில் நடித்து வருகின்றன. திருவாங்கூர் போன்ற சமஸ்தானங்கள் வருங்கால சுதந்தர இந்தியாவுடன் ஐக்கியப்பட்டு வாழாமல், சுயேச்சை நாடாக இருக்க விரும்புகிறது. இதைப் போன்ற பல பிரபல சமஸ் தானங்களும் மதில்மேல் பூனைபோல் நடித்து வருகின்றன. ஆனால் சில சமஸ் தானங்கள் கால சக்கரத்தின் வேகத்தை உணர்ந்து, மக்களின் மனோரதத்திற்கு உட்பட்டு, தேசிய உணர்ச்சி மேலீட் டால் இந்திய யூனியனில் இப்பொழுதே கலந்து கொண்டு இந்தியா விடுதலை அடைவதில் தாங்களும் கலந்து கொள்ள ஆசைப்படுகின்றன. ஆகவே சமஸ்தானங் களிடையே இரண்டு கட்சி. இதற்கு அடிப்படை மன்னர்களின் மனப்பான் மையும், அவர்களை ஆட்டிவைக்கும் திவான்களின் சாகசக்கியமே. ஸர். ஸி. பி. ராமஸ்வாமிஐயர் ஒருபுறம், ஸர். பி. என். மிட்டர், ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரி யார் மற்றொரு புறம். இவர்களிடையே எவ்வளவு வித்யாசம்! ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தீர்க்கதரிசி. நீண்ட காலம் பரோடா திவானாக இருந்து இன்று ஜெய்பூர் திவானாக இருக்கிறார். இந்திய அரசியல் நிர்ணய சபையில் உடனே ஜெய்பூர் கலந்து கொள்ள வேண்டும் என்று சொன்னார் திவான். மன்னர் கேட்கவில்லை. பதிலுக்குத் திவான் கொடுத்தது ராஜீநாமா. மன்னர் மலைத் தார். தம்முடைய தவறை உணர்ந்து, திவான் இஷ்டப்படியே நடக்கத் தீர் மானித்தார். ஜெய்பூரைப் பின்பற்றிப் பல சமஸ்தானங்கள் இன்று அரசியல் நிர் ணய சபையில் கலந்து கொள்ள முன் வந்து விட்டன. இத் திரச் செயலினால் ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தாம் பெரிய தேசபக்தர் என்பதை உணர்த்தி விட்டார்.

மன்னர்களுக்குச் சரிவர புத்திமதி, கூறினால், அவர்களுக்குள்ள அப வாதம் நீங்குவது திண்ணம். ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தமிழர். அவர் செயல் தமிழ்நாட்டிற்குப் பெரும் புகழைத் தேடித் தந்திருக் கிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறோம்.

(11-ஆம் பக்கம் தொடர்ச்சி)

பின் னேரரைப்படி கேட்பேன்—சின்னி
மின்போல வார்த்துக் கொடுப்பாள்;
இன்முகத்தாள் முகம் பார்த்தே—நான்
இந்தப் பதநீரும் தீர்ப்பேன்.

★ ★ ★

பங்குனித் திங்களி னீருய்
பதநீ ரிறக்கலும் நின்று
செங்கதிர் ஓச்சிடும் செங்கோல்
சித்திரை மாதமு மாச்சு.

நாள்தோறும் காலையில் வந்து
நல்வாழ்வின் ரசத்தினை வார்த்த
வாள்விழி சின்னியைக் காணேம்-இந்த
வையத்தில் நானினி வாழேன்!



பென்ஸிலின் என்னும் புரட்சிகரமான சஞ்சீவியைக் கண்டு பிடித்தவர் இவர்தான். இவர் ஸ்காட்லாண்ட் தேசத்திலுதித்த புரொபஸர் அலெக்ஸாண்டர் பிளெமிங்.

தம்முடைய விஞ்ஞான ஆராய்ச்சிச்சாலையில் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது, ஒரு வகையான செயற்கைப் பொருள் பறந்து திறந்த ஜன்னலுக்கப்பால் சென்று கிருமிகள் படிந்துள்ள ஒரு தட்டை வந்தடைந்தது. கிருமிகள் உடனே நாசமாயின. இவ்வகையில் பென்ஸிலின் கண்டு பிடிக்கப்பட்டது. இது நடந்து 14-வருடங்கள் ஆய்விட்டன. இன்றுதான் மருந்து ரூபத்தில் அது மக்களுக்குப் பேருதவி அளித்து வருகிறது.

புரொபஸர் பிளெமிங் தம்முடைய ஆராய்ச்சிச்சாலையில் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது எடுத்த காட்சி.

பங்கி காலனியில் தேசிய வாரத்தில் காந்திஜியின் தலைமையில் சர்க்காப் போட்டி நடக்கிறது.





அகில இந்திய சமஸ்தானப் பிரஜைகள் மஹாநாட்டில் பண்டித நேரு சொற்பொழிவு நிகழ்த்துகிறார்.

"அருமறை சோரு மறிவிலான்"

'சாரி'

பழைய மசூதிகளின் மத்தியிலுள்ள வட்டமான கோபுரங்களில் புறாக்கள் குடியிருக்க வென்றே சிறிய துவாரங்கள் அனேகம் அமைக்கப் பட்டிருக்கின்றனவல்லவா? அதே போல எங்கள் வீட்டுக் கூடத்தில் 'எடுத்துக்கட்டு' என்று வழங்கும் தூக்கிய கட்டிடத்தில் ஐந்து வரிசை எழுதகங்கள் உண்டு. இவைகளைக் குருவிகள் உட்கார்ந்து இளைப்பாறுவதற்கென்றே பிரத்யேகமாக அமைத்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன்.

நடுப்பகலில் வெயில் கடுமையாய்க் காயும் சமயம், அந்த எடுத்துக்கட்டுக் கூடத்தில் படுத்து, சிரமபரிஹாரம் செய்து கொள்வது என் வழக்கம்.

அந்த இடம் குளிர்ச்சியாக இருந்ததல்லாமல், மேலே அமைத்துள்ள ஜன்னல்களின் மூலம் லேசான காற்றும் வீசும். இவ்விதமான சேர்க்கை அங்கேயிருந்ததால், என்னைப் போன்ற சோம்பேறிகளுக்கு நித்திரை வருவதற்குக் கேட்பானேன்? தானாக வந்து கண்ணைச் சுற்றும்!

ஒரு நாள் பகல் வழக்கம்போல அங்கே படுத்து, தினசரிப் பத்திரிகையைப் படித்த வண்ண மிருந்தேன். அப்படி யென்றால், படுத்த வாக்கில், அதை என் மார்பில் சாய்த்துப் பிடித்துக் கொண்டு, வாசிக்க முயற்சி பண்ணினேன்!

பத்திரிகையோ அகல நீளத்தில் பெரிது. கையை உதைவு கொடுக்காமல் அந்தரத்தில் தூக்கித் தாள்களைப் பிடிப்பது அசாத்தியம். அதற்காகக் குறுக்கில் சிறிய அளவில் மடிப்போ மென்றால், படுத்த வண்ணம் அவ்விதம் மடிப்பதுகூடக் கஷ்டமாக இருந்தது. ஒவ்வொரு தாளையும், எழுந்திருந்து மடித்துக்கொண்டு, மீண்டும் படுத்துக் கொள்ளவும் சோம்பல்!

இவ்விதமாக அவஸ்தைப் படும்போது, தற்செயலாக அண்ணாந்து பார்க்க நேரிட்டது. எழுதகத்தில் வரிசையாக ஏழெட்டுக் குருவிகள் அமர்ந்திருந்தன. ஆனால் என்ன ஆச்சரியம்! வழக்கம்போல் அவைகள் 'கிச்சு,கிச்'சென்று ஓயாமல் கத்தவேயில்லை. என்ன காரணம்?

கையில் இருந்த பத்திரிகைத் தாள்களை மடக்கிச் சத்தம் செய்தேன்; வாயினால் 'சூ' வென்று கூவினேன். குருவிகள் மட்டும் அசையவே யில்லை.

எழுந்திருந்து, மூலையில் சார்த்தி யிருந்த துணி உலர்த்தும் கோலை எடுத்து இவைகளை விரட்டிப் பார்த்தாலென்ன? உடனே இவைகள் சத்தமிடும், அல்லது கூடத்தைச் சுற்றி வட்டமாகப் பறக்க ஆரம்பித்து விடும், அல்லவா?

இதுவே நல்ல யோசனை யென்று எழுந்திருந்தேன். என்ன விந்தை! துணி உலர்த்தும் கோல் தானாக நழுவி மூலையிலிருந்து என் பக்கத்திற்கு வந்து கிடந்தது. என் சிரமத்தைப் பார்த்து மனமிரங்கியே என்னிடம் வந்திருக்க வேண்டும்.

தலையை மட்டும் உயர்த்திய வண்ணம் கோலைக் கையில் எடுத்து, மேலே தூக்கிக் குருவிகள் உட்கார்ந்திருந்த எழுதகத்தில் லேசாகத் தட்டினேன்.

உடனே ஒரு ஆண் குருவி 'விர்' என்று பறந்து வந்து என் மார்பில் அமர்ந்தது. அதன் முதுகில் மெதுவாக வருடினேன். அது உடம்பைச் சிலிர்த்தது. பிறகு "என்ன வேண்டுமப்பா? ஏன் இப்படி விசனமாக இருக்கிறாய்?" என்று அன்பாகக் கேட்டேன்.

அதிசயத்திலும் அதிசயம்! குருவி தன் கண்ணைத் துடைத்துக் கொண்டு, தன்னுடன் என்னை வரச்சொல்லிக் கூப்பிட்டது. அதன் பேச்சென்னவோ 'கீச்சு, கீச்சு' பாஷையில்தான் இருந்த போதிலும், எனக்கு எவ்விதமோ அது புரிந்தது, பாருங்கள்.

உடனே எழுந்து குருவியைப் பின்பற்றினேன்; அதுவும் தன் இரு கால்களால் நடந்தே சென்றது. தெருவில் நாங்கள் இறங்கியதும், "குருவி இப்பொழுது பறக்க ஆரம்பித்து விட்டால் அதைப் பின் தொடர நம்மால் முடியாதே" என்று எனக்குப்பயம் பிடித்துக் கொண்டது.

ஆனால் குருவி அப்படி யெல்லாம் ஒன்றும் செய்யவில்லை. பழையபடி அதே தத்து

நடையில், ஒய்யாரமாக, ஜனங்களைத் திரும்பியும் பாராமல், ஊருக்கு வெளியில் சென்று கொண்டிருந்தது.

நல்ல வெயில் காய்ந்த போதிலும், வீதியில் செல்லும் போது, எனக்கு அது உறைக்கவில்லை. இதை விட வேடிக்கை, ஜனங்களும், எங்களைக் கவனியாமல் தங்கள் பாட்டைப் பார்த்துக் கொண்டே சென்றதுதான்.

என்ன இது? நான் இன்னும் தூங்குகிறேனா, அல்லது பகற்கனவா?

கையில் வெடுக் கென்று கிள்ளிக் கொண்டேன். என்ன சொல்வது? அந்த இடத்தில் இரத்தம்கூடக் கசிந்தது. அப்படியானால் நான் விழிப்பில்தானே இருக்கிறேன்?

எதற்கும் குருவியைப் பின்பற்றிச் செல்வது உத்தமமென்று எண்ணி வேகமாய் நடந்தேன். இதற்குள் ஊருக்கு வெளியில் வந்துவிட்டோம்.

அங்கிருந்த ஒரு மாந்தோப்பில், அழகான சிறிய குளமும், பர்ண சாலையும் தென்பட்டன. வெளியில் மான், மயில், கன்றுக் குட்டி இவைகள் விளையாடிக்கொண்டிருந்தன. பர்ணசாலையின்மீது படர்ந்திருந்த கொடிகளில் மணம் மிகுந்த புஷ்பங்கள் குலுங்கின. அவற்றைச் சுற்றி வண்டுகளின் ரீங்காரம் காதைத் துளைத்தது.

குருவி அந்தக் குடிசையின் கதவருகில் என்னை விட்டு விட்டுப் பறந்து சென்றது. எனக்கு ஒரு நிமிஷம் ஒன்றும் புரியவில்லை. உள்ளே நுழைவோமா, வேண்டாமா என்று யோசித்தேன்.

அச்சமயம் குடிசையின் கதவு ஒருவித சத்தமுமில்லாமல் தானுகத் திறந்துநின்றது. அங்கே நான் கண்ட அற்புதக் காட்சியை என்னவென்று சொல்லுவேன். திகைப் பூண்டை மிதித்தவர்போல் நின்றேன்.

மத்தியில் ஒரு மான்தோல் பீடம். அதன் பேரில் பத்மாசனத்தில் அமர்ந்த வண்ணம் ஒரு திவ்விய புருஷர் வீற்றிருந்தார். அவருடைய வயது ஆயிரம் வருஷங்களோ அல்லது யுகங்களோ இருக்கவேண்டும்; முகத்தில் பால் வடியும் யௌவனமும் தேஜஸும், சாந்தியும் நிரம்பியிருந்தன.

அவரது முக கமலத்தைச் சுற்றிலும் ஒரு அடி வட்டத்திற்கு ஒரே ஒளி. அதை உற்று நோக்கும்பொழுது கண்ணிற்குக் கூச்சம் உண்டாயிற்று.

தங்க வர்ணமேனி. தூய வெளுப்பான பட்டு வஸ்திரத்தை இடையில் தரித்திருந்தார்.

இந்த ஜோதி புருஷனைக் கண்டதும், என் மனத்தில் அன்பு, ஆனந்தம், துயரம், பயம், சொல்ல இயலாத இன்ப வேதனை—இவையெல்லாம் ஏக காலத்தில் உண்டாயின. உடலெல்லாம் நடுங்கிற்று; வியர்வையினுல் நனைந்தது.

என் சுய பிரக்ஞையே இல்லாமல், விரைவாக நடந்து அவரது திருப்பாதங்களில் என் முகத்தைப் புதைத்து, விம்மி அழுதேன்.

"என் அன்பே, ஆருயிரே, கண்ணே, மணியே, கண்மணியே, நாதனே, சாக்ஷாத் கண்ணனே, மணிவண்ணனே, உன்னையே யுக யுகமாகத் தேடியலைந்து அலுத்தேன். இன்று கண்டேன்; இனிக்கணமும் பிரியேன். என்னை ஆட்கொண்டு ஆதரிக்க வேணும்" என்று வாய் விட்டுப் பிதற்றிக் கண்ணீர் சொரிந்தேன்.

அவரது திருப்பாதங்களின் ஸ்பர்சத்தில் எவ்வளவு இன்பம்! உடலில் மின்சார விசை பாய்வது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. கண்ணீர் ஆருகப் பெருகி அவர் பாதங்களை நனைத்தது.

மெதுவாகத் தலை நிமிர்ந்து அவர் திருமுகத்தை நோக்கிய பொழுது கருணையும் அன்பும் தேங்கிய பார்வையினுல் என் உள்ளத்தையே உருக்கினர். சற்றே புன்னகை செய்து சிரஸை லேசாக அசக்கியது போலவும் தோன்றிற்று.

அதே சமயம் என் கேசத்தைப்பற்றி யாரோ இழுப்பதும் தெரிந்தது. திரும்பினேன்; அதே பொல்லாத குருவிதான்! என்னை வெளியே வந்துவிடும்படி மன்ருடியது.

தவறுதலாக என்னை இந்த இடத்திற்கு அழைத்து வந்து விட்டதாம். நான் போக வேண்டியது, அடுத்த காட்டிலுள்ள பர்ண சாலையாம். இதையெல்லாம் குருவி தன் பாஷையில் தெரிவித்தது.

எனக்கு ஒன்றும் புரியவில்லை, எழுந்து நின்றேன். கால்கள் கீழே வேரோடிப்போன மாதிரி இருந்தது. கண்ணில் நீர் வற்ருமல் ஊற்றெடுத்துப் பெருகியது. என் ஆவியைக் கொள்ளை கொண்ட இந்தத் தேவஸ்வரூபியை நான் எங்ஙனம் பிரிவேன்?

அதே க்ஷணத்தில் என் மனத்துள் ஒரு சாந்தி நிலவிற்று. அம்மஹா புருஷரோ

தம் கண்களால் என்னை நோக்கிய ஒரு வினாடியில், யுக யுகமாய் நான் தேடியலைந்த விஷயங்களின் பொருளை எல்லாம் என்னுள் தெளியவைத்தார்.

பின்னும், காலதாமதமின்றி இச்சென்மத்தில் எனக்கு ஏற்பட்ட ஒரு சிறிய கடனை இயற்றித் திரும்பினால், தம்முடன் ஐக்கியமாவது நிச்சயம் என்பதைத் தம் பார்வையின் மூலம் எனக்கு அறிவுறுத்தினார்.

குருவியும், ஏதோ முன்பு செய்த வினைப் பயனாகப் புவியில் பன்முறை பிறந்து அல்லல்பட்டதென்றும், என்னைச் சரியான பாதையில் அழைத்துச் சென்றால் சீக்கிரத்தில் விமோசனம் கிட்டுமென்றும், அவர் திருவாய் மலர்ந்ததாக என் மனதில் பட்டது.

இனி என்ன செய்வது? மீண்டும் ஒரு முறை அவர் பாதத்தில் முடிதொட்டு வணங்கி, விரைவில் அவருடன் ஐக்கியமாகும் வரத்தை எனக்கருளப் பிரார்த்தித்தேன். 'காத்திருப்பேன்' என்று அன்பொழுகக்,கை அமர்த்தினார்.

பர்ணசாலைக்கு வெளியில் வந்தேன். மனம் முற்றிலும் வறண்ட மாதிரியிருந்தது. என் காலில் நடக்கவும் சக்தியில்லை. ஆயினும் மெதுவாகக் குருவியைப் பின்தொடர்ந்தேன்.

மீண்டும் காட்டுப்பாதைதான். நெடுந்தூரம் நடந்த பிறகு குருவி பறந்து சென்று ஒரு மரக்கிளையில் உட்கார்ந்து கொண்டது. என்னையும் அப்பொழுதே மறந்து போனது போல், சிறகை அடித்துக் கொண்டு பறந்து செல்ல ஆரம்பித்தது.

“சரி, இனி நமக்கு அதோகதிதான். எப்படி அந்த மஹாபுருஷனைத் திரும்பி அடைவது? என்று காண்பது? இந்த ஏழையினால் ஆகவேண்டிய கருமமும் உலகில் உளதோ? அவ்விதம் இருந்தால் அத் தேவ புருஷர் என்னிடம் அதைப்பற்றிய விவரங்களைச் சொல்லியிருக்கக் கூடாதா? காற்றைப்போல் சுபாவமுள்ள இந்தக் குருவியிடமா அதை ஒப்புவிக்க வேண்டும்? அதுவோ என்னை நடுக்காட்டில் நிறுத்தி விட்டுப் பறந்து சென்றதே! என்ன செய்வது?” என்றெல்லாம் நினைத்து ஏங்க ஆரம்பித்தேன்.

அச்சமயம் அந்தப் பாதையில் திடீரென்று எங்கிருந்தோ ஒரு முனிவர் தோன்றினார். ஒரு க்ஷணம் தாமதித்துப் பிறகு எனக்கு முன்னால் வழி காட்டியதுபோல் நடக்கத் தொடங்கினார். இதுவும் என் நல்லதிர்ஷ்டமென்று சந்தோஷித்து அவரைப் பின்பற்றினேன்.

நடந்து செல்லும் போதே “எவ்வளவு அழகிய இடங்கள் நமது ஊருக்குச் சமீபம் உள்ளன. இது காறும் இக்காட்சிகளைக் கண்டு நான் களிக்கவில்லையே. குருவியல்லவா என் கண்ணைத் திறந்து விட்டது? இனி, பிரதி தினமும் இங்கு வந்து ஒரு முறை இம்மகா புருஷரைத் தரிசித்துப் போவேன்” என்றெல்லாம் எண்ணமிட்டேன்.

சற்று நேரத்தில் மற்றொரு பர்ணசாலையின் அருகில் வந்து சேர்ந்தோம். முனிவர் உள் நுழைந்து, தம் கைக் கமண்டலத்தை ஒரு குச்சியில் மாட்டி விட்டுக் கீழே விரித்திருந்த புலித்தோலில் அமர்ந்து கொண்டார்.

நானும் அவர் அருகில் போய்க் கீழே உட்கார்ந்து, என் வரலாற்றை அவருக்கு எடுத்துரைத்து எனக்கு வழிகாட்டும்படி வேண்டினேன்.

முனிவரது முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

“முதலில் நான் யாரென்பதைத் தெரிந்து கொண்டாயா?” என்று கேட்டார்.

அதே க்ஷணத்தில் அவர் யார் என்கிற உணர்ச்சி என் மனத்தில் உதித்தது.

“முனி சிரேஷ்டரே, தாம் அகத்தியர் அல்லவா?” என்றேன். என் வாயினின்று கிளம்பிய இச்சொற்கள் எனக்கே வியப்பையுண்டாக்கின.

“ஆம் குழந்தாய்! சுமார் ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு, உங்கள் மூதாதை ஒருவருக்கு ஈசனார் ஒரு வரமளித்தார்; சில காரணங்களினால் அது பூர்த்தியடையவில்லை. இன்று உன்னால் அது நிறைவேறும் காலம் கிட்டிவிட்டது...”

இவ்வாறு முனிவர் சொல்லுமுன்பே எனக்கு ஆனந்தமுண்டாயிற்று.

“சுவாமி, நான் என்ன செய்ய வேண்டுமென்பதைக் சீக்கிரம் சொல்லுங்கள். இன்றே அதைத் துவக்கி விடுவேன். ஏனிப்படி ஆத்திரப்படுகிறேனென்று நினைக்காதீர்கள். ஆனால் என் அன்பை, ஆருயிரை …………”

“தெரியும் தெரியும்; அவருடன் ஐக்கியமாகும் பொருட்டுக்கூட நீ இந்த விஷயத்தில் அவசரப்படக் கூடாது. ஏற்கனவே நான் சொன்ன பிரகாரம், உன் மூதாதை

காலத்தில் ஒரு கொடுங்கோல் மன்னன் இருந்தான். ரொம்பவும் கர்வங்கொண்டவன். தன் புகழைப் பாடி ஒரு நூல் இயற்றும்படி உன் முன்னோர்க்குக் கட்டளையிட்டான்.

"அவரோ தெய்வக்காதல் கொண்ட புலவர்; ஆகவே இதை மறுத்தார். அரசன் நம்மை நோக்கி, புலவரைப் பாடவைக்கும்படி வேண்டினான். அரசனும் வரப்பிரசாதி, புலவரும் கடவுளை நோக்கி இந்த அவமானத்தில் இருந்து தம்மைக் காப்பாற்றத் தவமிருந்தார். கடைசியில் அவர்பால் மனமிரங்கி, ஈசன் அரசனின் கனவில் தோன்றி அவனது கட்டளையை மாற்றி, அகஸ்தியர் பேரில் ஆயிரம் பாடல்கள் இயற்ற வேண்டுமென்று புலவரைக் கேட்கச் செய்தார்.

"புலவர் இதற்கு ஒத்துக்கொண்டார். ஆனால் அவருடைய ஆயுள் காலத்தில் அந்நூல் முடிவு பெறவில்லை. மனம் வருந்தித் தம் சந்ததியாருக்கு இந்தப் பொக்கிஷத்தை வைத்துவிட்டு உயிர் துறந்தார்.

"அதன் பின் உங்கள் மரபில் ஐந்து புலவர் தோன்றினார்கள், ஆறுவதாக நீயும்.........."

"சுவாமி, என்ன இது! நானா புலவன்?"

"ஆம் உன் சக்தியை இதுவரை நீ அறிந்தாயில்லை. ஏதோ கதைகளையும், நூல்களையும் எழுதிப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்கிறாய். அது மிகவும் தப்பிதம். இந்த உன் தலை முறையில், அதுவும் உன்னாலேயே, புராதன நூல் பூர்த்தி அடையும் சமயம் கிட்டிவிட்டது. பூர்த்தியானதும், உங்கள் குலத்தைப் பிடித்திருக்கும் ஒரு சாபமும் விலகும்; நீ ஈசன் பதம் பெறுவாய். ராஜனும் தன் குருவிப்பிறப்பை—இது அவனுக்கு ஏற்பட்ட சாபம்—துறந்து கடவுள் பாதம் சேருவான். நானும், இவ்வுலகில் எனக்கேற்பட்டுள்ள மற்றக் கர்மங்களில் கவனம் செலுத்துவேன்." என்றார்.

நான் ஆச்சர்யத்தினால் பிரமித்துப் போனேன். என்ன இது? நானாவது

தெய்வீக நூல் இயற்றவாவது? அந்தச்சக்தி எனக்கு எங்கிருந்து கிட்டும்? இதுவோ கடவுளின் ஆக்ஞை போலிருக்கிறதே, எப்படி மறுப்பது? குருவி, நல்ல காலத்திற்கு நம்மை இங்கே அழைத்து வரவில்லை.........

ஆனால் இந்நூல் பூர்த்தியடைந்தால் எவ்வளவு புகழ் எனக்குக் கிட்டும்? மேலும் என் ஆருயிர் நாதன் அந்தஜோதி புருஷனுடன் ஐக்கியமல்லவோ எனக்குக்கிடைக்கும்?

இவ்விதம் நான் எண்ணமிட்டது அகஸ்தியரின் மனத்திற்கு எட்டியிருக்க வேண்டும். புன்சிரிப்புடன் என்னை நோக்கி,

"நீ எண்ணுவதுபோல் காரியம் எளிதல்ல; வெளியில் புகழ் கிட்டவேண்டுமென்று நினைத்தால் நூல் முடிவடையாது. இதை நினைவில் வைத்துக்கொள். மேலும் நான் உபதேசிக்கும் ஒரு மஹாமந்திரத்தை மனதில் வாங்கி வீட்டை அடைந்ததும்..."

"சுவாமி என்ன மந்திரம் அது? சீக்கிரம் சொல்லும்."

"ஆத்திரக்காரருக்குப் புத்தி மட்டு. ஆகையால் அவசரப் படாதே! இறுமாப்புக் கொள்ளாதே. உன் வீட்டில் துணி உலர்த்த ஒரு கோல் உள்ளதல்லவா?"

"சுவாமி, ஆமாம். அதனால்தான் நாங்கள் குருவி......இல்லை இல்லை......ராஜா.........இல்லை......குருவி......இ......இ......"

"சரி, சரி புரிந்து கொண்டேன். அந்தக் கோல் உன் மூதாதைக்கு நான் அளித்தது. வெளிப்பார்வைக்குக் கோல் மாதிரி இருந்த போதிலும், உட்புறம் குடைந்து எடுத்துக் குழல் மாதிரி செய்திருக்கிறது. அதனுள்ளேதான், இதுகாறும் இயற்றிய நமது நூல் உள்ளது........."

"நிஜமாகவா? நான் ஓடிப்போய் எடுத்துப் பார்க்கிறேன்" என்று நகர ஆரம்பித்தேன்.

"அவசரப் படாதே, இன்னும் ஒரு முறை சொல்கிறேன் கேளு. அந்தக்கோலில் நூற் சுவடிகள் இருந்த போதிலும், அதைத் திறக்கும் விசை என்னிடம் உபதேசம் பெற்றவர்க்கே கிட்டும். உனக்கு அம் மந்திரத்தை உபதேசிக்கிறேன், வீடு சென்று கோலை எடுத்து மும்முறை மந்திரத்தை உச்சரித்து, அதன்மீது ஊதினால் உடனே திறக்கும். அதேசமயம் ஸரஸ்வதி கடாக்ஷம் பெற்று, உன் நாவிலிருந்து கடல் மடையே திறந்தது போல், பாடல்கள் வெளிப்படும், என் அருகில் வா. மந்திரத்தை உன் செவியில் மட்டும் ஜபிக்கிறேன்." என்று என்னை அருகில் அழைத்து அன்புடன் மும்முறை உபதேசித்தார்.

என்னுடலெல்லாம் புல்லரித்தது. கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகிற்று. அப்பொழுதே பாக்கள் இயற்றிடும் ஆற்றல் பெற்றது போன்ற உணர்ச்சியும் கொண்டேன்.

முனிவர் என்னை ஆசீர்வதித்தார். நான் அவர் பாதங்களில் பணிந்து, போய்வர உத்தரவு வேண்டினேன்.

"மந்திரத்தை நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள். ஒருவரிடமும் சொல்லாதே. இந்த எச்சரிக்கைக்கு மாறாக நீ நடந்து கொண்டால், இனி ஐந்து ஜன்மங்களைக் கடந்து மறு பிறப்பு எய்தி, நம்மிடம் வரவேண்டியதுதான்." என்றார்.

வணக்கத்துடன் அன்றோ இதை நான் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும்? என் இறுமாப்பே எனக்குச் சத்துருவாக வந்து நின்றது. முனிவர்பேரில் கோபங்கொண்டு,

"என்ன சுவாமி, நான் இப்படியும் ஒரு முட்டாள் என்று நீங்கள் எண்ணி விட்டீர்கள். இச்சிறிய மந்திரத்தை உபதேசித்து விட்டுப் பிரமாதப் படுத்துகிறீர்களே. நான் எவ்வளவு பாடல் இயற்றப் போகிறேன்; இந்த மந்திரத்தையா மறந்து விடுவேன்?" என்று படபடப்பாகப் பதில் சொன்னேன்.

என் வாயினின்று இவ்வார்த்தைகள் கிளம்பிய மறு க்ஷணமே என் குற்றத்தை உணர்ந்து, விசனித்தேன். முனிவரின் காலைப்பிடித்து மன்னிப்பு வேண்ட நினைக்குமுன் அவர் எழுந்தார்.

கோபாவேசத்தால் மேனி சிவந்தது. சிம்மகர்ஜனை போன்ற குரலில் "இவ்வளவு இறுமாப்பா உனக்கு? இந்தா பிடி சாபம். இந்தக்ஷணமே மந்திரத்தை மறப்பாய், இனி ஐந்து ஜன்மங்கள் எடுத்து, சாந்தியடையாமல் பூமியில் பரதவிப்பாய்!" என்று உறுமினார்.

''சுவாமி, சுவாமி, மன்னியுங்கள்,'' என்று கத்திய வண்ணம் ஓடினேன்· என்ன மாயம்! முனிவர் மறைந்து போனார்.

அதுமட்டுமல்லாமல் அங்கே காடுமில்லை, குடிசையுமில்லை, எங்கிருந்தோ வறண்ட காற்று வீசியது.

விழியின் மேல் ஒரு கல்லை வைத்தது போல் பாரமாக இருந்தது. சிரமத்துடன் கண்ணைத் திறந்தேன்.

வழக்கம் போல் என் வீட்டு எடுத்துக் கட்டுக் கூடத்தில் படுத்திருந்தேன். என்னைச் சுற்றிலும் தினசரிப் பத்திரிகையின் தாள்கள் சிதறிக் கிடந்தன; மூக்குக்கண்ணாடியும் நழுவிக் கீழே விழுந்து கிடந்தது.

மேலே எழுதகத்தில் குருவிகள் அமர்ந்து கூச்சல் போட்டுக் காதைத் துளைத்தன. இவைகளைக் கொன்று போட்டாலென்ன வென்று கோபம் மூண்டது!

விரைவாக எழுந்து கோலை எடுத்து விரட்டலாமென்று நினைக்கையில், பளிச் சென்று மனதில், சற்று முன்பு நான் சஞ்சரித்த உலகின் சாயை வீசிற்று.

ஆம், இதே கோல்தானே என் மூதாதைக்கு அகஸ்திய முனிவர் அளித்தது! ஆ! அந்த மந்திரம் என்ன? என்ன அது?

நினைத்து நினைத்துப் பார்த்ததில் மூளையே உருகி விடும்போல் தோன்றிற்று. மந்திரம் ஞாபகத்தின் எல்லையைக்கூட எட்டவில்லை! என்ன மாயம்? சாபம் இப்படிக்கூடவா பலிக்கும்? நிகழ்ந்தது எல்லாம் நினைவிருக்கையில், இந்த இரண்டு வார்த்தை மந்திரங்கள் அடியுடனு மறந்து போகும்? முனிவருக்குத்தான் எவ்வளவு சக்தி!

என்னைப் போல் ஒரு மூடாத்மா உலகில் உண்டா? மானிடர், தவமிருந்து வரம் பெறுவார்கள்; நானோ சோம்பல் மேலிட்டுத் தூங்கும் சமயம், அருள் வரத்தைப் பெற்றும், அதை என் மூடத்தனத்தினுல் இழந்தேன்.

இப்பொழுது நினைத்தாலும் என் புத்தி ஹீனத்திற்காகத் தலையைச் சுவரில் மோதிக் கொள்ளலாமென்று ஆத்திரம் உண்டாகிறது.

எவ்வளவோ வருஷங்கள் சென்றன. கோலைப் பத்திரமாகப் பூஜித்து வருகிறேன். தினமும் ஒரு முறை மந்திரம் நினைவிற்கு வரவேண்டுமென்று என் இஷ்டதெய்வத்தை வேண்டுகிறேன். ஒன்றும் பயனில்லை. மந்திரமென்னவோ, போனது போனதுதான் போலும்.

ஒரே ஒரு நாள் மட்டும் ஒரு பெரியவர் என் கனவில் தோன்றி ஏதோ சில சொற்களை என் காதில் உபதேசித்து மறைந்தார். என் துடிப்பைக் கண்டு, கடவுளே என்னைக் கேலி செய்து இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். மந்திரம் அவ்வளவு வேடிக்கையாக அமைந்தது! அடியில் அதைத் தருகிறேன்.

நான் என்னவோ நம்பிக்கையை அடியோடு இழக்கவில்லை. இதையும் உருப்போட்டால் ஒரு வேளை கவிதை கட்டும் திறமை வாய்க்குமென்று சில காலம் நம்பினேன்.

ஆனால் ஏமாற்றம்தான்! அகஸ்தியரிடமல்லவா இனி நான் உபதேசம் பெறவேண்டும்! அதுவும் ஐந்து ஜன்மங்களுக்குப் பிறகு தானே? அம் முனிவரோ என்மீது தீராத கோபம் கொண்டுள்ளாரே, என்ன செய்வது?

இனி இந்த ஜன்மத்தில் நான் மட்டரகமான கதைகளை எழுதி, முடிந்தால் பிரசுரிக்க வேண்டியதுதான், என் தலை எழுத்து; கவிதை புரியும் பாக்கியம் எனக்கில்லை, இவ்வுலகில்.

வாசகர்கள் எவர்க்கேனும் விருப்பமிருந்தால் இந்த மந்திரத்தை ஜபித்துப் பாருங்கள். அதன் பலாபலனுக்கு நான் ஜவாப்தாரியல்ல!

''நகமுக தகஜம் தகமுக நகஜம்
தகமுக, நகமுக, தகமுக, நகஜம்
நகமுக, தகமுக, நகமுக, தகஜம்.''

இவ்வளவே தான்? மந்திரம் எப்படி? பலே ஜோராக இல்லை!

கண்டேன் ஐயரை

யோகி சுத்தானந்த பாரதியார்

[அடுத்த மாதம் வீர விளக்கு வ. வே. சு. ஐயர் ஜயந்தி வருகிறது. அவர் வரலாற்றை விரிவாக எழுதி நூலும் வெளிவருகிறது. தமிழர் ஐயரை மறக்க முடியாது. ஆயுள் முழுதும் ஐயருக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன். ஐயரின் முதல் சந்திப்பை இக்கட்டுரை விளக்குகிறது.]

உலகில் எத்தனையோ அரிய பொருள்கள் உண்டு; ஆனால் பண்புள்ள நண்பனைப் போன்ற அரிய பொருள் எங்குமில்லை. படிக்கப் படிக்கப் பயன் தரு நூல்போல், பழகப் பழகப் பயன் தரும் நட்பு. இக் கருத்தைத் திருவள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார் :

> நவில்தொறும் நூல்நயம் போலும், பயில்
> பண்புடை யாளர் தொடர்பு [தொறும்

நான் ஒரு சமயம் திருக்குறளை ஆங்கிலமாக்க முயன்று, இக்குறளை மொழி பெயர்த்துக் கொண்டிருந்தேன். அச் சமயம் ஆசிரிய நண்பர் ஒருவர் வந்தார்; மொழிபெயர்ப்பைப் படித்தேன். "குறளா? வ. வே. சு. ஐயர் மொழி பெயர்த்திருக்கிறாரே; வாரும், பாரும்" என்றார்; அவருடன் சென்றேன். "The Maxims of Tiruvalluvar" என்ற நூலைக் கண்டேன். உடனே, மேற்சொன்ன நட்புக்-குறளுக்கு கீழ்க்காணும் ஐயர் மொழி பெயர்ப்பைப் படித்தேன்.

> *"The friendship of the worthy is like*
> *the studying of great books:*
> *The more thou approachest them*
> *the more charms thou wilt discover in them."*

பிறகு நூல் முழுதும் படித்து மகிழ்ந்து என் முயற்சியை "SAINT VALLUVAR" என்ற ஆராய்ச்சி நூலாக முடித்தேன். அந்த நண்பர் ஐயருடன் திருச்சி யோசேபு முனிவர் கல்லூரியில் (St. Joseph's College) படித்தவர். ஐயரின் அருமை பெருமைகளை அவர் ஆவேசமாகப் பேசினார்.

முன்பே இந்தியாப் பத்திரிகையில் வந்த கரிபால்டியும் இலண்டன் கடிதங்களும் என்னை ஐயரிடம் ஈடுபடச் செய்திருந்தன. அவரது சீமை—புதுவை வாழ்வு கதை கதையாகக் காதிற்கெட்டின. எனினும், மேற்சொன்ன நட்புக் குறளே ஐயர் நட்பை எனக் களித்தது. ஐயர் அப்போது புதுவையில் "கம்ப நிலயம்" நடத்தி அரிய தமிழ் நூல்களை வெளியிட்டார். நான் அவற்றை வாங்கிப் படித்து ஒரு போற்றியுரை எழுதினேன். பிறகு எனது பாரத சக்தியில் ஒரு பகுதியும் ஒரு நாடகமும் அனுப்பினேன். அதை ஐயரும், பாரதியாரும் பார்த்து மகிழ்ந்தனர்; என் பேனாவுக்கு ஐயர் ஆசியும் ஆதரவும் கிடைத்தது. ஐயருக்குக் கவிதைக் கடிதங்கள் எழுதி வந்தேன். ஒன்றில்,

பண்புறு நண்பர்

> "கற்கக் கற்கக் கம்பனைப் போன்ற
> கவிச்சுவை யளிக்கும் கவின்பெறு
> வீரக் கனலே. வித்தகச் சுடரே, [நண்பா
> தியாக மென்னுந் தெய்வக் கனலில்
> புடம்வைத் தொளிரும் பொன்னே,
> உன்னை
> உடலினும், உயிரினும், உலகினும்
> பெரிதாய்க்
> காதலிக் கின்றேன், கலைமணி விளக்கே!
> நட்பிற் குரிய சுப்பிர மணியா........."

"தங்கள் வாக்கு மஹா கவிகள் வாக்குப் போலிருக்கிறது; தமிழன்னைக்குத் தாங்கள் அரிய கலைத்தொண்டு செய்கிறீர்கள்" என்று ஐயர் எனக்கு எழுதினார். பிறகு "தேச பக்தனில்" என்னைக் குறித்து எழுதினார். அக்காலமே, அவருடன் என் வாழ்வை ஐக்கியப்படுத்த முயன்றேன். நான் அவரைக் காணச் சென்னை சென்ற போது அவர் பல்லாரிச் (Bellary) சிறைக்குச் சென்றார். என் வாழ்நாளும் எங்

கெங்கோ சுற்றிச் சுழன்று, முடிவில் சேரமா தேவியில் அவரைக் கலந்தது. ஐயர் அழைப்பு வந்ததும், என் அலுவலை உதறித் தள்ளி, ஆவலாக ஓடினேன். சேரமாதேவி குருகுலத்தில் நுழைந்தேன்; கண்டேன் ஐயரை! பண்புள்ள நண்பரைக் கண்டேன்!

2. கண்டேன் ஐயரை!

"**வா**ருங்கோ, வாருங்கோ! நெடு நாளாகப் பார்க்க வேண்டுமென்றிருந்தேன்; பாரதசக்தி முடித்து விட்டீர்களோ!" என்று பேசிக்கொண்டே ஐயர் என்னைப் புத்தக சாலைக்கு அழைத்துச் சென்றார்; அந்தப் பேச்சில் வஞ்சமற்ற குழந்தையுள்ளம் கொஞ்சியது; அந்த நடையில் குஞ்சரம் தவழ்ந்தது; ஐயர் மூலகச்சம் வைத்து வேட்டிகட்டி, மேலே ஒரு அங்கவஸ்திரம் போர்த்து, நெற்றியில் பட்டையாக விபூதியணிந்திருந்தார். அந்த எளிய உடையில் ஒரு களங்கமற்ற வீரக்கனல் வீசியது.

புத்தகசாலையில் இருவரும் நின்றோம்; ஐயர் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார்—நான் அவர் கார்மேனியழகைக் கண்ணால் பருகினேன்; படம் பிடிப்பவன் போல அவரைப் பார்த்தேன்; உடனே பாரத சக்தியை விரித்தேன். உடனே வீர சிவாஜிப் படலத்தில் ஒரு செய்யுள் வந்தது, படித்தேன்:

> உண்ணும் ஊனினை, உயிர்த்திடும்
> உயிர்ப்பினை, உரையை,
> எண்ணும் எண்ணத்தை, இயற்றிடும்
> பணிகளை யெல்லாம்,
> கண்ணினும் அரி தாகிய கற்பக நாட்டின்
> புண்ணியப் பயன் வாழவே பூசனை
> புரிந்தான்.

ஐயர் இஹ்ம், இஹ்ம்! என்று மெல்லிய நகைபுரிந்து—"வாக்கு கம்பீரமாயிருக்கிறது; அடிக்கடி படிப்போம்" என்றார். நான் பாரத சக்தியை அவர் காலில் வைத்துப் பணிந்து, "என்னைத் தங்களுக்கே பலிதானமாக்கி விட்டேன்; நான் யோகமும் கவிதையுமாக வாழ்ந்தவன்; தங்களால் உலகை அறியவேண்டும்; என்னை ஆளாக்கவேண்டும்; என்வாழ்வை அமைக்கும் சிற்பி தாங்களே-நமஸ்காரம்!" என்று நின்றேன். ஐயர் என் விழிகளை ஊடுருவிப்பார்த்தார். உடனே கம்பனிலிருந்து இந்தப் பாட்டை மெல்லிய குரலிற் சொன்னார்; அக்குரலில் பாட்டில்லை, ஆனால் பாவனாரசம் ததும்பியது:

> "இல்லாத உலகத் தெங்கும்
> இங்கிவன் இசைகள் கூரக்
> கல்லாத கலையும், வேதக்
> கடலுமே யென்னும் காட்சி,
> சொல்லாலே தோன்றிற் றன்றே!
> யார்கொலிச் சொல்லின் செல்வன்?
> வில்லார்—தோள் இளைய வீர,
> விரிஞ்சனோ? விடை வல்லானோ?"

"இது ஹனுமானைக் கண்டு கேட்டு இராமன் சொன்னது; இதையே இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது...தங்கள் தவமும், கவியும் இங்கே அமோகமாக வளரட்டும்," என்று ஆசிகூறினார் ஐயர். பிறகு நான் பாரதசக்தியிலிருந்து ஐயருக்குப் பொருத்தமான ஒரு செய்யுள் படித்தேன்:

> கார் வரை மேனியானைக்
> கலைவளர் கடலனானை
> நேர்திரு நடையினானை
> நேசருக் குயிரன்னானைக்
> கூர் விழிக் கருணையானைக்
> கொள்கைக்கே வாழுவானைப்
> பார் புகழ் வீர வேளைப்
> பார்த்துளம் பூத்து நின்றேன்.

"டண் டண் டாண்!" மணியடித்தது. "பிரார்த்தனைக்குப் போகலாமே?" என்றார் ஐயர்; மாணவர் வட்டத்திலிருந்து பிரார்த்தனை செய்து முடிந்தது; உடனே ஐயர், "பாரதிக்கு ஆகாரமெப்படியோ?', என்று அன்புடன் வினவினார்; "கனி' கடலை, பால் தயிர்" என்றேன். "இராத்திரி பலகாரம் வைத்துக் கொள்ளலாம்; பகலில் புஷ்டியாகச்சாப்பிடட்டும்பாரதி" என்று ஐயர் அழைத்துச் சென்றார்.

கிணற்றங்கரையில் ஒரு கூரைக் குடில்; அதில் சமையல்; மரத்தடியில் சாப்பாடு. ஐயர் என்னைப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு நன்றாகச் சாப்பிடச் சொன்னார்; உணவு புதிதாகையால் நான் சங்கோசப் பட்டுக்கொண்டே இலையைத் தொட்டேன்; என் குறிப்பறிந்து மறுநாளே ஐயர் கனி கடலைக்கு ஏற்பாடு செய்து, தம்முடன் இருந்து உண்ணச் செய்தார். உண்ணும்போதே கலைப் பேச்சும் நாட்டுப் பேச்சும், வீரர் பேச்சும் நடந்தன. உடன் உண்பதும், உரையாடுவதும், உயர்ந்த நூல்களைக் கற்பதும், கவி பாடுவதும்,

படிப்பதும், பத்திரிகைக்கு எழுதுவதும், தியானிப்பதுமாக என் வாழ்க்கை ஐயருடன் ஐக்கியமானது; பழகப் பழக அவர் நட்பு கலைச் சுவையாக மாறித் தெவிட்டா தினித்தது. பண்புள்ள நட்பு பயனுள்ள காவியம் போன்றதன்றோ?

பேச்சுக்குச் சிதம்பரம் பிள்ளை, பாட்டுக்குப் பாரதியார், எழுத்துக்கு ஐயர். இம் மூவரும் தமிழ்நாட்டின் மும்மணிகள். பாரத மாதாவின் வீரத் திரிசூலங்கள். இவர்களைத் தமிழர் மறக்க முடியாது, உலகமே மறக்கமுடியாது. தமிழருக்கு ஓர் ஐயர் இருந்தார். இன்னொரு ஐயரை நாம் எப்போது காணப்போகிறோம்? ஐயர் என்றால் உயர்ந்தவர், பெரியவர், அந்தணர், அரசர், ஆசிரியர், முனிவர், தந்தை, வணங்கத்தக்கவர் என்று பொருளாகும்.

ஐயர் என்று போற்றுதற்கு உரிய ஒருவர் நம் ஐயரே! ஐயர் வீரவிளக்கு; உச்சிமுதல் உள்ளங்கால்வரையில் வீரர்; தீரமே, அவர் உள்ளம்; கலையே உடல்; தியாகமே வாழ்க்கை; நீலமணிக் குன்று போல் மேனி; வஜ்ராயுதம் போன்ற முதுகு; வைரம்பாய்ந்த கர்லாக்கட்டைகள் போன்ற கைகள், கோபுரம் போல் நிமிர்ந்த தலை; செவ்வரிபடர்ந்த விழிகள்; பசுவும் சிம்மமும் சேர்ந்தது போன்ற முகப்பொலிவு; அடர்ந்த தாடி, அகன்ற மார்பு, ஜலதரங்கம் போன்ற கிண்கிணிக்குரல், கரவற்ற மனம், எளிய நடை, எளிய வைதீகவுடை, நேர்மையான பேச்சு, கூர்மையான பார்வை, மாசற்றநேசம், தேசாவேசக் கனவுலகில் தோய்ந்த சித்தம்; அப்பழுக்கற்ற ஒழுக்கம்- இவையே ஐயர்! ஆ, ஐயர் இதோ என் முன் இருக்கிறார்! என்னுள் இருக்கிறார்; அர்ஜுனன், குரு கோவிந்த சிம்ஹன், பிரதாப சிம்ஹன், தாந்தியாதோபே, கரிபால்டி, மஸ்ஜினி—ஆகிய உலகவீரருடன் ஐயரை வைத்து மதிக்க வேண்டும். இந்த வீரர்களைப் பற்றி நான் பேசும்போதெல்லாம் ஐயர் பரவசங்கொள்வார். "வீரதருமமே நமக்கு வேண்டும்; எனக்கு வசிஷ்டாதி முனிவரை விட இராமனையும் குரு கோவிந்தனையுமே அதிகம் பிடிக்கும்; மஹாகவிகளெல்லாம் வீரர்களுக்கே தமது வாக்ஸம்பத்தை அர்ப்பணித்தார்கள்" என்பார். வீரம்! ஆ, இந்த ஒரு மொழியில் ஐயர் வாழ்க்கை அடங்கும்; அந்த வீரத்தின் சுடர்ப் பொறிகளே ஐயரின் அருங்கலைச் செல்வம்.

ஒரு நாள் மாலை ஐயர் என் பர்ணசாலைக்கு வந்தார்; நான் எழுதி முடித்த ராணாபிரதாபசிங்கன் என்னும் நாடகத்தைப் படித்தேன். அரவிலி மலைக்காட்டில் அவன் பட்ட கஷ்டத்தை வருணிக்கும் காட்சியைப் படித்தபோது ஐயர் உருக்கமாகக் கேட்டார். சட்டென்று அங்கே நிறுத்தி, "ஐயரே தாங்களும் இப்படித் தானே தேசத்திற்காகப் பயங்கரமான தியாகம் செய்தீர்கள்; எத்தனையோ இடர்களைப் பொறுத்து வென்றீர்கள்; தங்கள் வீரவரலாற்றை வசனமாகவும் காவியமாகவும் பாடப் போகிறேன்." என்று அவர் முகத்தை நோக்கினேன். ஐயர் 'பக்'கென்று சிரித்துவிட்டு, "சரியாய்ப் போச்சு; நமது ஆதர்சங்கள் முதலில் முடியட்டும்; மற்றதெல்லாம் பின்னால் நடக்கட்டும்; மேலே படியுங்கள்" என்று பேச்சை நழுவவிட்டார். அவரைப்பற்றிய விஷயங்களை அவர் வாயிலிருந்தே அறிய முயன்றேன்; முதலில் தோற்றுப்போனேன்; ஆனால் நான் விடவில்லை; தக்க சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கேள்வி போட்டு, அவர் அனுபவங்களைக் கேட்டுக் கேட்டுக் குறித்துவந்தேன். கம்பன், மில்தன், ஷேக்ஸ்பியர் போன்ற கவிதைகளைப் படிக்கும்போது, வீரர் வரலாற்றைச் சொல்லும்போது, காலவிமர்சனம் செய்யும் போது, சேர்ந்து உண்ணும் போது, தனியாக இரவில் உலாவும் போது, எனது பர்ணசாலைக்கு அவர் வரும்போது, பாலபாரதி விஷயமாகச் சந்திக்கும்போது, குருகுல நடைமுறைகளை வகுக்கும்போது, காந்தி திலகர் பேச்சு வரும்போது—அசைக்க முடியாத கேள்விகள் போட்டுவிட்டால், அவர் அமைதியாகத் தம் அனுபவங்களைச் சொல்லுவார். அப்போது, அவர் உதட்டில் ஒரு நாணப் புன்னகை குலுங்கும்; கனியுண்ணும் குயில்போலத் தலை இப்படியும் அப்படியும் அசையும்; கை ஓங்கி, தடபுடலாகப் பேசமாட்டார்; ஐயர் வெகு நிதானமாகவே வார்த்தையை அளந்து பேசுவார்; அவர் பேசுவதை விரைவாக எழுதி விடலாம். கண்களில் பேச்சுக்கேற்ற உணர்ச்சி காணும்.

ஆளைப் பார்க்காவிட்டாலும், ஐயரே பேசுகிறார் என்றறியலாம். ஐயர் சாதாரணமாக அக்கிரகாரங்களில் பிராமணர்கள் பேசுவதுபோலத்தான் பேசுவார்; நிரம்ப சமுஸ்கிருதம் கலப்பார்; ஆனால் ஒரு ஆங்கிலச்சொல் கூடக் கலக்கமாட்டார். நான் ஆங்கிலச் சொல் கலந்தாலும் உடனே திருத்துவார்; கம்போஸ் (Compose) செய்ய மாடர் (Matter) வேண்டும் என்று அச்சுக் கூடத்தில் பேசக்கேட்டால், 'ஹம்! யாரது? அச்சுக்கோக்க விஷயம் வேண்டும் என்று சொல்லணும்" என்று உரக்கத் திருத்துவார். இவ்வாறு நான் கேட்ட விஷயங்களே அடுத்த மாதம் வெளிவரும் நூலில் அடங்கியுள்ளன. தமிழர் ஐயரை என்றும் நினைக்கவேண்டும்; அவர் உள்ளத்தில் பற்றிக் கொழுந்தேறிய வீரக் கனலும், கலையார்வமும் தமிழர் உள்ளத்திற் பற்றவேண்டும்; பாரதியார் கவிதையைப்போல் ஐயரின் மாசற்ற தியாக வாழ்வைத் தமிழர் என்றும் கொண்டாட வேண்டும்—இந்த நோக்கத்துடனே தான் ஐயர் வரலாற்றை எழுதி என்னுள்ளத்தை விட்டு நீங்காத ஐயருக்கே அர்ப்பணிக்கிறேன். இந்நூலை இரண்டு பாகமாகப் பிரித்திருக்கிறேன்; முதற்பாகம் அரசியல் வாழ்வு; இரண்டாம்பாகம் குரு குலத்தில் கலை வாழ்வு; ஐயரின் அரசியல் வாழ்வை அவர் வாயினின்று கேட்டபடி எவ்வளவு எழுதலாமோ அவ்வளவே எழுதுகிறேன்; கலைவாழ்வை உடனிருந்து பார்த்தபடி எழுதுகிறேன்.

ஐயரின் வாழ்வாறு 1909-ஆம் ஆண்டு வரையில் சமவெளியில் சாதாரணமாகவே சென்றது; பிறகு இலண்டனில் புயலாகக் கிளம்பியது; புதுவையில் சண்டமாருதமாக அடித்தது; மெல்ல மெல்ல மந்தமாருதமாகி, குருகுலத்தில் கலைமலர்களைக் கொஞ்சி விளையாடி, ஓர் அருவியில் மின்னல்போல் மறைந்து விட்டது. ஐயர் விட்ட இடம் இன்னும் காலியாகவே யிருக்கிறது—அவருக்குச் சமானம் அவரே. ஐயர் வரலாற்றைக் கருத்துடன் கற்றால், நமது தமிழர் தலைநிமிர்ந்து நிற்பர்; அவரது தியாகக் கனல் தமிழர் உள்ளத்தில் வீசும் — வாருங்கள் இத் தியாகக் கனலின் பிறப்பிடத்திற்குச் செல்வோம்.

Agent for Tanjore Dt.

K. ராகவேந்திர ராவ்,

சந்திர விலாஸ்,

கும்பகோணம்.

பூமி

ஆர். கே. விசுவநாதன்

பூமி எப்பொழுது தோன்றிற்று, எப்படி உண்டாயிற்று, அதன் உள்ளே என்ன இருக்கிறது, அதற்கு மாறுதல் உண்டா, அதன் முடிவு என்ன—இவை போன்ற கேள்விகளுக்கு விடை அறிய அனைவரும் விரும்புவார்கள் என்பது திண்ணம். ஒவ்வொருவருக்கும் தான் இருக்கும் ஊரைப்பற்றியும், நாட்டைப் பற்றியும் அறிந்து கொள்ளுவதில் ஆர்வம் மிகுந்து இருக்கும் இந்நாளில், நாம் எல்லோரும் சேர்ந்து வசிக்கும் பூமியைப் பற்றித் தெரிந்துகொள்ளுவதில் யாருக்குத் தான் விருப்பம் இராது. ஆனால் இவற்றுக்கெல்லாம் விஞ்ஞானம் கூறும் விடைகள் எல்லோருக்கும் திருப்தி அளிக்கும் என்று சொல்லுவதற்கில்லை. "பூமியின் ஆரம்பமும் தெளிவில்லை; இறுதியும் தெளிவில்லை; நடு நிலைமைதான் தெளிவுடையது" என்று கீதை சொல்லும் பதிலைப்போலவே விஞ்ஞானமும் சற்றேறக் குறைய இதே பதிலை இக் கேள்விக்கு அளிக்கிறது. எல்லோருக்கும் திருப்தி அளிக்கும் விடைகளை இவற்றுக்கு எதிர் பார்ப்பதும் தவறு என்று சிலர் நினைக்கலாம். இக்கட்டுரையில் எல்லாக் கேள்விகளுக்கும் விடை கூறப்போவதில்லை. அவற்றுள் முக்கியமாக, பூமியின் மேற்பகுதி உட்பகுதி இவற்றைப் பற்றி விஞ்ஞானம் கூறும் முடிவுகளை மட்டும் பார்ப்போம்.

பூமியின் மேற் பகுதியில் முக்கால் பாகம் தண்ணீர்; கால் பாகம் தரை. இத் தண்ணீர் தேக்கங்கள் தான் சமுத்திரங்கள். தரையின் மேடான பாகங்கள் தான் மலைகள். ஒரு காலத்தில் பூமி நெருப்புக் கோளமாக இருந்து, பிறகே அதன் மேற்பகுதி ஆறிக் குளிர ஆரம்பித்திருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அவ்வாறு குளிர ஆரம்பித்த பொழுது, சூட்டையொட்டி, பவனத்தில் ஆவி நிலையிலேயே இருந்த நீராவி குளிர்ந்து நீராயிற்று. அடை மழை பெய்தது. மேற்பகுதியில் இருந்த பலவகை உப்புப்படலங்கள் மழை நீரில் கரைந்தன. அம் மழைநீர் ஆறுகளாய் ஓடின. பூமியின் மேற்பகுதி மட்டும் குளிர்ந்ததால் அதன் மேலோடு மேடு பள்ளங்களாயிற்று. உப்புக்களைக் கரைத்துச்சென்ற மழைநீர் பள்ளங்களில் நிரம்பிற்று. இவ்வாறு ஏற்பட்ட மேடான பாகங்கள்தான் மலைகள் என்றும், உப்பு நீர் தேக்கங்கள் தான் சமுத்திரங்கள் என்றும் முறையே கூறப்படுகின்றன. மேலும் பவனத்தில்இருந்த நீராவியில் பெரும்பகுதி மழையாகப் பொழிந்தபின் அடைமழை ஓய்ந்தது. பிறகு தக்க பருவகாலங்களிலேயே மழை பெய்து வருகின்றது என்றும் மேற்படல உப்பெல்லாம் கடலைச் சேர்ந்தபின் ஆறுகளில் உப்பில்லாத நீர் ஓடலாயிற்று என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

மேலோட்டைக் குடைந்து பூமியினுள் ஆழச் செல்ல செல்ல, எத்தகைய பொருள் காணப்படுகிறது என்று சோதனை செய்யலானார்கள். நிலக்கரி, வைரம் முதலியவற்றைத் தோண்டிஎடுப்பதற்கு வெட்டப்பட்ட சுரங்கங்கள் இச்சோதனைகளுக்குப் பெரிதும் பயனளித்தன. அவற்றில் பல வேறு ஆழங்களில் பல வகைப்பட்ட கல், மண், பாறைகள் முதலியவை கிடைத்தன. அவை எல்லாம் படலங்களாக (Strater) அமைந்திருப்பதைப் பார்த்தார்கள். நில மட்டத்தின் கீழ் நானூறு அடி ஆழம்வரை களிமண் இருப்பதைப் பார்த்தார்கள். அதன் கீழ் காரைப்படலங்கள் தென்பட்டன. சுமார் எண்ணூறு அடிக்குக் கீழ் மணல் காணப்பட்டது. ஆயிரம் அடிக்குக்கீழ் பாறைகள் தட்டுப்பட்டன. இவற்றை ஸெடிமெண்டரி ராக்ஸ் (Sedimentary rocks) என்று கூறுகிறார்கள். இவற்றின் கீழிருந்து மற்றொரு வகைப் பாறைகளைத் தோண்டி எடுத்தார்கள். இவற்றுக்கு இக்னியஸ் ராக்ஸ் (Igneous rocks) என்று பெயர். இவையெல்லாம் உலோகங்களின் ஸிலிகேட் (Silicate) பொருள்களாக இருப்பது

தெரியவந்தது. ஒரு காலத்தில் இவை திரவமாக இருந்து பின்னர் குளிர்ந்து பாறைகளாக மாறி இருக்க வேண்டு மென்று கருதுகிறார்கள். இவற்றில் முக்கிய மானவை கிரானைட் (Granite), பஸால்டு (Basalt) என்னும் பாறைகள். சுமார் ஒன்றேகால் மைல் ஆழம் வரை குடைந்து செல்லப்பட்ட சுரங்கம்தான் மிகவும் ஆழமான சுரங்கம். இதற்கும் கீழே குடையவேண்டிய சிரமத்தை எரிமலைகள் (Volcanoes) போக்கின. எரிமலைகளைப் பூமிக்குள் ஆழமாய் இறக்கப்பட்ட பெருங் குழாய்கள் எனலாம். சாதாரண மாக இக் குழாய்கள் பூமிமட்டத்திற்கு மேல் மலைகள், குன்றுகள் இவற்றின் உச்சிவரை சென்றிருப்பதுண்டு. எரி மலைகளின் உச்சிகளிலிருந்து 'லாவா' (Lava) எனப்படும் குழம்புப் பொருள், கற்கள், நீராவி, பல வாயுக்கள் முதலி யவை வெளிப்படும். இவற்றை எப்பொ ழுதும் எரிமலைகள் கக்கிக் கொண் டிரா. சிற்சில காலங்களில்தான் கக்கும். இவ்வாறு கக்கப்பட்ட குழம்புப் பொருளைச் சோதித்துப் பார்க்கும்போது அதுவும் Igneous rocks வகையைச் சேர்ந் திருப்பது தெரிய வந்தது. இதற்கு "மாக்மா" (Magma) என்று பெயர். இதில் சேர்ந்துள்ள இரசாயனப் பொருள் கள் இரும்பு, மாக்னீஷியம் என்ற உலோகங்களின் ஸிலிகேட்டுகள் தான். மாக்மாவிலிருந்து கரியமல வாயு (Carbon dioxide), கந்தக வாயு (Sulphur dioxide), நீரக வாயு (Hydrogen), நீராவி முதலியவை. வெளிப்படுகின்றன. இவ் வாயுக்களெல் லாம் மிகுந்த இறுக்கத்தில் மாக்மாவில் கரையப்பட்டு, கட்டுண்டு, பூமியினடியில் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. மாக்மாவில் கலந்துள்ள பொருள்களின் தன்மையைக் கொண்டு எரிமலைகளின் ஆழத்தைக் கணக்கிட முடிந்தது. சில எரிமலைகள் பூமியினடியில் சுமார் இருபது முதல் முப்பது மைல் ஆழத்திலிருந்து கிளம்பி வருவதைக் கண்டார்கள். எனவே பூமியின் மேற்பரப்பின்கீழ் இரண்டு மைல் ஆழம்வரை Sedimentary rocks இருப்பதும், அவற்றின்கீழ் சுமார் முப்பது மைல் ஆழம்வரை Igneous rocks இருப்பதும், அவற்றுக்கும் கீழ் "மாக்மா" இருப்பதும் தெரிய வந்தது. மாக்மா படலத்தின் கீழே இருப்பது திரவமா அல்லது கட்டிப் பொருளா, அதன் திண்மை யாது என்று ஆராயத் தொடங் கினார்கள்.

பூமியினடியில் குடைந்து செல்லச் செல்ல, சூடு அதிகரித்துக் கொண்டு போவ தைப் பார்த்தார்கள். சில இடங்களில் இவ் வதிகரிப்பு அதிகமாகவும் தென்பட்டது. பல சுரங்கங்களில் சூட்டு அதிகரிப்பை அளந்து பார்த்ததில் ஒவ்வொரு மைல் ஆழத்திற்கும் சுமார் நாற்பத்துநாலு டிகிரீ ஸெண்டிகிரேடு அளவு சூடு அதி கரிப்பதைக் கண்டார்கள். எனவே பூமி யின் உட்பகுதி இன்னும் குளிரவில்லை என்றும், அதன் மையப்பிரதேசத்திற் கருகே சூடு அதிகமாக இருக்கவேண்டு மென்றும் ஏற்பட்டது. ஒரு பொருளும் இச்சூட்டில் திடநிலையில் இருக்கவியலாது. எனவே அங்குள்ள பொருள் திரவ

காவேரி சந்தா விகிதம்

சந்தா விபரம்	உள்நாடு	ஸிலோன் பர்மா & மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு
ஒரு வருஷம்	6 0 0	7 8 0
அரை வருஷம்	3 0 0	3 12 0
தனிப்பிரதி ஒன்றுக்கு	0 8 0	0 10 0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

நிலையில்தான் இருக்க வேண்டுமென்று ஆயிற்று. அப்படியானால் சமுத்திரத்தில் அலைகள் உண்டாவது போல, தரையிலும் அலைகள் உண்டாக வேண்டும். ஏனெனில் தரை மட்டத்தின்கீழ் முப்பது மைல் ஆழம் முதல் பூமியின் மையம் வரை இருக்கும் பொருள் திரவ நிலையில் இருப்பின் அது சந்திரன், சூரியன் இவற்றின் கவர்ச்சியினால் மேலோட்டைப் பீறிட்டுக் கொண்டு வெளிவருவதுடன், சமுத்திரத்தில் உண்டாகும் அலைகளைப்போலப் பூமியின் மற்றப் பகுதியிலும் அலைகளாகத் தோன்ற வேண்டும். சமுத்திரத்தில் உண்டாகும் அத்தகைய பெரிய அலைகளைப் போல ஏற்படாவிட்டாலும் சிறிய அலைகளாவது உண்டாக வேண்டும். அவ்வாறு ஒன்றும் ஏற்படாததினால் பூமியினடியில் உள்ள பொருள் திரவநிலையில் இருக்க முடியாது என்று ஏற்பட்டது. ஆழச் செல்லச் செல்ல இறுக்கமும் அதிகரித்துக் கொண்டு போவதால் இப்பொருள் அரக்கைப்போல இலகுவில் இளகக்கூடிய பொருளாக இருக்கலாமென்று கருதுகிறார்கள். அப்படியானால் இதன் திண்மை யாதாக இருக்கவேண்டுமென்று ஆராயத் தொடங்கினார்கள்.

ஒரு பொருளின் திண்மையை அளந்து கூறும்போது அது நீரினது திண்மையைவிட இத்தனைமடங்கு அதிகமென்று கூறப்படும். இதற்குக் குறிப்பிட்ட பருமை கொண்ட அப்பொருளின் நிறைக்கும் அதே பருமை கொண்ட தண்ணீரின் நிறைக்குமுள்ள தராதரத்தை அளந்து பார்ப்பது வழக்கம். அவ்வாறு சோதனை செய்து பார்க்கும் போது மேலோட்டின் கீழுள்ள பாறைப் படலங்களின் திண்மை இரண்டரை முதல் மூன்று வரை இருப்பது தெரிய வந்தது. பூமியின் முழுவதற்கும் உண்டான திண்மையை அளந்தார்கள். இதற்கு "நியூட்டன் நிலக்கவர்ச்சி விதி" பெரிதும் பயன் பட்டது. எல்லாப் பொருள்களும் பூமியை நோக்கி இழுக்கப்படுவதை அனைவரும் அறிவார்கள். பூமியின் கவர்ச்சியே இதற்குக் காரணம். எல்லாப் பொருள்களைக் காட்டிலும் பூமி மிகமிகப் பெரிதாதலால் அதன் கவர்ச்சியினால் எல்லாப் பொருள்களும் அதை நோக்கியே இழுக்கப்படுகின்றன. இக்கவர்ச்சிச் சக்திக்குண்டான விதியைக் கண்டவர் நியூட்டன் என்னும் விஞ்ஞானி. இதைத்தான் "நியூட்டன் நிலக்கவர்ச்சி விதி" என்று கூறுவார்கள். இவ்விதியை உபயோகப்படுத்திப் பூமியின் திண்மையை அளந்தார்கள். அளந்து பார்க்கும்போது அதன் சராசரி திண்மை தண்ணீரின் திண்மையைவிட ஐந்தரை மடங்கு இருப்பது தெரிய வந்தது. இதனால் பூமியின் உட்பகுதி திண்மை மிகுந்த பொருளாக இருக்க வேண்டும் என்று ஏற்பட்டது. வேறு சான்றுகளும் இக் கருத்து சரியென்று காட்டின. அவற்றில் ஒன்று பூகம்ப நிகழ்ச்சியைப் பயன் படுத்தியது.

பூமியின் மேலோட்டில் உண்டாகும் கிளர்ச்சியைத்தான் பூகம்பம் என்று சொல்லுவது. இது பல காரணங்களை யொட்டி ஏற்படலாம். பொதுவாக எரிமலைகள் கக்க ஆரம்பிக்கும்போது உண்டாகும் அதிர்ச்சியை யொட்டிப் பூகம்பங்கள் ஏற்படுகின்றன. மேலோட்டின் வழியாக இவ்வதிர்ச்சி மற்ற இடங்களுக்குப் பரவுகின்றது. சிலசமயம் மேலோட்டின் கீழே உள்ள படலங்கள் ஒன்றோடொன்று பொருந்தாமல் சறுக்கிப் பிறழலாம். அவ்வாறு நேரிடும் போதும் பூகம்பம் உண்டாகலாம். பெரிய மலைத் தொடர்களின் அடிவாரத்தில் அவற்றின் பளுதாங்கமாட்டாமல் பூமியில் விரிசல் ஏற்பட்டு, மலைகள் சரிந்து, அதனால் அதிர்ச்சி பரவலாம். சிலசமயம் கடலின் அடிவாரம் அமுங்கும். அப்போதும் பூகம்பம் உண்டாகலாம். பூகம்பத்தினால் ஏற்படும் அதிர்ச்சி அலைகளாக மற்ற இடங்களுக்குப் பரவுகின்றன. இவ்வலைகளில் ஒரு பகுதி பூமியின் மேற்பரப்பின்மீது மட்டும் செல்லும். மற்றப்பகுதி பூமியினடிவழியாகச் செல்லும். மேற்பரப்பின் மீதுமட்டும் பரவிச்செல்லும் அலைகள் செகண்டுக்கு இரண்டரை மைல் வீதம் பரவுவதைப் பார்த்தார்கள். ஆனால் பூமியினடிவழியாகச் செல்லும் அலைகளின் வேகம், அவை செல்லும் ஆழத்தைப் பொறுத்து மாறுபடுவதைக் கண்டார்கள். உலகில் பல இடங்களில் பூகம்பத்தினால் உண்டாகும் அதிர்ச்சியைத் தக்க கருவிகளைக் கொண்டு அளந்து, இவ்வலைகள் பரவி வந்த வேகத்தைக் கணக்கிட்டார்கள். ஆழம் அதிகரிக்க

இவ்வலைகளின் வேகமும் அதிகரிப்பது தெரியவந்தது. ஒரு பொருளின் மூல மாக அலைகள் பரவிச் செல்லும்போது அவற்றின் வேகம் அப்பொருளின் திண்மையைப் பொறுத்து அதிகரிக்கும். உதாரணமாக, ஒலி அலைகள் மரத்தில் செல்லுவதைவிட இரும்பில் பலமடங்கு அதிக வேகத்துடன் செல்லும். ஏனெனில் இரும்பின் திண்மை மரத்தின் திண்மையை விட அதிகம். பூகம்பத்தினால் ஏற்பட்ட அலைகளின் வேகம் கீழே செல்லச் செல்ல அதிகரிப்பதைக் கொண்டு, மாக்மா படலத்திலிருந்து பூமியின் மையம் வரை திண்மை மிகுந்த பொருள் இருக்க வேண்டுமென்று தெரியவந்தது. இப்பொருள் யாதாக இருக்கவேண்டுமென்று உடனே ஆராயத் தொடங்கினார்கள். உலகில் சாதாரணமாக எங்கும் கிடைக்கக்கூடிய திண்மை மிகுந்த பொருள் இரும்புதான். இதற்கு அடுத்தபடியாக நிக்கல் உலோகம்தான் அதிகமாகத் தென்படுகிறது, எனவே பூமியின் மையத்தைச் சூழ்ந்துள்ள பிரதேசம் இரும்பு நிக்கல் கலவையாகத்தான் இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். இவ்வாறு நினைப்பதற்கு வேறு சான்றுகளும் இருக்கின்றன. சூரியனில் அதிகமாகத் தென்படுவதும் இரும்புதான். மற்றும் சிற்சில சமயங்களில் வானத்திலிருந்து கற்கள் விழுவதுண்டு. இவற்றுக்கு மீடியரைட்ஸ் (Meteorites) என்று பெயர். இக்கற்கள் சூரியனிடமிருந்து கிரகங்கள் பிரிந்த காலத்தில் வெளிப்பட்டவை என்று கருதுகிறார்கள். இக்கற்களைச் சோதித்துப் பார்க்கும்போது அவை இரும்பு நிக்கல் கலவையாக இருப்பது தெரியவந்தது. இக்காரணங்களினால் பூமியின் மையத்தைச் சூழ்ந்துள்ள பிரதேசம் இரும்பு நிக்கல் கலவைப் பொருளாக இருக்க வேண்டுமென்ற கருத்து ஊர்ஜிதப் படுத்தப்பட்டது.

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபிஸ்: மாயவரம் ★ ஸென்ட்ரல் ஆபிஸ்: மதராஸ்.

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 7,75,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 6 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனாபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பெரியமேட், திருவல்லிக்கேணி

அமதலவால்ஸா	கும்பகோணம்	திருநெல்வேலி ஜங்ஷன்	ராமநாதபுரம்
அனகாபள்ளி	சாலூர்	திருச்சினாப்பள்ளி	மதுரை
அம்பாசமுத்திரம்	சிதம்பரம்	திருவாரூர்	மாருடேரு
ஆம்பூர்	சித்தூர் (கொச்சி)	தென்காசி	விழுப்புரம்
ஈரோடு	சீயாழி	நாகப்பட்டணம்	விருதுநகர்
கடலூர் N. T.	தஞ்சாவூர்	பரமக்குடி	விஜயநகரம்
கடலூர் O. T.	தாடபள்ளிக்கூடம்	பாலக்காடு	வேலூர்
காஞ்சீவரம்	திலாரு R. S.	பார்வதிபுரம்	வேதாரண்யம்
காரைக்குடி	திருநெல்வேலி டவுன்	புதுக்கோட்டை	

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... $2\frac{3}{4}\%$ விதம்
இரண்டு ,, ,, ... 3% ,,
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/வாங்கக்கூடியது ரூ. 5000/வரை வட்டி $2\frac{1}{2}\%$,,
கரண்ட் கணக்கு .. .. $\frac{1}{4}\%$,,

தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

கவியும் ரசிகனும்

டி. சேஷாத்திரி

அரசன் கலாவர்மன் அந்தப்புரம் சென்றான். கூடவே கவி விற்பன்னனும் தொடர்ந்தான். பொருளைத் தொடரும் பெருமைபோல் அந்தக் கவி அந்த அரசனை எங்கேயும் தொடர்ந்து செல்லலாம்.

மஞ்சத்தில் அமர்ந்தான் அரசன்; பக்கலில் அமர்ந்தான் கவி. தாதியர் வந்தனர் சாமரம் கொண்டு, பூவரசனுக்கு விசிறும் சாமரம் கவியரசனையும் "சேவித்தது".

"ராணி எங்கே?" என்று அவன் ஆர்வம் கொண்ட விழிகள் மௌன பாஷையில் கேட்டன. "கவி" எழுந்தான்; அரசன் அமர்த்தினான்.

ராணி வந்தாள்; உள்ளத்தில் உதிக்கும் உணர்ச்சி வேகம்போல். அவள் மெல்லிய இடுப்பை அரச குமரன் அலங்கரித்துக் கொண்டிருந்தான்.

பொன் ஆபரணங்கள். கல் புதைக்கப் பட்ட நகைகள். சரிகை வேலைப்பாடமைந்த காற்றால் மட்டுமன்றி மற்றவாறு ஆடாத உடைகள். ஆனாலும் அவைகளுக்குள் இருப்பதும் மனித தேகமே! அதற்குள் இருப்பதும் மனித இருதயம் தானே!

அந்தக் குழந்தை அரச குமரனானாலும் மனிதக் குழந்தையே!

அரசன் உள்ளும் "தந்தை" மனமே,

குழந்தை தாவி இறங்கிற்று. "அப்பா வந்தாச்சே. முசு தேடிண்டே இருந்தேனே" என்று மழலையில் சொல்லிக்கொண்டே முசுகுந்தன், அரச குமாரன், நீட்டப்பட்ட அரசன் கைக்குள் பாய்ந்தான்.

சந்திர ஒளி பட்டால் சந்திரகாந்தக் கல் உருகுமாம். அது எனக்குத் தெரியாது. முக்கோணக் கனக் கண்ணாடியுள் பாயும் வெளிறிய ஒளி ஏழு வர்ண ஒளியாக மாறி வரும் அதை நான் பார்த்திருக்கிறேன்.

இந்தச் சம்பவம் கவியுள்ளத்தில் புகுந்து இந்திரஜாலம் செய்தது, மீட்டப்பெற்ற கவியின் உள்ள வீணை கீதா நாதத்தை எழுப்பிற்று. இனிய ஓசையையும், இன்னும் இனிய சுவையையும் கொண்ட ஒரு கவிதை நதி துள்ளிக் குதித்து ஓட ஆரம்பித்தது.

'குழந்தையின் உள்ளம், மழலைச் சொல், தந்தையிடமுள்ள தணியாக் காதல்' இவைகளே உட்கருத்து.

கவி அங்கேயே கவிதை கட்டினான்; அரச தம்பதிகளுக்கும் பாடிக் காட்டினான். கவிதையில் இன்பம் இருந்தது; ஓட்டம் இருந்தது; கலை இருந்தது; கருத்து இருந்தது. ஒலி இருந்தது ஒளி இருந்தது. அரசன் உடல் பூரித்தது; உள்ளமும் பூரித்தது. கவியை வாயார மனமாரப் புகழ்ந்தான்.

நேரம் சென்றது. கவி இல்லம் செல்ல எழுந்தான். அவனுக்கு ஓர் ஆவல் பிறந்தது. காதல் மனையாட்டியிடம் தன் கவிதையைச் சொல்லிக் காட்ட எண்ணினான். அவள் ரசிகை; அவன் வாழ்வின் தூண்டுகோல்.

அரசன் குழந்தையைத் தாயினிடம் தந்தான். கவியை வழியனுப்ப வாசல் வரை வந்தான்.

அரசன் "கவிஞரே!" என விளித்தான். குரலில் வேண்டுகோள் கலந்த கட்டளையின் ஒலி முகம் காட்டிற்று. அரசன் மனதைச் சுயநலம் முற்றுகையிட்டிருந்தது.

"கவியே! உம் மதிப்பை நாம் இதுவரை சரிவர அறியவில்லை"

"மதிப்பு ஒன்றும் இல்லை. நான் வந்தும் அதிக நாட்களாகி விடவில்லையே!"

"அன்று நீர் இயற்றிய கடற்பாட்டும் நன்றாய் இருந்தது. நாம் கேட்டு உவகை கொண்டோம்"

"எல்லாம் கலாவல்லி அருள்......"

அரசன் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றினான்; அறிஞர் மார்பில் பூட்டினான்.

"எதற்கு?" என்றார் முறுவல் சொரியக் கவி. கவிஞர் எதிர்பார்ப்பது எல்லாம் போற்றும் திறனும் பசியாற்றும் செல்வமுமே!

"இல்லை ஏற்றுக் கொள்ள வேண்டும்"

நன்றி யறிந்த உள்ளம் கொடையின் முகம் நோக்கி நின்றது.

''நம்மைப்பற்றி......'' என்றான் அரசன். கவி வாளா நின்றான்.

''நல்ல பொருள் தருவோம்'' என்று ஆசை காட்டிய அரசன் 'போய் வாரும்' என்று விடை கொடுத்தான்.

2

இரவு இரண்டாம் ஜாமம் முடிந்து சில நாழிகைகள் ஆகிவிட்டன. சூரியனிடம் இருந்து வாங்கிய ஒளியை உலகத்துக்கு வஞ்சனையின்றி வாரி விட்டுக் கொண்டிருந்தான் ரோகிணியின் நாயகன். அதில் அவனுக்குப் பெருமையில்லை. ஆழியின் உப்பு நீராவியை மாற்றி உப்பு நீராகவே தந்தால் உலகம் வானைப் போற்றுது. சுடுகிரணங்களைத் தண்ணொளி யாக்கித் தருவதில்தான் மதியின் பெருமை.

கவி தன் கல்வி அறையில் இருந்தான். அவன் கவி எழுதிக் கொண்டிருந்தான், உள்ளச் சுரங்கத்தை வெட்டி வெட்டித் தேடிக் கொண்டிருந்தான். ஆழ்ந்த உள்ளத்தில் மூழ்கி மூழ்கித் தேடிக் கொண்டிருந்தான். அவன் சிவந்த கண்கள், ரத்தமேறிய முகம், குத்திட்டுநின்ற ரோமாவளி, களைத்த உடல் அவன் பிரயாசையைக் காட்டின.

ஏதோ தயாராயிற்று. கவி உள்ளத் துள்ளே வாசித்தான் ஒரு முறை; உதடசைய வாசித்தான் ஒரு முறை; உரக்க வாசித்தான் மற்று மொருமுறை.

''அடியே கேளடி!'' என்ற கவியின் வாக்கைக் கேட்டுத் துள்ளி எழுந்தாள் தூங்கிய பாவை, அவளிடம் ஒரு முறை வாசித்துக் காட்டினான்.

அவள் முகம் மலரவில்லை. உதடுகள் பிரியவில்லை. அழகிய பல்வரிசை தம் அழகைக் காட்டவில்லை. மாருகப் புருவம் நெளிந்தது.

''செயற்கைக் கால்வாய்!'' என்றன அவள் மெல்லிய மொழிகள். இயற்கை ஓட்டம் இல்லை, இன்பம் இல்லை.

கவி அந்தக் கவிதை எழுதிய கடிதத்தை வாங்கிக் கிழித்து எறிந்தான். களைத்த உடல் கட்டிலில் சாய்ந்தது. நித்ராதேவி

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்

சாதாரண கேஸ்களுக்கு	...	ரூ 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு	...	ரூ 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு	...	ரூ 8
கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு)	...	ரூ 4

(வி. பி. அணா 12 கூட)

தயாரிப்பவர்கள்:-

MRS. P. DEVEE, F.D.S. (C.M.)
Tollygunge CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—
ஹாரி & சன், 93, சைனபஜார் ரோடு மதராஸ்.
ராகவன் & கம்பெனி, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு பங்களூர் ஸிடி
நாதம் & கம்பெனி மட்டஞ்சேரி, கொச்சி
J. திராத் & கம்பெனி, மஹாத்மா காந்தி ரோடு, கராச்சி
L. M. முகர்ஜி & சன்ஸ் லிமிடெட் 167, தராம்தோலா தெரு கல்கத்தா
சிவானந்த சித்தர் மெடிகல் ஹால், 92, கடல்தெரு கொளும்பு, &
768, லோவர் தெரு, பாத்துல்லா (ஸிலோன்)

அவனை மிகவும் இரக்கத்துடன் அணைந்து கொண்டாள்.

மறுநாள் அரசன் கேட்டான்: "சொன்னது என்ன ஆயிற்று?" அந்த அரசன் மனிதன். தற்புகழ்ச்சியில் இச்சை கொண்டவன்.

"இல்லை" என்று வந்த பதிலில் எவ்வளவோ பொருள்கள் தொனித்தன.

"ஏன்?"

"அமையவில்லை!"

"சரி மூன்று நாள் எல்லை; அதற்குள் முடியவேண்டும்;" அரசன் குரலில் இறுமாப்பு இருந்தது; ஆத்திரம் இருந்தது; கடுமையும் கலந்திருந்தது.

3

சந்திரிகை இரவு. உலகம் முழுவதும் பால் போன்ற நிலா பரவி நின்றது.

கவி வசந்த காலத்தில் வறண்ட ஆற்றின் மணல் திட்டில் உட்கார்ந்திருந்தான். அவன் அரசன் மேல் தன் கவிதை இன்பத்தைப் பொழிய ஏற்பாடுசெய்தான். ஆனால் அவன் உள்ளம் சந்திரன் மேல் கருணை காட்டத் தொடங்கிவிட்டது, அசட்டுக் கவி; திங்கள் பொருளா கொடுப்பாள்?

குன்றிலிருந்து கிளம்பும் அருவிபோல் துள்ளிக் குதித்து தண்ணிய நீருடன் ஓட ஆரம்பித்தது கவிதை.

கவி கவலைகளை மறந்தான். மதியைப் பற்றி மதிப்பிலா ஒரு கவிதையை மதிப்பலம் கொண்டு புனைந்து முடித்தான்.

பலமுறை பாடினான். வீடு வந்து மனைவியை எழுப்பிப் பாடிக்காட்டினான்.

அவள் "ஆகா" என்று சரஸ்வதியிடம் சக்களத்திப் பொறுமை கொண்டவள் போலக் கணவனைத் தாவிக் கட்டி, காது கேட்க, உள்ளம் குளிர, மெய்சிலிர்க்க, கவியின் உதடுகளிலே தன் உதடுகளை வைத்துப் "பரிசுகளை" அளித்தாள்.

விடுவித்துக்கொண்ட கவியின் முகம் சுண்டிற்று. "ஆனாலும்........" "என்ன ஆனாலும்?"

"தொட்ட வேலை முடியவில்லையே!" கவி கவலைப்பட்டான்.

அரசனும் மறுநாள் அந்த நிலவுப்பாடலைக் கேட்டான். அவன் மனம் கசந்திருந்தது; வெல்லமும் கசந்து காட்டிற்று.

அரசன் முக பாவத்தைக் கண்ட கவி உள்ளம் நைந்தான், "என்ன அநியாயம்? தற்புகழ்ச்சியில் பெருமை! அதுதான் எவ்வளவு பொல்லாதது. மற்றக் குணங்களைக்கூட மடித்து விட்டதே!"

மறுநாள் கவியின் உள்ளம் கண்டிப்பாய் மறுத்துவிட்டது; வாழ்க்கைத் துணைவியும் "வேண்டாம்" என்று சொல்லிவிட்டாள்.

கவிதை பயத்துக்கோ, பொருளாசைக்கோ பயப்படாது. இருதயத்தைக் கசக்கினால் கவிதையா கிளம்பும்? பூவைப் பிசைந்தால் வாசனை தங்குமா?

மூன்று நாளும் ஒன்றன் பின் ஒன்றாய்ச் சென்றன. கடைசியில் சென்றநாள், கவியையும் "செல்" என்று ஆணையிட்டுச் சென்றுவிட்டது. சிறிய அரசன் கவியைத் துரத்திவிட்டான்.

4

இந்த அரசனின் உடன்பிறந்தாளின் கணவன் பக்கத்து நாட்டின் தலைவன். அவன் பெயர் கலாரசிகன். கவி அந்த நாட்டிற்சென்று காலம் தள்ளினான்.

உண்மை வைரம் தன் ஒளியைப் பரப்ப "விளம்பரம்" செய்வதில்லை, பழம் தன்னைத்தின்ன வெளவாலைத் தேடி அலைவதில்லை.

கவியைப்பற்றி நாடு முற்றிலும் பேச்சு. அரசனின் காதிலும் விழுந்தது, அவனை அரசன் அழைத்தான். அருகே வைத்துக் கொண்டான். அறிஞனாகிய ரசிகள் பெருமைக்கு உரிய விஷயங்களை உடனே அறிந்துவிடுகிறான்; அவைகளை அனுபவித்துப் புகழுகிறான். கவியின் மதிப்பை அறிந்த அரசன் ஆதரவளித்துத் தன்னிடமே வைத்துக் கொண்டான்.

கவியின் வறண்டு சுருங்கிய மனது, அன்பு மழையில் விரிந்து செழித்தது. வாடிய மனம் தேடிய பொருள் கிடைத்து விட்டதால் தளிர்த்து வளர்ந்தது.

உருகிய உள்ளம் பெருக்கிய கவிதை வெள்ளத்தில் அரசன் ஆழ்ந்து திளைத்தான்.

நாட்கள் ஓடின. பழைய அரசன் காதிலும் செய்தி விழுந்தது. ஆத்திரம் கொண்ட

அவன் அங்கிருந்தும் புலவனை விரட்டி விட எண்ணம் கொண்டான்.

மைத்துனன் அழைப்புக் கண்டு கலாரசிகன் விழைந்தான். மனைவியையும் அழைத்துக் கொண்டான். கவியையும் கூப்பிட்டான்.

கவி வர மறுத்தான். காரணம் சொல்லவில்லை.

மைத்துனர்கள் அன்பாய் அளவளாவினர், அன்பைக் கொட்டி அள்ளினர்கள். ஒரு நாள் கலாவர்மன் சொன்னான்:

"தங்களிடம் இருக்கும் கவியிடம் என்ன கண்டீர்?"

சம்பாஷணை தொடர்ந்தது.

"கவியிடம் என்ன காணலாம்? அவனுக்குக் கலாவல்லி புரியும் அன்புத்தொண்டில் இன்பம் காண்கிறேன்"

"அவன் கவியல்ல என்பது என் தீர்ந்த எண்ணம்......"

"அது எப்படி?"

"அவன் என்னிடம் கொஞ்ச காலம் இருந்தான்"

"ஓகோ! நீதானா துரத்திவிட்டாய்? நான் உன்னை அப்படி எதிர்பார்க்கவில்லையே!"

"அவன் கவியில் இன்பம் கிடையாது; அவன் கவியே அல்லன்"

"நீ ரசிகனே அல்லனோ என்று சந்தேகிக்கிறேனே!"

கலாவர்மன் இந்தப் பட்டத்தை ஏற்கத் தயாராயில்லை என்று சொல்ல வேண்டுவது அனுவசியம். அவன் மீசை துடிக்க, முகம் சிவக்கச் சொன்னான்:

"அவனால் என்னைப்பற்றி நான்கு நாட்களில் ஒரு செய்யுள் இயற்ற முடியவில்லை, மற்ற ஒரு கவி ஒரே நாளில் பாடிவிட்டான்."

அரசன் கலாரசிகன் அதை வாசித்துப் பார்த்தான். அவன் மெய்சிலிர்க்கவில்லை; உள்ளம் நெகிழவில்லை; புருவம்கூட நெரியாமல் மேலேறவில்லை. "ஏன்?" என்றான் கலாவர்மன்.

"இது கவிதையே அல்ல. ஆழமில்லை. ஆழத்தில் அகப்படும் முத்து பவளங்களையும் காணோம். மணல்கூட இல்லை. இதைவிட என் கவி, தான் ஏற்கனவே விட்டு வந்த ஓர் கோமகனைப் பற்றிப் பாடி இருக்கிறான்; அந்தப் பாட்டு — அது உன்னைப்பற்றித்தான் என்று எண்ணுகிறேன் — மிகவும் சிறந்தது; அது உன்னை நொந்து கொள்வதாயிருந்தாலும்கூட"

கலாவர்மன் அதைக் கேட்க அடங்கா ஆவல் கொண்டான். "எப்படியாவது நான் அதை அவன் வாயாலேயே கேட்கவேண்டுமே!" என்றான். கலாரசிகனும் முழுவதையும் மற்றொருமுறை கேட்டுவிட விரும்பினான்.

இருவரும் கையொப்பமிட்ட வேண்டுகோள் நிருபம் சென்றது. கவி வந்தான். அரசன் தூண்டுதலால் இயற்றிவைத்திருந்த கவிதையைப்படித்துக் காட்டினான். மாசு படர்ந்த மனதில் உண்மை ஒளி ஊடுருவிச் செல்ல வில்லை; அவன் கவியின் பாடலை ஒப்பவில்லை. மைத்துனன் சொன்னான்: "உன் மனம் சுத்தமாயில்லை. சரி கவியரங்கு ஏற்படுத்தலாம்." நாள் குறிப்பிடப்பட்டது.

5

அணி மண்டபத்தே அரியணையில் அமர்ந்திருந்தனர் அரசர் இருவரும். நாமகளின் ஊழியர்கள் குழுமியிருந்தனர். வெளி நாட்டில் இருந்து வந்திருந்த கவிகளும் அங்கே காணப்பட்டனர்.

முதல் புலவர் பாடிக்காட்டினார். அரசன் புகழ் கேட்ட யார்தான் தலையசைக்க மாட்டார்கள்.

நம் கவி வந்தார். அவருக்கு ஓர் பதட்டம் ஏற்பட்டது. அவர் கொஞ்சம் கம்மிய குரலில் "இது சமூகத்தில் பாடவென அமைந்ததே அல்ல; என் உணர்ச்சி பாட என் உள்ளம் கேட்கவே அமைந்தது." என்றார். அரசன் "பரவாயில்லை" என்றான்.

அரசன் குணவர்ணனையில் ஆரம்பித்தான் மொழியரசன்: "தூயமனதில் தற்பெருமை தாக்கியது; குடிகொண்டது. மனது நிறம் மாறிற்று.

"அரசன் மதி மயங்கினான்; வித்துவானை விரட்டிவிட்டான், அதுவரை அன்பால் வளர்த்த அவனை விரட்டிவிட்டான்.

"தான்" என்ற அகம்பாவம், தற்புகழ்ச்சியில் ஆர்வம்" இவைகளின் கருங்குணத்தை நொந்து கொண்டு முடிந்தது பாட்டு.

வித்துவான்கள் கல்போலச் சமைந்து விட்டார்கள். கவியின் நடை நன்று

யிருந்தது. பொருள் சிறந்து இருந்தது. அரசனைக் குறிப்பிட்டுத் திட்டவில்லை. அது எந்த அரசனாகவும் இருக்கலாம். இருந்தாலும்...?

வித்வான்கள் சம்மதம் தெரிவிப்பதற்குள் அவர்கள் முகபாவத்தில் சற்றேனும் மதிப்பு வைக்காத அரசன் கலாவர்மன் 'சபாஷ்' என்று கூவினான்.

எழுந்து சென்று கவியை நெருங்கினான். கழுத்திலிருந்த ஓர் மாலையைக் கழற்றி அணிவித்தான். திகைத்து இருந்த கவி ஆனந்த விழி விழித்தான்.

"உணர்ந்து கொண்டேன். உண்மையிலேயே இவர் கவிதை நன்றாய் இருக்கிறது. ......அதற்குக் காரணம் யாராவது சொல்ல முடியுமா? பயமில்லாமல்..." என்று கேட்டுவிட்டு அரசன் தன்னிடம் சென்றமர்ந்தான்.

இடம் மாறினால் மனமாறும். நீதிபதியின் ஆசனத்தில் அமர்ந்தவன் மனது எளிதில் மாசுருது.

மனிதனே அப்படித்தான். கதரைத் திட்டுவான்; காந்தி பிரசங்கத்தை நேரில் கேட்டால் 'தக்ளி'யுடன்தான் வீடு வருவான். புகழ்மாலை சூடிய கவி சொன்னான்;

"என் கவிதை பொருளை அடித்தலமாகக் கொண்டு பாஷை, யாப்பு என்னும் இரு கரைகளிடையே மட்டும் ஓடவில்லை. அவைகளுக்கு மற்றும் இருகரையிட்டுத் தேக்கினேன். பயம், ஆசைக் குட்பட்ட அது கவிதைக் குளமாயிற்று.

அவர் கவிதையோ உள்ளத்தின் வெள்ளப் பெருக்கு. அதற்கு இரு கரைகளே. அங்கும் தண்ணீர்தான். இங்கும் தண்ணீர்தான். அதைவிட என் கவிதையில் குளிர்மை ஒரு மாத்திரை அதிகம் காணலாம். அதுவும் நாயகனிடமுள்ள நம் மனப்பான்மையின் காரணமாக.

ஆனால் அதிலுள்ள ஜீவிய ஓட்டம் இதில் காணமுடியாது.

பழைய அரசன் பழைய கவியை மைத்துனனிடம் வேண்டிப் பெற்றுக்கொண்டான்.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 **SUNDARI ELIXIR**
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 **PHOSPHORUS OIL**
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 **MASTANA PILLS**
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 **DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA**
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

ஓரிளைஞனுக்குக் கடிதம்

வே. சாரநாதன்

அன்புள்ள யக்ஞனுக்கு,

நீ என்னைவிட குறைந்தது முப்பத்தைந்து வருடங்கள் சிறியவனாயிருக்க வேண்டும், இருந்தாலும் எனக்கு ஒரு வருடம் சின்னவனான என் அண்ணாபிள்ளையின் பெயரை உனக்கு வைத்து உனக்கு எழுத முன்வந்திருக்கிறேன். என் வாழ்க்கையின் ஆரம்பத்தில் தோன்றிய அச்சிறு நண்பன்--நான் அவனுக்குச் சொந்த சித்தப்பா—மூன்று வயது முடிவதற்கு முன் மறைந்தான். அவன் தகப்பனார் பரம ஞானி; பரம சாந்தரும்கூட. ஆனால் அவனை இழந்ததில் மனமுடைந்து போனார். அடுத்த இரண்டுவருடங்களுக்குள் அவரும் நோய்வாய்ப்பட்டு மிகவும் வருத்தமுற்று இறந்தார். குழந்தையாயிருந்த யக்ஞவராகனுக்குச் சமமான அறிவு ஏழு, எட்டு வயது மேற்பட்ட எனக்கும், மற்றவருக்கும் கொஞ்சங்கூட இருந்ததாக நினைவில்லை. "நீ என்ன படிப்பாய் பெரியவனாய்ப் போனபிறகு" என்று கேட்டால் "ஸ்ரீ" படிப்பேன் அதாவது, ஸ்ரீ பாஷ்யம் படிப்பேன் என்று சொல்லுவான். எங்கும் தான் நடந்து வருவான்; என்னைத் தூக்கிக்கொள்ள வேண்டுமென்று அவன் தாயாகிய என் மதனியைக் கட்டாயப்படுத்திய மூடப்பிள்ளை நான். நாங்கள் திடீரென்று வீடு பார்க்க நேரிட்டபோது சொம்புகளையும் முறத்தையும் தன் சிறுகைகளில் நாங்கள் குடி புகுந்த தெருக்கோடியிலுள்ள மற்றொரு வீட்டிற்குக் கொண்டுசெல்வான். சாகுந்தறுவாயில், கடைத்தெருவிலிருந்து மணிச்சத்தம் கேட்டதும் "பாட்டி, கோபாலன் கோயிலில் நன்றாயிருக்கும்" என்றான். பக்கத்தில் கோமுட்டி செட்டியார்கள் போஷித்துவந்த ஒரு சிறு கோபாலன் கோயிலுண்டு. அநேக வருடங்கள் கழித்தும், அப்பாலகனை நான் நினைத்தால், என் கண்ணீர் ததும்ப மனதில் ஒரு துக்கம் இன்பக் கலவியுடன் உதிக்கின்றது. "நான் எவ்வளவுமட்டம், அக் குழந்தையின் பால ஹிருதயம் எவ்வளவு மேலானது" என்று என்புத்தி முழக்குகின்றது. அப் புண்ணியத் தன்மைவாய்ந்த குழந்தையின் பெயரை, ஏ வாலிப நண்பனே, நான் உனக்குச் சூட்டினேன். நீயும் அதற்குத் தகுந்த நற்குணங்களை அடைவாயாக!

ஆனால் உனக்கு எங்களுக்குரியதாயிருந்த வைதிக பரம்பரை கிடைத்திருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன். வைதிகமே உருவெடுத்த தந்தை, சகல வித்வத் சம்பத்தையும் பெற்ற தமையன், அறிவிற் சிறந்த தாய், எப்பொழுதும் கூடிக் கலக்கும் வித்யார்த்தி நண்பர்கள்,—இத்தகைய குடும்பத்தில் வளர்ந்து வந்தவன் நான். ஆங்கிலப் படிப்புக்காக ஹைஸ்கூலுக்குப் போவதே பெரிய பிரச்னை என் விஷயமாய் நடந்தது. என் தமையன் சிநேகிதர்கள் "நீ உன் தந்தைக்குத் துரோகம்செய்ததாகும், இப்பையனை இங்கிலீஷ் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிக்காமலிருந்தால்" என்றார்கள். குறைந்தது பதினான்கு வருடங்கள் வெகு வைதிகமான பையனாகவே நான் நடந்துகொண்டேன். சந்தியாகாலம் தப்பி என் தமயனும் அவர் சிநேகிதர்களும் ஒருவித்வான் திருவாய்மொழியை இசையுடன் வாசித்ததைக் கேட்டுக்கொண்டிருந்தபோது, நான் வெகு படாடோபமாய்ச் சொம்பும், குளபாத்திரமும் எடுத்து வைத்துக்கொண்டு, சாயங்காலச் சூரியனுக்கு அர்க்கியம் கொடுத்தேன். "சாரநாதன் நம்மை எளப்பம் (ஏளனம்) செய்கிறான்" என்றார், என் தமையன். இந்த வைதிகப் பெருமை எங்களுக்கு மூலதனம். இவ்வளவு வருடங்கள் சுத்த லௌகிக ஆசாரத்தையே நடத்திவந்த எனக்கு இப்பவும் சாதி பேத உணர்ச்சி இருந்தே வந்திருக்கிறது. ஹிந்து என்றாலும், பிராம்மணனென்றாலும் மனம் கசிந்துவிடுகிறது. ஏ, வாலிப நண்பனே, நீ இதற்காக என்னைப் பழித்தாலும் அதைப் பொறுப்பேன்.

இந்தியாவின் துன்பங்களெல்லாம் மனிதரின் மதப்பற்றினால் உண்டாகின்றன

என்று நீங்கள், வாலிபர்கள், வாதிக்கிறீர்கள். அம் மதப் பற்றை ஒடுக்கவோ, நீக்கவோ இயலாது என்பதை ஒவ்வொரு இந்தியனும் அறிவான். வாலிபர்கள் ஜாதிப்பற்றை இகழ்ந்து வாழலாம். ஆனால் அவர்களின் முயற்சி முற்றிலும் சபலமாகாது. மத வேற்றுமையால் உண்டாகும் கலகங்கள் ஐரோப்பாவில் மூன்னூறு வருடங்களுக்கு முன் அதிகப் பிரபலமாயிருந்தன. மனிதர் மதப் போர்களைப் போக்கி, தேசிய சக்தியின் இயக்கங்களாகிய போர்கள் விளைத்தார்கள். பிறகு நம் காலத்தில் பணக்காரச் சமூகங்களின் போட்டியினால் வல்லரசுகள் போர்முனையில் ஒன்றோடொன்று எதிர்த்து நிற்கும் நிலை ஏற்பட்டது. இப்பொழுது சமதர்மம் என்றும் பொதுவுடைமை என்றும் கொள்கைகள் பிறந்து, அவற்றின் ஆதிக்கத்தில் ஒவ்வொரு சாதியாரும், மதப் போர், ஜாதீயப் போர் முதலியவை அநாகரிகம் என்றுகொண்டே, இல்லாதவர் ஒருபக்கம், பணக்காரர் ஒருபக்கம் என்று கட்சிகளை மும்முரமாய்க் கிளப்பியிருக்கிறார்கள். அவற்றிற்குத் தங்கள் ஊக்கத்தையும் உத்ஸாகத்தையும் திரண்ட வாலிப கோஷ்டியினர் அர்ப்பணம்செய்து வருகிறார்கள். ஏ, வாலிப நண்பனே, நீயும் இக்கோஷ்டிகள் ஒன்றிலீடுபட்டே தீருவாய்; மதத்திற்காகவோ, சாதிக்காகவோ தேசத்திற்காகவோ போராடுவது புராதன நடவடிக்கை என்று ஏசுவாய். போர் புரிவது சகஜமே; ஆனால் மனிதன் இயற்கையாயுள்ள பொருளாசையென்ற ஒரே காரணத்தை முன்னிட்டுப் பாடுபடுவதற்கோ போராடுவதற்கோ தலைப்படுவான் என்று சித்தாந்தம் கட்டுவாய். இந்நிலையில், மதக்கல்வி ஜாதீய பரம்பரையின் நயம், நூல் நயம் மெய்யடக்கம் என்பனவற்றை மிகவும் புறக்கணிக்கவும் துணிவாய். உன் துணிவு எக்காலையிலும் போற்றத்தக்கது. நெஞ்சிலுறுதி வேண்டும். நீ வெற்றிபெறுவாயாக! வயது முதிர்ந்தவர்கள் வாலிபர்களை மிகவும் எதிர்ப்பது சரியல்ல. ஆனால் இந்திய ஜாதியார்களின் சிறு தலைவர்கள் பொதுக் கல்வி திட்டமாகிய ஸார்ஜண்டு திட்டத்தில் மதக்கல்விக்குப் போதிய வசதிகள் இல்லை என்று இந்தியக் கல்வியின் முன்னேற்ற முயற்சிகளைக் கண்டித்து வருகிறார்கள். வயது முதிர்ந்தவர்களின் அடிமைகளே வாலிபர்கள் என்று நிரூபிக்கிறார்கள். இளைஞர்களின் பிரத்தியேகச் சபைகளில் இதற்கு எதிரிடையாக நீங்கள் வாதம் செய்தும் வருகிறீர்கள். வாலிபர் கட்சி வெற்றிபெறுவது நிச்சயம் என்றே கல்வித் துறையிலிருந்து முப்பைத்தைந்து வருடங்கள் பாடுபட்டு விலகிய நான் உனக்குக்கூறுவேன். இந்திய மகம்மதியர்களும் மற்ற மதத்தார்களும் தங்கள் வாலிபர்களைத் தீவிர மதாபிமானிகளாகச் செய்ய முனைந்திருக்கிறார்கள் என்பதும் உண்மை. இந்துக்களும் அதற்குப் போட்டியாகத் தங்கள் இனத்தினருக்கு மதக் கல்வியைப் புகட்டியாகவேண்டும் என்றும் நினைக்கிறார்கள். வாலிபர்கள் இருவிதமான உணர்ச்சிகளிலகப்பட்டுத் தயங்கும் காலமும் இதுவே.

வைதிக பரம்பரையென்பது ஒருவாறு மனத் திட்பத்திற்கு ஆதாரமென்று நீயறிவாயோ, என்னவோ? என்மட்டில் மற்றத் தேசத்தினரின் கலாசாரங்களின் பழக்கத்திற்குள்ளாயிருந்தும், மூட நம்பிக்கை என்று சொல்லும் தெய்வபக்திகூட நமக்கு வலிமையளிக்கும் என்றே நினைக்கிறேன். வேதாந்த தேசிகருக்கு நலம் பயந்தது எனக்கு நலம் பயக்கும். அவ்வளவு தெள்ளிய அறிவு எனக்குப் போதும். அவருக்குக் கருட பகவான் உதவி செய்தால் நமக்கும் அவர் செய்யத்தான் வேண்டும் என்றே நினைக்கிறேன். அதே சந்தர்ப்பத்தில் வெல்ஸ், ஜெ. பி. எஸ். ஹால்டேன் போன்ற நவீன அறிவாளிகளின் பொருள் விளக்கங்களும் மனதிற்குத் தேவையாயிருக்கின்றன. இதற்கு என்ன செய்வது? ஏ வாலிப நண்பனே, நவீன உலகு உன்னைச் சுதந்திர போக்கியத்திற்கு ஆளாக்கி உன்னை விடுவிக்கும் என்று கருதுகிறேன். சித்த சுத்தம் உனக்கு இல்லாமற் போகலாம். ஒரு சிறிது மயக்கம் நீங்கி உன் கருத்துக்களுக்கு ஏக பக்தியுள்ளவனாய் நீ விளங்குவாய். எங்களைப்போல் "இரண்டும் கெட்டான்" பிழைப்பு உன் பருவ காலத்தில் அசாத்தியமாகவேயிருக்கும். அந்நிலைமை உன்னுடைய மனித பக்குவத்திற்கு நயமானது.

கல்வி என்பதே வாலிபரைப் பழைய பரம்பரைக்கு அடிமையாக்குவது; உண்

பது, உடுப்பது போகத்தைத் தேடுவது போன்ற முயற்சிகளே பரம்பரையனுஷ்டானத்திற்குட்பட்டவை என்று நமக்குத் தெரியும். நீ அக் கல்விக்குப் பணிந்து அதன் பாரத்தை ஏற்று, கழுத்துக்கோணாமல், அதைப் புதியதாய்ச் செய்து கொள்ளச் சக்தியுள்ளவன். மற்ற வலிமைகள் உனக்குக் கிடைத்தால், வேலை கிடைத்தால், நல்ல ஊதியம் கிடைத்தால் சொந்தத் தேகத்தின் உறுப்புக்களை எவ்விதம் பாதுகாத்துப் பயன் படுத்துவாயோ அவ்வண்ணமே, உன் நூலறிவையும், உபாத்தியாயர்களின் போதனைகளையும் உயிர்ப்பித்து, அவற்றைச் சாதனங்களாக ஆளுவாய். விச்வாமித்திரரும் இராம இலக்ஷமணர்களுக்கு அவ்வாறே உயிர் பெற்ற பலை, அதிபலை என்ற மகாஸ்திரங்களையளித்தார்.

ஆம், ஓ வாலிப நண்பனே, உன் குடும்பத்தினரின் பழக்கத்தாலும், கல்விச் சாதனங்களின் பயனாலும், தோழர்களின் கோஷ்டியனுபவத்தினாலும், புஷ்டியுள்ள கல்வி உனக்குப் பிறக்குமென்று வேண்டுகிறேன். நீயே பொறுப்பாளி; உன் சுதந்திரம் தேடிப் பிடித்தாக வேண்டும் பொருளல்ல, இக்காலத்தில். சுதந்திர ஆவி எங்கும் நிலை நிற்கும் காலம் இது. நான் வாலிபனாயிருந்த காலம் நம் நாட்டில் சுதந்திர நாதம் முதன் முதல் எழும்பியகாலம். "வந்தே மாதர மென்போம்" என்று கோஷித்து வந்தோம்; "உதிக்கும் நக்ஷத்திரம்" (Rising Star) என்று நாங்கள் ஓர் சங்கம் அமைத்திருந்தோம். விசேஷமாகச் செயல்கள் நடத்திவிடவில்லை. ஆனால் துணிவு வேண்டும் என்று பேசிய வண்ணமாயிருந்தோம். (தொடரும்)

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

1, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

சித்ரா

கே. சுந்தரம்மாள்

14

ரயில் பிரயாணம் சுகமாகவே கழிந்தது. தன்னுடன் தையல் சாமானையும் கொண்டு வந்திருந்தாள். மாராட்டி, குஜராத்தி, இருவரும், ஸ்வட்டர் பின்னத் தொடங்கினார்கள். அந்த இரண்டு நாளைக்குள், உதயமாகும் ஜீவனுக்கு ஓர் ஸ்வட்டர் பின்னி முடித்தாள் சித்ரா. ஒருவர்க்கொருவர் தமாஷாகப் பேசவும், குழந்தைகளை வைத்துக் கொஞ்சவுமாக, சித்ராவின் மனவேதனை வெளிக் காட்டும் அளவு இல்லாமலிருந்தது.

அவள் குடியிருந்த வீட்டின் பக்கத்தில் ஓர் பஞ்சாபி இருந்ததால் அவளுக்கு, பஞ்சாபி நன்றாகப் பேச வந்தது. ஹிந்தி படித்தாள். அதன் அவசியம் இப்படியாக அமைந்தது. கஷ்டமில்லாமலே சுலபமாக ஒரு டாக்ஸி பேசிக்கொண்டு, சௌதாவின் வீட்டை அடைந்தாள்.

பகல் மூன்று மணி சமயம். காம்பவுண்ட் சுவருக்குள் ஒரு சிறிய பங்களா. காம்பவுண்ட் கேட்டிலிருந்து பங்களா வாசற்படி வரை மூங்கில் பிளாச்சினால் வளைவு விதானம் கட்டி, புஷ்பக்கொடி படரவிட்டிருந்தது. பங்களாவைச் சுற்றி அழகிய தோட்டம். டாக்ஸியின் ஹாரன் சப்தம் கேட்டு, தோட்டக்காரன் கதவைத் திறந்தான். வாடகையைக் கொடுத்து வண்டியை அனுப்பிவிட்டுத் தோட்டக்காரனிடம் "யஜமானியம்மா இருக்கிறார்களா?" என்றாள் (ஹிந்தியில்)

"இருக்காங்க வாருங்கள்" என்று அழைத்துச் சென்று கதவைத் தட்டினான். கதவைத்திறந்து வெளியே வந்த சௌதாமினி, இவளைக்கண்டதும் "யாரம்மா? என்ன வேண்டும்?" என்றாள். அப்படியே அவளை அணைத்துக்கொண்டு கதறவேண்டும் என்று தோன்றின உணர்ச்சியை அடக்கிக் கொண்டு, "தாங்கள்தானே சௌதாமினி?" என்றாள்.

"ஆம் நான் தான். என்னைத்தேடி வந்த காரணம்? உள்ளே வாருங்கள்" என்றாள்.

அடுத்திருக்கும் டிராயிங் ரூமிற்குச் சென்று இருவரும் எதிரெதிராக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்கள்.

"நான் உலகில் அனாதை; தாங்கள் புகலிடம் கொடுக்கவேண்டும்; உங்கள் உதார குணத்தைக் கேட்டு உங்களைத் தேடிவந்தேன். முடியாது என்று சொல்லாமல்."

"விஷயத்தை விபரமாகச் சொல்லுங்கள். என்னாலான உதவியைச் செய்யப் பின் வாங்க மாட்டேன். மனிதர்களாய்ப் பிறந்த பயன் ஒருவர்க்கொருவர் உதவுவது தானே லக்ஷ்யம், ஜாதிமதம், ஊர், இந்த வித்தியாசம் என் மனதில் உண்டாகாது. அந்த விஷயத்தில் என் தமையனார் கொள்கையை நான் பின்பற்றத் தயங்க மாட்டேன். என்னால் முடியாததை அவரிடம் சொன்னால் என்ன வேண்டுமானாலும் செய்வார்" என்றாள்.

"உங்கள் தமையனாரின் கொள்கை எனக்கு உதவி புரிவதாக இல்லையே" என்றாள் தமிழில்.

"என்ன? நீங்கள்யார்? தமிழ்......"

"ஆம் நான் தமிழ்நாடுதான்" என்று சொல்லிக்கொண்டே மூக்குக் கண்ணாடியைக் கழற்றிவிட்டு, தலையை மூடியிருந்த துணியைத் தள்ளினாள்.

"ஆ சித்ரா! இது என்ன?" என்றாள் மேலே பேசமுடியாமல் திகைத்தாள். சித்ராவின் கண்களில் நீர் நிரம்பிற்று.

"சித்ரா ஏன் இப்படி? நீ கடைசியில் சொன்ன வாக்யம் என்னைத் திகைக்கும்படி

செய்கிறது. விஷயம் என்ன? சொல்லு. ஏன் தனியாக வந்தாய்?" என்று அவளருகில் வந்து அணைத்துக்கொண்டாள்.

"எல்லாம் சொல்லுவதற்குத்தானே வந்திருக்கிறேன். முதலில் குடிக்க ஜலம் கொடு. பிறகு சொல்லுகிறேன்" என்ருள்.

"சரி எல்லாம் பிறகு பேசலாம். முதலில் ஸ்னானம் செய். வழியில் நல்ல சாப்பாடு கிடைத்திருக்காது. ஆறின சாதம், தயிரை விட்டுக்கொண்டு சாப்பிடு. பிறகு சமையல் செய்து சாப்பிடலாம் எழுந்திரு." என்ருள்.

ஸ்னானம் சாப்பாடு முடியும்வரை செளதா சித்ராவைப் பேசவிடவில்லை. சாப்பிட்டபிறகு வெற்றிலைத் தட்டுடன் ட்ராயிங் ரூமிற்கு வந்து உட்கார்ந்தார்கள். சித்ராவை உற்று நோக்கிய செளதா:

"சித்ரா கோபித்துக்கொள்ளாதே உன்னைப்பார்த்தால்........................"

"கோபமென்ன? நீ நினைப்பது சரிதான்; மாதம் நான்கு" என்று செளதாமினி புறப்பட்டு வந்ததுமுதல் அன்றுவரை நடந்தவைகளை ஒன்றுவிடாமல் சொல்லி முடித்தாள்.

அதுவரை பதுமைபோல் கேட்டுக்கொண்டிருந்த செளதா "நீ நாசமத்துப் போக, இத்தனை பாட்டிலும் உன் குறும்பை விடாமல் அவனையும் ஏமாற்றி என்னையும் ஏமாற்றிவிட்டாயே. வேஷப் போட்டிக்குத் தைத்த உடுப்பு இப்பொழுது உபயோகமாயிற்று. துளிக்கூட கண்டு பிடிக்கமுடியவில்லையே"என்று சொன்னுள்.

பிறகு கொஞ்சநேரம், ஆக்ஷேபணை ,சமாதானம், காரணம் இவைகளுடன் சம்பாஷணை நடந்து, இனிமேல் நடக்கவேண்டிய விஷயங்களை இன்ன விதம் என்று தீர்மானம் செய்து முடியும் சமயம் ராகவன் ஆபீஸிலிருந்து வந்தான்.

"சித்ராவா! பிரபாகரன் வந்திருக்கிருனு? எங்கே?" என்ருன் ஆச்சரியத்துடன்.

"அவன் வரவில்லை. அவள் மட்டும்தான் வந்திருக்கிருள்."

"தனியாகவா? ஏன்? விஷயம்?" என்ருன்.

"எல்லாம் சொல்லுகிறேன். முதலில் டிபன் சாப்பிட வாருங்கள்" என்று சொல்லிவிட்டு, "சித்ரா உனக்கு ரயில் பிரயாணம் அசதியாக இருக்கும் சற்றுப் படுத்துக்கொண்டிரு;நான் டிபன் கொடுத்து விட்டு உனக்குக் காபியுடன் வருகிறேன்" என்ருள்,

"இரண்டாம் வகுப்புப் பிரயாணம். செளக்கியமாகவே யிருந்தது. மனக்கவலை தோன்ரு வண்ணம் அவர்களும் குழந்தைகளும் அமைந்தார்கள்" என்று சொல்லும் பொழுது, வேலைக்காரி சந்திரலேகாவைக் கொண்டுவந்தாள். அவளை எடுத்துக் கொண்டு எதிரிலிருந்த அறைக்குச் சென்று விட்டாள்.

ஹல்வாவையும் மிக்சரையும் தட்டில் வைத்து அவன் முன் வைத்துவிட்டு, ஹீட்டரை வைத்துக் காபி போட்டுக்கொண்டே விஷயங்களைச் சுருக்கமாகச் சொல்லி முடித்து, தங்கள் தீர்மானத்தையும் சொன்னுள்.

"அட கஷ்டமே! அந்தப் பெண்ணின் தலையில் கஷ்டப்பட வென்றே பிரும்மன் எழுதினுனு? எல்லாம் சரி; உன் தீர்மானம் சரியல்ல. அவனுக்குத் தந்தி கொடுத்து வரவழைக்கிறேன். ரிஜிஸ்டர் மாரேஜ் செய்துவிட்டுப் போகட்டும். பிரசவம் வரை இவ்விடமிருக்கட்டும். பிறகு அவன் உத்யோகம் ஏற்றுவிட்டால் உன் அம்மா தயவின்றி அவர்கள் வாழமுடியும்? அதை விட்டு இது என்ன பைத்தியக்கார யோஜனை?

"இந்த யோஜனை எங்கள் மண்டையில் உதிக்காமலில்லை. அம்மா குணம் மிகவும் மோசம், சித்ராவின் இந்த நிலைமையைச் சாக்காக வைத்து என்ன வேண்டுமானுலும் செய்துவிடுவாள். அதுதான் அவன்கூட அப்படிச் சொல்லியிருக்கிருன். எவ்வளவோ உறுதியுடனிருந்த சித்ராகூட தவறி விட்டாளே"

"சித்ரா என்ன செய்வாள்? அவன்தான் என்னசெய்வான்? ஸ்ருஷ்ட்டியின் தத்துவம் அப்படி. ஏன் நீயும் நானும்........."

"நமக்கு இப்படி ஏற்படவில்லையே! ஏற்பட்டிருந்தாலும் பணம் அதைக் காப்பாற்றி விட்டிருக்கும். எதிர்ப்புகளும், நிராதரவான நிலைமையுந்தான் இதற்குக் கஷ்டமாக இருக்கின்றன.

"அதற்காக ஒருவரும் அறியாவண்ணம் இவ்விடம் வைத்திருக்கவேண்டுமென்று சொல்லுகிருயா?"

"ஒரு பெண் எவ்வளவு கஷ்டங்களைச் சகிக்க முடியும்? நானுக இருந்திருந்தால் பைத்தியமே பிடித்திருக்கும். அவளுடைய உரம்பெற்ற மனம் அவளைக் காக்கின்றது, அல்லல்படும் வாழ்வே வேண்டாம்; அவள் மனம் வெறுத்துவிட்டது. சமீபத்தில்

LTS. 153-23-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

மெடிகல் காலேஜ் இருக்கிறது. சேர்ந்து படிக்கட்டும். குழந்தையை நான் வளர்க்கிறேன். அவள் உத்தியோகம் ஏற்றுவிட்டால் தாயும் குழந்தையும் நிம்மதியாகக் காலங் கழிக்கலாம். அதற்குள் அண்ணாவின் கடமையெல்லாம் ஒருவிதமாக முடிந்துவிட்டால், விதியிருந்தால் கூடி வாழட்டும். இந்தச் சமயம் மட்டும் அவள்மட்டில் அவள் இறந்தவளாகக் கருதப்படுவது மேல்.''

''பெண் புத்தி என்பதைக் காண்பிக்கிறாயே. இப்படிச் செய்வதினால் எவ்வளவு தொந்தரவு ஏற்படும் தெரியுமா? அவன் அவள்மீது வைத்திருக்கும் அன்பு எப்படிப்பட்டது? அவள் காணாமல் போய் விட்டாள் என்பதைக் கேட்டவுடனேயே பைத்தியம் பிடித்துவிடும்.''

''அப்படிப் பிடிக்கும் பைத்தியத்தை அவளைக் கொண்டே நிவர்த்தி செய்துவிடலாம்''

''செத்தே போய்விட்டால்?''

''அதை ஒருவரும் தடுக்கமுடியாது. இந்தக் காரணமும் சொல்லமுடியாது''

''உன் பேச்சை யார் கேட்கப்போகிறார்கள். நான் இப்பொழுதே தந்தி கொடுக்கப் போகிறேன்''

''கூடாது''

''உன்னையார் கேட்டது?''

''அப்படிச் செய்தால் அவளை ஒளித்துவிடுவேன்.''

''இதைப் பார்; வீண்கலவரம் செய்ய நான் சம்மதிக்கமாட்டேன். இது என்வீடு. நீ என் இஷ்டப்படி நடக்கத்தான் வேண்டும்.''

''ஓஹோ! உங்கள்வீடா? இவ்வளவு நாட்களாக அதைத் தெரிந்து கொள்ளவில்லையே, சரி. உங்கள் வீட்டில் நீங்களே இருங்கள். நேற்றுக்கூட குர்ஷித் வந்து 'மதராசி ஸ்கூலுக்கு டீச்சரே கிடைக்கவில்லை; ட்ரைனிங் சர்டிபிகேட்டு நானே கொடுத்துவிடுவேன்; வேலையைப் பார்; படித்தவர்கள்தானே உதவிபண்ண வேண்டும்' என்று கெஞ்சினான். வேண்டாமென்று சொல்லிப் போகச் சொல்ல மிகவும் சிரமமாகப் போய்விட்டது. இன்று அதை ஏற்றுக்கொள்ளுகிறேன். அவளும் நானுமாக வாழ்க்கை நடத்துகிறோம். ஆண்பிள்ளைகள் சகவாசமே வேண்டியதில்லை. வீடு குடும்பம் என்றால் புருஷன் பெண்ஜாதி இருவருக்கும் பொது. சம உரிமை இருக்கவேண்டும், புருஷன் இஷ்டப்படியும் நடக்கவேண்டும், பெண்கள் இஷ்டப்படியும் புருஷன் நடக்கவேண்டும். அப்படியல்லாது வேலை செய்யவும், குழந்தைபெறவும்தான் உரிமையுண்டு. மற்ற விஷயங்களில் ஆட்டிவைக்கும் பொம்மை என்றால், அந்தத் தாம்பத்யம் வேண்டவே வேண்டாம். அன்று உங்கள் நண்பனை வாரண்டு வந்தவனை, சர்க்கார் உத்யோகம் பார்ப்பவர், அச்சமில்லாமல் மூன்றுநாள் வீட்டில் வைத்துக்கொண்டு ஆசார உபசாரம் செய்து அனுப்பவில்லை? அதற்கு நான் உங்களுடன் ஒத்துழைக்கவில்லை? நான் ஒரு விஷயத்திற்காக, ஓர் அபலைப் பெண்ணின் நன்மைக்காக, ஒரு அற்ப உதவி கேட்கிறேன். அதற்கு என் வீடு, என்னிஷ்டம், பெண் அடிமை வாழ்க்கை நடத்தப் பிறந்தவள், நாம் இல்லாதுபோனால் அவர்கள் வாழ்க்கை விகஸிக்காது என்ற ஓர் மமதை தானே இப்படிப் பேசச் சொல்லுகிறது. வேண்டாம். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். நான் என் இஷ்டப்படி உங்கள் தயவில்லாமலேயே நடத்துகிறேன். பணம் ஓர் தம்படி உங்களதைத் தொடவில்லை. முன் யோஜனையுடன் அவளிடம் அண்ணா கொடுத்துவைத்திருக்கிறான்''

''உன் அண்ணா சமத்தை நீதான் மெச்சிக் கொள்ளவேண்டும். உறுதி, பிரம்மசர்யம் என்றெல்லாம் பறையடித்துவிட்டு, அப்பெண்ணின் நிலைமையைச் சீர்கெடச் செய்துவிட்டான். ஏன் தைரியமாக அவள் சொன்னபடி தாயாரிடம், விஷயம் இப்படி, அவளைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப்போகிறேன். என்று தர்க்கவாதம் செய்து, அவள் சம்மதப்படாவிடினும், அன்றே ரிஜிஸ்டர் மாரேஜ் செய்துகொண்டு, அவளையும் கூடவே அழைத்துக் கொண்டு சென்றிருக்கக்கூடாது? மடையன், அவனைக்கூப்பிட்டுச் செருப்பாலடித்துக்காரியத்தை ஒழுங்குபடுத்துவதைவிட்டு, தலையைச்சுற்றி மூக்கைப்பிடிக்கவேண்டும் என்ற உன் யோஜனையை நான் ஏற்றுக் கொள்ளவேண்டுமாக்கும். படிக்கவைத்ததனாலல்லவா இவ்வளவு தைரியமாகப் பேசுகிறாய். அதனால்தான் அந்தக்காலத்தில் பெண்களுக்குப் படிப்புக்கூடாது என்று சொன்னார்கள். உத்யோகம் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்ற தைரியத்தினால் தானே, தாம்பத்யம் வேண்டாம் என்று பேசுகிறாய். அவளும் தனியாக வந்

இருக்கிறாள். சரி, உன்னிஷ்டம்போல் செய். நானும் தனி வாழ்க்கை நடத்துகிறேனா இல்லையா என்பதைப் பார்ப்போம்''

''அப்படியே. இந்தாருங்கள், எனது கையினால் கொடுக்கும் கடைசி கப் காபி. இந்த க்ஷணமே சென்று விடுகிறோம். குழந்தை என்னிடம்தான். என்னதான் ஆகிறது பார்ப்போம்'' என்று ஒரு கப் காபியை அவன் பக்கத்தில் வைத்துவிட்டு, கூஜாவில் தனக்கும் சித்ராவிற்கும் காபியை விட்டுக்கொண்டு கிளம்பினாள்.

வாசற்படி தாண்டும் சமயம், சட்டென ஒரு தாவலில் அவள் பக்கம் வந்து, பின்னலைப் பிடித்து நிறுத்தினான்.

''போதுமே; என்னைத் தொடவேண்டாம்'' என்றாள்.

''அடடா! என்ன கோபம்? சௌதா இல்லா விட்டால் என் கதி என்னாகும்? இருண்ட வாழ்வில் ஜோதியாக வந்த உன்னை இழந்து விட்டால்? பிறகு என் வாழ்க்கை வனத்தில் எப்படிப் பிரயாணம் செய்ய முடியும்? நான் சொன்னதெல்லாம் உண்மையென்றா நினைத்து விட்டாய்? சம உரிமையை இல்லையென்றா சொல்லுகிறேன்? உன்னிஷ்டப்படியே நடப்போம். ஒரு வார்த்தை நான் சொல்லுவதுபோல் செய்ய வேண்டும். என் கண்ணே! கோபத்தை விட்டு விடு'' என்று அவள் கைக் கூஜாவை வாங்கி, பக்கத்து மேடையில் வைத்து விட்டு, அவளைச் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

''அப்படின்னா என்னைப் பரிசோதனையா செய்தீர்கள்?'' என்று அவன் தோளில் சாய்ந்தவாறு கன்னத்தைத் தட்டினாள்.

''ஆமாம். நான் நேராக அவளிடம் சொல்லிப் பார்க்கிறேன். கட்டாயப் படுத்தவில்லை. பிறகு உன் இஷ்டப்படி நான் ஒத்துழைக்கிறேன் சரிதானா?'' என்று இறுக அணைத்து அதரத்தில்.........

அவ்வளவே கோபம் வருத்தமெல்லாம் விடைபெற்றன. நீங்கள் ஒத்துழைப்பீர்கள் என்ற உறுதியினாலேதான் வாக்களித்தேன். என்னை விடுங்கள். நான் அவளுக்குக் காப்பிகொடுக்கிறேன். நீங்கள் அதைச் சாப்பிட்டுவிட்டு அவ்விடம் வாருங்கள்'' என்றாள்.

குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்த சித்ராவைக் காப்பி சாப்பிடும்படி செய்து விட்டு வேலைக்காரியை, குழந்தையைத் தோட்டத்தில் வைத்துக்கொண்டிருக்கும்படி அனுப்பினாள். அவ்விடம் வந்த ராகவன்,

'சித்ரா! அவன் செய்தது தவறுதான். ஆனாலும் உன்னையிழக்கச் சம்மதிக்க மாட்டான். நான் ஒரு தந்தி கொடுத்து வரவழைக்கிறேன். எல்லாம் ஒழுங்காகப் போய்விடும். அவன் உத்யோகம் ஏற்கும் வரை நீ இவ்விடமே இருக்கலாம்'' என்றான்.

''அண்ணா! இந்த விஷயங்களை எவ்வளவோ மண்டையை உடைத்துக்கொண்டு சிந்தனை செய்து பார்த்தாகிவிட்டது. வாழ்க்கை என்பது என்ன? யாவரும் ஒத்த மனதுடனிருந்தால் தானே குடும்பத்தில் அமைதி யுண்டாகும். நீங்கள் சொல்லுகிறபடி செய்வதாக இருந்தால் குடும்பத்தில் பிளவு உண்டாகித்தான் தீரும். காதல் கடமை இரண்டையும் சேர்த்து அடையமுடியாது. கடமையைவிட வேண்டியதுதான். ஒரேபிள்ளை பெற்ற தாயின் மனம் நோக நடப்பது கடமையாகுமா? மேலும் நீங்களே சிந்தனைசெய்து பாருங்கள். என்று எங்களிருவரிடை அன்பு ஜனித்ததோ, அன்றே தொடர்ந்து துன்பமும், அம்மாவின் வெறுப்பும் ஜனித்து விட்டன. நான் அனுபவித்த துன்பங்கள்? இவ்வளவு எதிர்ப்புக்களை ஏற்ற என் மனம் வாழ்க்கையை எப்படி விரும்ப முடியும்? 'விஷம் வைத்துவிடுவேன்' என்று பெற்றவள் வாயால் வரவேண்டுமானால் அவர் மனதில் எவ்வளவு தூரம் கௌரவம் குடியிருக்கவேண்டுமென்பதைச் சிந்தியுங்கள். இவையெல்லாம் போக, சுகன்யா அவரை அடையவேண்டுமென்று தவம் கிடக்கிறாள். பெற்றோருக்கு ஒரே பெண். இவர் மறுத்தால் தற்கொலை செய்துகொண்டுவிடுவதாக நான்கு நாளைக்கு முன் அவர் அவ்விடமிருப்பதாக நினைத்துக் காகிதமெழுதியிருந்தாள். வேண்டுமென்றே பிரித்துப்படித்துவிட்டுப் பிறகு என் கடிதத்துடன் வைத்து அனுப்பினேன்.

''முன்னால் ஒரு சமயம் அவர் என்னை விரும்பவில்லை. அதற்காக என் வாழ்வை வீணாக்கப் போவதில்லை. விதி ஏற்படுத்தும் கணவனை அன்புடன் வரவேற்பேன் என்றாள். இந்தக் கடிதம் அதற்கு நேர்மாறாக இருந்தது. அந்தச் சமயம் எனக்கும் கொஞ்சம் கஷ்டமாகத்தான் தோன்றிற்று. என்னைவிட்டு அவளை ஏற்கமாட்டார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

''அம்மாவின் விரோதத்துடன் நாங்கள் பிரிந்து வாழ்க்கை நடத்தலாம். ஒரு சமயம் காலப்போக்கில் அவர்கள் மனம் மாறி, பிரிந்தவர் கூடலாம். ஒரு சமயம் அவர் அந்திமகாலம் வரை கூடாமலே இருந்து

விடலாம். பூர்த்தியாகாத சிசுவினிடத்தில் எனக்கு இவ்வளவு பாசமானால் இருபது வயது வளர்த்துச் சீராட்டிய ஒரே பிள்ளையைப் பிரிவதானால் அவர்கள் மனம் எத்தகைய வேதனையை அடையும்? என்பதை நினைத்துப் பார்க்க எனக்கே மிகவும் வேதனையாக இருக்கிறது. நான் இல்லையென்றால் அந்தக் குடும்பப்படகு ஒற்றுமையுடனும், அமைதியுடனும் ஆனந்த சுகத்தில் மிதக்கும்.

"அளவிற்கு மிஞ்சின காதலே அனர்த்தத்தில் வந்து முடிந்தது. நான் புறப்படும் பொழுதுகூட அவரிடம் செல்லுவதாகத்தான் முடிவு செய்தேன். வாசவதத்தா படத்தைப் பார்த்ததுமே என் மனதில் இந்தத் தீவிர உணர்ச்சி ஏற்பட்டது. ராஜ்யம், கணவன் இவர்கள் நலத்திற்காக, ஈருடலும் ஓருயிருமாக வாழ்ந்த கணவனைப் பிரிந்து, அவன் மற்றொரு பெண்ணுடன் வாழ்வதைப் பார்த்துச் சகித்தும், அத்துடனில்லாமல் அடிமை வேலை செய்தும் கஷ்டப்பட்டாள். நான் இல்லாதிருந்தால் எப்படியிருக்கும் என்பதை மனோராஜ்யத்தில் கண்டு இவ்விதமுடிவு செய்தேன். வாசவதத்தா இறந்தாள் என்று கையாண்ட முறைப்படியே, நானும் காணமல் போய்விட்டேன். பின்னால் அவள் கணவனை அடைந்ததுபோல் நானும் ஒரு சமயம் அடையலாம். தற்சமயம் ஏற்படும் புயல் அடங்கவேண்டும்.

"நான் உங்களிடமும் வாராமல் என் கோரிக்கையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். ஆனால் பெண்கள் பிரசவத்தில் இறப்பதும் சகஜமாதலால், அப்படி ஒரு வேளை நேர்ந்துவிட்டால், உரிமைக்காரரிடம் பொருளைச் சேர்த்துவிட வசதியுண்டு என்பதற்காகவே. நான் இறந்துவிட்டால் குழந்தையை நீங்கள் அன்புடன் வளர்ப்பீர்கள். அவர் அதைப்பற்றிச் சொல்லவேண்டாம். ஏன் அம்மாவே கொண்டாடி வைத்துக் கொள்ளுவார்; எனக்கும் அனுதாபமும், சுமங்கலிப் பிரார்த்தனையுங்கூடச் செய்வார். பாரதியார் இருக்கும் பொழுது அவர் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய ஒருவராவது ஒருபணமுடிப்பாவது கொடுக்க முன்வர வில்லை. இதே பாரத தேசம், இதே மக்கள்தான். ஆனல் மனநிலை வித்யாசம். அவர் மறைந்தபின், அவரின் சொற்களும் குணமும் மக்களின் மனதைக் கவர்ந்தன. எதனால்? உலகப்போக்கு அவரின் வாக்கியத்தில் அடங்கியிருந்ததை அறிவாளிகள் சிலபேர் உணர்ந்து வெளியிடவே உலகமெங்கும், அவர் தெய்வமாகக் கொண்டாடப்படுகிறார். அவர் குடும்பத்

நான்கோ பிரிண்ட் இங்கி

•

இந்தியா, சென்னை, பீஹார், மைசூர், திருவாங்கூர் சர்க்கார்களாலும், சென்னையிலும், வெளியூர்களிலும் உள்ள பிரிண்டர்களாலும் மிகவும் உபயோகிக்கப்படுகிறது.

•

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

S. நாராயணன் & கம்பெனி,

1. கிண்டி ரோடு, அடையாறு, சென்னை.

திற்கு நன்மை. அதுபோல் என் மறைவிற்குப் பின் என் காதலும் குணமும் போற்றப்படும். என் குழந்தை போற்றப்படும் என்று சிரித்தாள்.

"இவ்வளவு சொல்கிறாய், நெருப்பு என்றால் வாய் வெந்துவிடாது. அந்தக் குழந்தையே இறந்துவிட்டால்? உன் முயற்சி வீண்தானே"

"அதையும் சிந்தனை செய்தேன். அப்படியானாலும் நான் பிரிந்திருப்பது நன்மையே தான். இது விஷயம் உங்களுக்குக் கஷ்டமாகத் தோன்றினால் சிரமப்படவேண்டாம். நான் எங்காவது சென்று..........." என்று முடிக்குமுன்,

"சித்ரா கனவில்கூட அவ்விதம் நடக்க நான் சம்மதிக்கமாட்டேன்" என்றாள் செளதா.

"சித்ரா, என்னை அவ்வளவு கேவலமாக எண்ணிவிடாதே. நீ நினைக்கிறபடி அவன் சுகன்யாவை மணக்கச் சம்மதிக்காவிட்டால் அவன் நிலைமை என்னாகும்?"

"நான் இருப்பதனால்தானே? நான் இறந்துவிட்டால் மறு விவாகம் ஆண் பிள்ளைகளுக்குச் சகஜம்தானே. அவர் அன்பு அளவு கடந்தது என்பதினால், உதயணன் வாசவதத்தை சதா ஹ்ருதயத்தில் வசிக்க வாசவதத்தா, வாசவதத்தா என்று மனம் ஏங்கி இருந்ததுபோலிருப்பார்."

"இதென்ன பைத்தியம் சித்ரா, ஸ்திரீகள் கணவன் மற்றவர்களுடன் சிரித்துப் பேசினாலே பொறுக்கமாட்டார்கள் என்பது உலகமறிந்த விஷயம். நீ மற்றவள் வருவதற்கு வழி வகுக்கிறாயே? இச்சமயம் உள்ள வெறுப்பினால் சொல்லுகிறாய்? பின்னால் மிகவும் கஷ்டப்படுவாய்."

"நான் உலகத்தைப்போல் தாய்தந்தையருடனும் பணத்துடனும் இருந்தால் ஒரு சமயம் அந்த மாதிரி தோன்றலாம். ஆனால் எனது சூழ்நிலை? என்னை ஆட்டிவைக்கும் விதி? என்மனதைத் திருப்பிவிடுகிறது. பாபம்! சுகன்யா என்னைப்போன்ற பெண் தானே! ஒரு தாய்க்கு ஒருபெண். சந்தோஷமாக இருக்கட்டும். தியாகத்தின் ஜகஜ்ஜோதியான பிரகாசத்தில் என் வாழ்க்கையைப் பார்த்தே இவ்வித முடிவிற்கு வந்தேன்."

"சரிதான் உன்னோடு பேசிப் பயனில்லை. களத்திர தோஷம் என்கிறார்களே. அது உண்மையான விஷயம் என்றே தோன்றுகிறது, பிரபாகரன் விஷயத்தில்."

"ஏன் என்னை ஈசன் இவ்விதம் படைத்தான்? அவனே எல்லாவற்றிற்கும் காரணமாகட்டும்" என்றாள்.

"சரி உன்னிஷ்டப்படி நடக்கிறேன். இல்லையென்றால் நானும் அவன் கூடச் செல்ல வேண்டியதுதான். சமஉரிமைக் கக்ஷியை நிலைநாட்டவேண்டாமா?"

"எல்லாம் சரி. உங்களை எப்படி நம்புவது? ஏதாவது ஆணையிடுங்கள்" என்றாள் செளதா.

"நான் அப்படிச் சொன்ன சொல் தவறிவிடுவேனென்பதுதான் இவ்வளவு நாள் என்னுடன் பழகின தன்மையோ?"

"சே, அப்படிச் சொல்லாதே செளதா. அவர் அப்படி நம்பிக்கைத் துரோகம் செய்தால் பிறகு நமக்குத் தெரியாதா வழி?" என்றாள்.

"எல்லாம் சரிதான். அவனாக இவ்விடம் வந்தால்? நாம் கல்யாணத்திற்குச் செல்லுவதாக இருந்தால் என்ன ஏற்பாடு?" என்றான்.

"சமயோசிதம்போல் புரோகிராம் மாற்றப்படும்" என்றாள் செளதா.

"நான் வெளியில் சென்று வரட்டுமா?"

"உம்" என்று தலையை அசைத்துவிட்டு, "மறதியாகத் தந்தியாபீஸ் பக்கம் போய் விடாதீர்கள்" என்றாள் செளதாமினி.

அவன் சென்றதும் இருவரும் இவ்விஷயமாகப் பேசும்பொழுது, "உன் பஞ்சாபி உடை என்னையே ஏமாற்றிவிட்டதே; அவன் எப்படி அறிந்திருக்கமுடியும்? இத்தனை கஷ்டத்திலும் உனது தமாஷ் புத்திமட்டும் போகவில்லை? எப்படிப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தாய்?"

"என் கை சித்ராவைப்போல் தோன்றுகிறதென்றார், லூஸ் மாதிரி, என்றார். ஒரு க்ஷணம் தோன்றினது அவர் நம்மைக் கண்டுபிடித்துவிட்டால் நல்லது என்று. ஈசன் காப்பாற்றினார்."

"என்ன ஈசனோ? எல்லாம் நன்றாக முடியவேண்டும்."

"செளதா உன் வாக்குப் பலித்தது" என்றாள் சித்ரா.

"என்ன? இப்படி........."

"இல்லை. சந்திரலேகாவைப் பிரிய வருந்தின அன்று கூடிய சீக்கிரம் இப்

பாக்கியம் கிடைக்குமென்று சொன்னது நினைவிருக்கிறதா?''

"அட விதியே. அது இப்படியா பலிக்க வேண்டும்?'' என்று நீண்ட. மூச்சுவிட்டாள்.''

''நீ ஏன் கவலைப்படுகிறாய்? எல்லாம் நன்மைக்கே''

''நன்மை, அம்மாவின் தானென்ற அகங்காரத்தின் விளைவு'' என்று சொல்லியவாறு ரேடியோவைத் திருப்பினாள், அதில்

''பிரும்மாதியானாலும் தானென்ற அகங்காரம் யாரையும் விடுவதில்லை'' என்று பாட்டு எழும்பினது.

15

சித்ரா ஊரைவிட்டுக் கிளம்பின தினம் ராதாகிருஷ்ணய்யர், ஒரு டிபார்ட்டிக்குச் செல்லப் போவது தெரிந்தே சீதாலக்ஷ்மி. சித்ராவை ஆஸ்பத்ரி அழைத்துச் சென்றாள். இரவு பத்து மணிக்குத்தான் வீட்டிற்கு வந்தார். அதனால் விஷயம் ஒன்றும் நடைபெறவில்லை.

விடிந்தபிறகு காபியை எடுத்துக்கொண்டு கணவனறைக்குச் சென்றாள் சீதாலக்ஷ்மி. காப்பியைச் சாப்பிட்டுவிட்டுப் பேபரைக் கையிலெடுத்தார்.

''இந்தாருங்கோன்னா இதைக் கேட்டுப்பிட்டு அப்புறம் பேபர் வாசியுங்கோ'' என்றாள்.

''என்ன விஷயம்?''

''அந்தப்பெண் சித்ரா என்ன எழவோ எவனோ நாலுமாதம் வயத்திலே வாங்கிண்டிருக்கு''

''எவனோ தானோ வென்று அந்தக் குழந்தையை வாயில் வந்தபடி பேசாதே. எல்லாம் உன் பிள்ளைதான்''

''அப்படித் தானிருக்கட்டுமே. அந்த நாளைப்போல அன்னிய ஆண்பிள்ளையுடன் பேசக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தா இப்படி வருமா?''

''சரி சரி, அந்தக் காலமும் இந்தக் காலமும். இன்னும் பத்துப் பதினைந்து நாளைக்குள்ளே சம்பிரமமாகக் கல்யாணத்தைப் பண்ணிவிட்டால் கூடிய சீக்கிரமாகப் பேரனை வைத்துக் கொஞ்சலாம்''

''குறையுங் கேளுங்களேன்; அப்புறம் கொஞ்சறதைப் பாக்கலாம். நேத்துக் காலம்பற ஆஸ்பத்திரிக்குக் கூட்டிண்டு போனேன்.''

''எல்லாம் சரியாக இருக்கிறது என்று சொன்னாளா? அல்லது நீ ஏதாவது மருந்து வாங்கிக் கொடுத்துவிட்டாயா? என்னைக் கேட்காமல் இந்த அதிகப்பிரசிங்கித்தனமான காரியம் ஏன் செய்தாய்?''

''ஐயோ குறையுங் கேட்டுவிட்டுப் பேசுங்கோ. நானேன் மருந்து வாங்கிக் கொடுக்கப் போகிறேன். எல்லாம் நன்றாக இருக்கிறது. மருந்து ஒன்றும் வேண்டாம் என்று சொல்லிவிட்டாள்.''

''ஆரோக்கியமான திட சரீரம். அழகு, குணம், புத்திசாலித்தனம் எல்லாம் அமையப்பெற்றவள். அவள் குழந்தை சுகாதாரப் போட்டிக்கு அனுப்பக் கூடியதாக இருக்கும்''

''இதென்ன கஷ்டம், முழுக்கக் கேட்காமல் அரைகுறை வார்த்தை. வீட்டுக்கு வந்து சாப்பிட்டதும் 'பெண்களுக்கு அடக்கம் வேண்டாமா? இப்படி நடந்தது தப்பல்லவா,' என்று கோபித்துக் கொண்டேன். அவ்வளவுதான். நேற்று சாயந்தரம் முதல் காணோம்''

''என்ன சித்ராவைக் காணோமா'' என்று பேபரை வீசியெறிந்து விட்டு ''நேற்றே சொல்வதற்கென்ன. தேடச் சொன்னயா.''

''வேலைக்காரரிடம் ஓடிவிட்டாள் என்றால் கேவலமாகும், என்று அவள் தாயாரைச் சேர்ந்தவர் ரஜாவாதலால் பத்து நாளைக்கு அழைத்துப் போயிருக்கிறார், என்று சொல்லியிருக்கிறேன். அவள் எங்கே போகப் போகிறாள்? பிரபாகரனிடம்தான் போயிருப்பாள். பத்து நாளையிலேயே இரண்டு பேருமாக வந்து நிற்பா. கவலைப்படவே வேண்டாம்''

''அடிபாவி! நீ அப்போதுசெய்த அக்கிரமம் இப்பொழுதுதான் சற்று மறைந்தது. ஏதோ மிகவும் பக்ஷமாக நடத்துகிறாயே? என்று சந்தோஷப் பட்டேன். சாதாரணமாகக் கோபித்தால் வீட்டை விட்டுப் போவாளா?''

''அவள் சேதி எனக்குத் தெரியும். பேசாமலிருங்கள். அவனுக்குக் காகிதம் ஏதாவது போட்டீர்களானால் அவ்வளவுதான். நீளக் கம்பி நீட்டி விடுவார்கள். சும்மா இருந்துட்டால் இவ்விடம் நிச்சயமாக வருவார்கள்'' என்று அவரிடம் சொன்னாளே தவிர, மனதில் சித்ரா அவனிடம் செல்லமாட்டாள். தனது

சொல் அவளை வெகு தூரம் அழைத்துச் செல்லும்'' என்று சந்தோஷப் பட்டுக் கொண்டாள்.

பரீக்ஷை முடியுமட்டும் கலவரம் வேண்டாமென்று அவரும் கடிதமெழுதாமல், இரகசியமாக, பட்டணம் வரை அவரது செல்வாக்கினால் ஆள்வைத்துத் தேடலானார்.

பரீக்ஷை முடிந்த அன்றே கிளம்பி வந்துவிட்டான் பிரபாகரன். வாசல் முன் ஹாலில் உட்கார்ந்திருந்த ராதா கிருஷ்ணய்யர், பிரபாகரனைக் கண்டதும் "சித்ரா வரவில்லையா?'' என்றார்.

திடுக்கிட்டவனாக, "சித்ராவா? அவள் எங்கே வந்தாள்? ஸ்டேஷனுக்குப் போகச் சொன்னீர்களா?'' என்றான்.

"இல்லையப்பா'' என்று விஷயத்தை விளக்கினார். அந்தச் சமயம் அவ்விடம் வந்த ஸீதாலக்ஷ்மி. "பின்னே எங்கே தொலைந்தாள்? சரிதான் நான் நினைத்தது; எவன் கொடுத்தானோ அவனைத் தேடிண்டு போய்டாபோலே யிருக்கு''.

"அம்மா!'' என்றான். அச்சப்தம் பெற்றோர் இருவரையும் நடுங்கச் செய்து விட்டது. "இனிமேல் அவளைப்பற்றி இந்த மாதிரி தூஷணையான வார்த்தைகளை என்முன் சொல்வதைவிட என்னைக் கொன்று விடலாம். அவள் கால் தூசிகூட அவ்விதம் செய்யாது. உன் தந்திரம் எனக்குத் தெரியும். இப்படிச் சொல்லி விட்டால் நான் அவளை வெறுப்பேனென்பது. நீ சாதாரணமாகக் கோபிக்கவில்லை. அன்று கல்யாணத்திற்கு மனம் வெறுத்துச் செய்ததுபோல், இப்பவும் நீ என்னிடம் வராமல் போகும்படியான கடுமொழி சொல்லியிருப்பாய். நிர்ப்பந்தத்தில் சத்யம் வாங்கியிருப்பாய். அப்பேதைப்பெண் கடமை கடமை யென்று உயிரையே விட்டிருப்பாளோ? எதற்காக அம்மா இப்படியெல்லாம் செய்கிறாய்? உன் ஒரே பிள்ளை சந்தோஷமாக இருப்பதற்கு வழி இதுதானா? நீ என் சந்தோஷத்தைக் கருதவில்லை. கௌரவத்தைக் கருதுகிறாய். நான் உன்னிஷ்டப்படி நடக்க முடியாது. இதோ சௌதாவிற்குத் தந்தி கொடுக்கப் போகிறேன். அங்கும் இல்லை யென்றால். நாளையே கிளம்பி அவளைத் தேடி அழைத்துக் கொண்டுதான் வருவேன். கர்ப்பிணி என்று தெரிந்தும் வெளியில் அனுப்பினாய! நீயும் பெண்தானே? பெண் மனம் உனக்கில்லையா?'' என்று பலவிதமாகப் பேசிவிட்டு, தந்தியாபீஸிற்குச் சென்றான். இருவருக்கும் அவனிடம் பேசவே பயமாக இருந்தபடியினால் அவன் போக்குப்படி விட்டுவிட்டார்கள்.

சௌதாமினியிடமிருந்து அவ்விடம் வரவில்லை யென்றும் காரணம் தனக்கு விபரமாக வேணுமென்றும் பதில் வந்து விட்டது. தந்தியைக் கையில் பிடித்தபடி நாற்காலியில் சாய்ந்த வண்ணம் எந்த ஊரில் எப்படித் தேடுவதென்று சிந்திக்கலானான். ஐயோ கூடவருவேனென்றாளே! இவர்களுக்கு மதிப்புக் கொடுக்கவே மறுத்துச் சென்றேன். "சித்ரா! உன் வாழ்வு முடியுமானால் என் வாழ்வும் முடிய வேண்டியதுதான்'' என்று நீண்ட மூச்சு விட்டான். பலவாறு சிந்தனை ரதம் ஓட, சென்ட்ரலில் ரயிலில் பஞ்சாபி பெண்ணின் நினைவில் வந்து நின்றது. ஒரு சமயம் சித்ராவாக.........இவள் விரட்டின தினமும், அன்றும்.........அவள் கை மோதிரம்? கடைசியில் 'விதியிருந்தால் மறுபடி சந்திப்போம்' என்ற சொற்கள்! ஐயோ! மதிமோசம் போய்விட்டேன். சித்ரா! சித்ரா! எதற்காக என்னை ஏமாற்றினாய்? என்னிடம் ஏன் வரவில்லை? எந்த ஊர் சொன்னாள்? பன்னகர், சே, ஒரு சமயம் வேறு யாராகிலும்......இல்லை. அவள்தான் கண்ணீர்... ..என்று அவன் மனமே கேள்வி பதில் இரண்டையும் சொல்லிற்று.

மறு தினமே புறப்பட்டான். பட்டணம் முழுவதும் சுற்றினான். பிறகு வட இந்தியா முழுவதும் சுற்றத் தொடங்கினான். பன்னகர் சென்று ஆஸ்பத்ரி பள்ளிக்கூடம் முதலிய விடங்களிலெல்லாம் படத்தை அடையாளம் காட்டிக் கேட்டான். போலீஸிலும் தகவல் கொடுத்தான். சௌதாமினி வீட்டிற்கும் வந்துசேர்ந்தான். அவன் வந்த சமயம் சேகர் ஆபீஸ் விஷயமாக வெளியூர் சென்றிருந்தான். சித்ரா குர்ஷித்தின் வேண்டுகோளுக்காக, பாட்டுப் பள்ளிக்கூடத்தில் வீணை உபாத்தினியாக வேலை பார்த்து வந்ததினால், அவ்விடம் சென்றிருந்தாள்.

பிரபாகரனைக் கண்டதும் சித்ராவை ஒப்படைத்து விட்டாலென்ன வென்று நினைத்தாள் சௌதா. ஆனால் தான் அவளுக்கு, தீபத்தின் முன்னாக அவள் உத்யோகம் ஏற்கும்வரை காட்டிக் கொடுப்பதில்லை யென்று ஆணையிட்டுக் கூறியிருந்தது நினைவில் தோன்ற, "சத்யத்திற்கு மதிப்புக் கொடுக்கும் நாம் அப்படிச் செய்வது தவறு; சொல்லியனுப்புவோம்; அவள் பிரியப்பட்டால் யாவும் நன்மை. விதி என்ன விளையாடப் போகி

றதோ?" என எண்ணியவளாக, வேலைக்காரி வசம் கீழ்க்கண்ட கடிதத்தை அனுப்பினாள்.

அன்புள்ள சித்ரா!

அண்ணா இப்பொழுதுதான் வந்தான். நீ பிரியப்பட்டால் உன்னைப்பற்றிச் சொல்லுகிறேன். இல்லையேல் என் சத்யத்தை நான் காப்பாற்றுவேன். நீ பின்புறமாக வந்து மாடியில் இரு. நான் குடி வைத்திருப்பதாகச் சொல்லிவிடுகிறேன். சமயம் பார்த்துச் சாப்பாடு முதலியவைகள் ஏற்பாடு செய்யலாம். நாம் மனது வைத்து விட்டோமானால் உலகையே ஏமாற்றிவிடும் சக்தி உண்டல்லவா? உடனே பதில் அனுப்பு.

பிரியமுள்ள
சௌதாமினி.

அதற்குப் பதில்:

அன்புள்ள சௌதா,

உன் அன்பிற்கும் நட்பிற்கும் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்? த்யாகம், அதைப் பெற்றோர் நிமித்தம் செய்யவேண்டுவது கடமை. நமது பிளான் மாறுபட வேண்டாம். உன் யோசனைப்படி மாடி அறையில் தங்குகிறேன்.

உன் பிரியமுள்ள
சித்ரா.

வந்ததிலிருந்து சாப்பாடு, உறங்கும் நேரம் இரண்டைத் தவிர மற்ற வேளையில் வெளியில் சுற்றுவதே பிரபாகரனின் செயலாக இருந்தது. சாப்பிடும் நேரத்திலும் சென்றதைப்பற்றி அண்ணனும் தங்கையும் பலவிதமாகப்பேசி அம்மாவைத் திட்டிக் கண்ணீர் விடுவார்கள்.

மூன்றுநாள் சுற்றியானதும், "சௌதா! ராகவன் வரும்வரை நான் தங்கமுடியாது. அவனைப் போய்ப்பார்க்கவும் ஓரிடத்தில் நிலையாக இருக்கமாட்டானென்று சொல்லுகிறாய். இன்னும் சில இடங்களில் தேடிவிட்டுச் செல்வதும் காலேஜ் திறப்பதும் சரியாக இருக்கும். வர, வர அவள் உயிருடனிருக்கிறாளோ என்று சந்தேகமாக இருக்கிறது" என்றான்.

"அவள் நிச்சயம் உயிருடனிருப்பாள் என்றே எனக்குத் தோன்றுகிறது. அவள் உன்னை விட்டுச் சாகமாட்டாள். மேலும் சிசுவிற்காக உன்னுடன் சண்டை போட்டவள் அதைக்காப்பாற்ற எங்காவது மறைந்து காலம் கழிப்பாளே தவிர உயிரை விடமாட்டாள். அவள் வந்தால்தான் என்ன? அம்மாவின் கொடுமையால் என்ன சுகத்தைக் காணப்போகிறாள்"

"பாபம்! ஆதிமுதல் என் அன்பினால் அவளுக்குத் துன்பமே தவிர இன்பமே இல்லை. மனம் எவ்வளவுதான் பொறுக்கும். என்னிடம் வாழ்வதைவிட, தனி ஜீவனமே மேல் என்று தோன்றியிருக்குமே. சௌதா! அவள் கிடைத்தால் போதும், அம்மாவின் கண்ணில் காட்டாமல், அவளுடன் வாழ்க்கை நடத்துவேன். அம்மாவிடமும் நான் மட்டும் சென்று வருவேன். ஈசன் என்ன நினைக்கிறாரோ?'

"நீ பஞ்சாபி பெண்ணைப் பற்றிச் சந்தேகித்ததாகச் சொன்னாயே; அவளாக இருந்தால் உனக்குத் தெரியாமல் போகுமா?" என்று ஒரு பிரச்னையை எழுப்பினாள்.

"சித்ரா காணவில்லை" என்ற விஷயம் தெரிந்திருந்தால் நிச்சயம் அவள் கோஷாவையும் கண்ணாடியையும் எடுத்துப் பார்த்திருப்பேன். அன்று சாயங்காலம்தான் அவள் எழுதிய கடிதம் கிடைத்தது. கனவில்கூட நினைக்காத விஷயம் எப்படி நினைப்பது? நினைத்து நினைத்துப் புலம்புவதே என் விதி" என்றுசொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, சாயங்காலம் ஸ்கூல்விட்டு சித்ரா, ஷாலால் தன்னை மூடியவண்ணம், பின்பக்கம் தோட்டத்தில் வருவது கண்ணில் தென்பட்டது. உடனே, "சௌதா! மாடியில் குடியிருப்பவள் வந்துவிட்டாள்; கதவு திறந்திருக்கிறதா?" என்றான்.

"அவள் வழி எப்பொழுதும் திறந்திருக்கும்" என்றாள்.

"அவள் மட்டும்தான் இருக்கிறாளா? புருஷன், தகப்பன் ஒருவருமில்லையா?" என்றான்.

"உன் துன்பத்தில் அதையேன் கேட்கிறாய்? சித்ராவைப்போல் அவள் ஒரு அநாதை. ஜாதிக்கட்டுப்பாடு என்று அவள் மாமியார் கல்யாணம் பண்ணக்கூடாது என்று சொல்லி விட்டாளாம். அம்மாவிற்கு ஒரு பிள்ளையாம். அதற்காக அம்மா இஷ்டப்படி ஒரு கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்கிறானும். இவளைத் தனியாக வைத்திருக்கிறான். நல்ல குணம். குர்ஷித் என்னைக் கேட்டுக் கொண்டாள். இடங்கொடுத்தேன். குஜராத்தியிலும் பிராமண ஜாதிபோல் அவள் ஜாதி உயர்ந்ததாம். ஆனால்

நிலா வெளிச்சத்தில் அழகான பெரிய இந்திய ரோஜா மலர்கள் அவையின் மயக்கும் நறுமணத்தால் காற்றை நிரப்புகின்றன — அவை வினோலியா ஒயிட் ரோஸின் என்னென்ன எண்ணங்களை விளைவிக்கின்றன! உங்கள் அழகை அதிகரிக்கச் செய்ய உங்கள் இஷ்டத்திற்குரிய இச்சோப்பைவிட உத்தமமானதோ தகுதியானதோ வேறு கிடையாது. மிருதுவான நுரையைத் தரும் வினோலியா மிகவும் மெல்லிய சருமத்தை சுகமாகச் சுத்தம் செய்கிறது . . . மேலும், மணமுள்ள அதன் நுரை உங்களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச் செய்கிறது.

வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 21-23 TM VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

அவள் புருஷன் ஒருநாள்கூட இவ்விடம் வரவில்லை. கேட்டால் எங்கேயாவது அவர் சுகமாக இருக்கட்டும் என்கிருள். அவளைப் பார்த்தால் ஸ்நானம் செய்யாதவள்போல் தோன்றுகிறது. என்ன செய்வது? கஷ்டம் தான். பாட்டுவாத்தியாராக இருக்கிருள். கர்நாடக கீர்த்தனைகளை வீணையில் நன்ருக வாசிப்பாள்'' என்று சிரிக்காமல் சொல்லி முடித்தாள்.

''மடையன் அம்மாவிற்கென்று ஒரு கல்யாணமா? தன்னுடன் வைத்துக்கொள்ளத் தைரியமில்லாதவன ஆண்பிள்ளை?''

''எப்படியண்ண சொல்லுகிறது? நாளை நீயே அம்மாவிற்காகக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டியிருக்கலாம். ஆனல் இப்படிப் பயப்பட மாட்டாய். சித்ரா கிடைத்து விட்டால் அவளுக்குத்தான் முதல் ஸ்தானம் கொடுப்பாய்'' என்ருள்.

''கல்யாணமா? நானா? சித்ரா இல்லையேல் வாழ்வு மில்லை'' என்று சொல்லும்பொழுது குரல் தழு தழுத்தது.

''வருத்தப்படாதே அண்ணு, நாம் நினைக்கிறபடி எல்லாம் நடப்பதாக இருந்தால் உலகில் கஷ்டமென்ற பேச்சே இருக்க முடியுமா? தைரியமாக இரு. நீ அவர் வந்த பின்பே போகலாம்''

''இல்லையம்மா! என் மனம் படும் வேதனை, சுற்றினுலாவது சற்றுக் குறையுமோ என்றும் அவள் ஒரு சமயம் கிடைக்க மாட்டாளா என்றும் தோன்றுகிறது. மறுபடி வருகிறேன். இந்த வண்டியில் கட்டாயம் போகவேண்டும்'' என்ருன்.

சாப்பாடு போட்டு அவனை அனுப்பி விட்டு, வண்டி மறையும்வரை பார்த்து விட்டு, கதவைத் தாளிட்டுவிட்டு உள்ளே வந்தாள். மாடியிலிருந்து சித்ராவும் இறங்கி வந்தாள். அவளைக் கண்டதும்,

''என்னுடனே பிறந்தான்; ஏமாந்தான், தன்னுடனே பிறந்த தங்கையின் சூழ்ச்சியால்'' என்று முகாரி ராகத்தில் பாடினுள்.

இருவர் கண்களிலும் நீர் தளும்பிற்று.

''சித்ரா எனக்கு வாய்ப்பூட்டுப் போட்டு விட்டாய். அவன் படும் கஷ்டம் சஹிக்க வில்லையே, பைத்தியக்காரனைப் போல் அலைகிருனே.''

''நான் மட்டும் அலைய வில்லையா?''

''அவனுலா?''

''சந்தேக மில்லாமல்; தைரியத்துடன் அன்று நான் கேட்டுகொண்டபடி அம்மாவிடம் சொல்லியிருந்தால் அன்றே இரண்டிலொன்று தீர்ந்து விட்டிருக்கு மல்லவா? இருந்தாலும் அவர் நிலைமையை நோக்க எனக்கும் கஷ்டமாகத்தானிருந்தது. இருக்கட்டும் எல்லாம் நன்மைக்கே, நல்ல வேளை உன்கணவர் இல்லாதிருந்தது.''

''இருந்தாலுமென்ன. வாக்கைத் தவற மாட்டார். அந்தச்சமயம் உன் பரிதாபகரமான தோற்றத்தைப் பார்க்கும் பொழுது அப்படி வாக்களிக்கும்படி செய்து விட்டது. இன்று அவன் படும் பாட்டைப் பார்க்கும் பொழுது ஏன் வாக்களித்தோம் என்று தோன்றினது. இவை யெல்லாம் எதில் வந்து முடியப் போகிறதோ?'' என்று நீண்டமூச்சு விட்டாள்.

''அவர் வெளியில் சுற்றினதினுல் ஸ்நானம் சாப்பாடு எனக்கு ஸௌகரியமாகவும், மியுஸிக் டீச்சர் உத்யோகம், என் மனதைப் பலப்படுத்தவும் உதவி செய்தது. இரவு வேளைகளில் அவர் புலம்புவதைக் கேட்கும் பொழுது ஓடிவந்து அவர் காலைப் பிடித்து 'உங்கள் சித்ரா இதோ இருக்கிறேன் என்னை மன்னித்து விடுங்கள்' என்று சொல்லிவிடுவோமா? என்று மனம் துடித்தது. அந்தச் சமயம் வாசவதத்தையை நினைத்து மனதைத் திடப்படுத்திக் கொள்ளுவேன்''

''நல்ல வாசவதத்தா! அந்தப் படத்தினுல் வந்த அனர்த்தம் என்று நினைக்கிறேன்.''

''இல்லை இல்லை, நன்மை. அதைப் பார்க்காவிட்டால் உன் அண்ணுவிடம் சென்றிருப்பேன். அவர் என்னுடன் பட்டணத்திலேயேதங்கிவிடுவார். இந்தச் செய்தி கேட்டதும் உன் பெற்ருேர் அவர் செலவிற்குப் பணம் அனுப்ப மறுப்பர். கையிலுள்ளது எவ்வளவுநாளைக்குவரும். பின்பு கஷ்டப்பட நேரும். பெற்ருேருடன் சண்டை. இவ்வளவும் நிச்சயம். இந்தத் தியாகம் கொஞ்சம் சிரமம். காலம் மாறி மாறி வருகின்றது, ஸ்ருஷ்டியின் தத்துவம், கொஞ்சநாட்களில் மனம் சாந்தமடையும்; சுகன்யா விவாகம் நடைபெறும். அதுவே என் லக்ஷ்யம். நான் உத்யோகம் ஏற்று விட்டால் கவலையில்லை. பிறகு உன் அம்மாகூட என்னை வரவேற்பாள். கவலைப்படாதே'' என்ருள்.

''விசித்ரமான பெண்ணடி நீ சித்ரா'' என்ருள்.

நெடுகச் சுற்றிவிட்டுக் காலேஜில் சேர்ந்து விட்டான் பிரபாகரன். புன்னகை தவழும்

வதனத்தில் சதா சோகரேகை தென்பட்டது. காலேஜ் துக்கப் பளுவைச் சற்றுக் குறைத்ததென்றே சொல்லலாம். படிப்புடன் சித்ராவைக் கண்டுபிடிக்கும் முயற்சியையும் சேர்த்துக்கொண்டான். இவன் நிலைமையைப் பார்க்கும் பொழுது பெற்றவர்கள் மனதில் மிகவும் கவலைதோன்றினது. தான் செய்த தவறுதலைச் சற்றேஉணரலானாள் தாயார்.

சித்ராவிற்குப் பிரபாகரனின் பிரதிபிம்பமாய்த் திடகாத்திரத்துடன் ஆண் குழந்தை பிறந்தது. அவளும் மெடிகல் காலேஜில் சேர்ந்து படிக்கலானாள். குழந்தையின் முகத்தைப் பார்க்கப் பார்க்க அவள் மனவேதனை சற்றேகுறையலாயிற்று. சௌதா கண்ணெனப் போற்றி வளர்த்தாள் குழந்தையை. சௌதாமினி ஓர் முறை பிறந்து வீடுவந்து விட்டுக்கூடச் சென்றாள். அதனால் மாறுதலொன்றுமில்லை.

இவ்வித நிலைமையிலேயே காலப் புஸ்தகத்தின் வருஷ ஏடு இரண்டு மடக்கப்பட்டது.

சொந்தத்தில் டிஸ்பென்ஸரி வைக்கக் கட்டின கற்பனைக்கோட்டை தகர்த்தெறியப்பட்டது. வடஇந்தியப்பக்கத்தில் சர்க்கார் ஆஸ்பத்ரியில் டாக்டராக உத்யோகம் ஏற்றுக்கொண்டான். கல்யாண பிரஸ்தாபம் வந்தாலே அவன் ருத்ர சொரூபமெடுத்துவிடுவான்.

சித்ரா மறைந்ததினால் பிரபாகரனின் அன்பை ஒரு சமயம் பெறலாம் என்ற ஆவலுடன் மெடிகல் காலேஜில் சேர்ந்து படிக்கலானாள், சுகன்யா.

சித்ரா மறைந்த மூன்றாவது வருஷம். தன் மனிதர் என்பவர் இல்லாத வட இந்திய பிராந்தியத்திலிருந்ததினால் அவளைப்பற்றி ஒருவரும் அறிய ஹேது வில்லாமல் போய்விட்டது. அந்த நிலைமையில் ராதாகிருஷ்ணய்யருக்கு உடம்பு அதிகம் என்ற தந்தி வந்து, பிரபாகரன் சென்றான். சௌதாமினியும் ராகவனும் சந்திரலேகாவுடன், சித்ராவின் இரண்டரை வயதுக் குழந்தை "சுபாஷ்" என்றழைக்கும் ராதா கிருஷ்ணனையும் எடுத்துச் சென்றாள்.

முதல் நாளே பிரபாகரன் வந்துவிட்டான். மறு நாள் தான், சுகன்யா அவள் பெற்றோர், சௌதாமினி முதலியோர் வந்தார்கள். பிரபாகரன் வந்து பார்க்கும் போது தந்தையின் நிலைமை மோசமாக இருந்தது. சர்ஜன் ஜெனரல் ராம்மோஹனன், "இன்னும் பதினைந்து நாள் ஜீவித்திருப்பார். மிஞ்சினால் ஒரு மாதத்திற்குமேல் இருப்பது கடினம். ஆகையால் அவர் நினைவு இருக்கும் பொழுதே

தலை நிறைந்த கூந்தலே முகத்தின் அழகை எடுத்துக்காட்டுவது. கூந்தலே முக அழகை ஆக்குவதும், அழிப்பதும். கூந்தலழகையும் முக அழகையும் இன்றே கேசவர்த்தினியைக் கொண்டு விருத்தி செய்யுங்கள்.

அற்ப கேசத்தைவிட அழகுக்கு ஹானி வேறில்லை. இதைப் பரிஹரிக்கக் கேசவர்த்தினியை விடச் சிறந்த மருந்துமில்லை. இழந்த கூந்தலையும் இளமையையும் கேசவர்த்தினியைக்கொண்டு இன்றே பெறுங்கள்.

அழகுள்ளவர் ஒரு சிலரே. ஆனால் கூந்தலழகையோ கேசவர்த்தினி உபயோகத்தால் ஒவ்வொருவரும் பெறலாம். கேச சம்பத்து படைத்தவர் அதை இழக்காமல் கேசவர்த்தினியைக்கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியால் அதை அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயன சாலை

கோயமுத்தூர்.

செய்ய வேண்டியவைகளைக் கேட்டுக் கொள்'' என்று சொல்லி விட்டார்.

இரவு பத்து மணி. சாப்பாடெல்லாம் முடிந்ததும் பிரபாகரனைத் தன்னருகில் உட்காரும்படி சொன்னார். உட்கார்ந்தவன் கையைத்தமதுகையால் பிடித்துக்கொண்டு,

''பிரப்ாகரா! சொத்து விஷயங்களைப் பற்றி நான் உனக்கு ஒரு தொந்தரவும் வைக்கவில்லை. எல்லாவற்றிற்கும் எழுத்து மூலமாக, அறிந்து கொள்ளும்படி செய்திருக்கிறேன். உன் கொள்கைப்படி சமபாகம் செய்ய வில்லை. மூன்றில் ஒன்று சௌதாமினிக்கு. உன் தாயார் இஷ்டப் பட்டது போக மீதமுள்ளதைத்தான் இவ் விதம் செய்திருக்கிறேன். கல்யாணத்தின் பொழுது சௌதாமினிக்குச் சீதனமாகக் கொடுத்திருப்பதால் கிட்டத்தட்ட உனக்குச் சமமாகவே இருக்கலாம். அந்தப் பெண் சித்ரா, என்றாவது உன்னிடம் வந்தால் அவளுக்காக உன்னுடையதில் நாலில் ஒரு பங்கு அவளுக்கென்று எழுதியிருக்கிறேன். இனி ஏற்படும் நிலைமை மாறுதலால் உன்னுடன் இருக்கப் பிரியப்படாவிடில், சரி பங்கு கொடுத்துவிடு. இவ்வளவுதான் பொருளைப் பற்றிய விஷயம்.

இனிமேல் நான் சொல்லப் போவது உனக்கு வருத்தத்தை ஏற்படுத்தலாம். ஆனால் கடமை; எளிய வாழ்க்கை நடத்திய காமாக்ஷியை நினைத்தாலே கடமை எவ்வளவு முக்யமென்று தோன்றும். அவள் கடமைக்கு உயிரையே அர்ப்பணம் செய்தாள். உன் தாயார் செய்தது கொடுமை தான். ஆனால் அவளும் பாசத்தினாலேயே அவ்விதம் செய்தாள். அதிலும் பணமும் மமதையும் சேர்ந்து ஆராயும் சக்தியை இழக்கச் செய்துவிட்டது. உன் நிலைமையைப் பார்க்கப் பார்க்க அவளது தவறை இப்பொழுதுதான் நன்றாக உணருகிறாள். அந்தப் பெண் மாயமாய் மறைந்து விட்டாளே, அதற்காக உன் வாழ்வையும் வீணாக்கிக் கொண்டு, எங்கள் மனதையும் புண்படுத்தினால் சரியாகி விடுமா? உன் மனதில் சந்தோஷ மிருக்காது. ஆனாலும் அவளைப்போன்ற அழகுள்ள பெண்களை மணந்தால் உன் துக்கம் குறையத்தான் செய்யும். இது மனித வர்க்கத்தின் இயல்பான குணம்.

''பின்னால் சித்ரா கிடைத்தால் இருவரையும் வைத்துக் கொள்ளுவது உனக்குச் சிரமமல்ல. சித்ராவின் குணம் ஹம்ஸத்தைப் போன்றது. அவள் யாருடனும் ஒத்துழைப்பாள். சாகும் தறுவாயில்? உன் மணக்கோலத்தைக் காண என் மனம் அளவுகடந்த ஆவல் கொள்ளுகிறது. அநேகமாக உலகில் ஒரு பிள்ளையைப் பெற்றவர்களுக்கே இச்சோதனை ஏற்படுகிறது. குடும்பம் விளங்க மற்றவனிருந்து விட்டால் உன்னைக் கட்டாயப் படுத்தமாட்டேன். அவள் என்ன செய்தாலும் உன்னைப் பெற்றவள். அவளுக்கு மன்னிப்பு உண்டு. என் கடைசி வேண்டுகோளை நீ நிராகரிப்பதானால் நான்தான் என்ன செய்யமுடியும்? இப்படித் திடீரென்று பக்ஷவாதம் வந்து சீக்கிரம் என்முடிவு ஏற்படுமென்று கனவில்கூட நினைக்கவில்லை. சுகன்யாவைக் கல்யாணம் செய்து கொண்டாயானால் உன் மனதில் வாழ்க்கையின் இன்பம் சற்றாவது தோன்றாமல் போகாது.'' என்று ஈனஸ்வரத்தில் சொல்லி முடித்தார்.

''அப்பா,'' உங்களுக்காக எதுவேண்டுமானாலும் செய்யக் கடமைப் பட்டவனே. சித்ராவைத் தவிர வேறு எவருக்கும் என்மனதில் இடமில்லை. அவள் எந்த நிலைமையில் எவ்விடத்தில் தங்குகிறாளோ... ...'' என்று சொல்லை முடிக்குமுன்,

''நான் அதை அறியாமலில்லை. தனிமையில் நீ 'சித்ரா சித்ரா என்று புலம்புவதையும் தெரிந்துதான் சொல்லுகிறேன். மனதில் இடமில்லாவிட்டால் வேண்டாம். உன் வாழ்வில் சிறிது பங்கெடுத்துக் கொள்ள அவளுக்கு இடம் விடு போதுமானது. என் கடைசி வேண்டுகோள். அவள் தாய், தெய்வமாக வணங்கக் கூடியவள். சித்ரா விஷயத்திற்காக என்னிடம் வேண்டிய வெகுமதி வாங்கி விட்டாள். நீ என்சொல்லை நிராகரித்தாலும் பரவாயில்லை. சித்ராவைப்போல் உனக்காக உயிர் வாழுகிறது அப்பெண். கடமை என்று எனக்கு மதிப்புக் கொடுத்தால் கொடு. இல்லையேல் ஈசன் விட்டவழி யாகிறது'' என்றார்.

அவர் நிலைமையும், சொல்லும், தோற்றமும் அவன் மனதை வாட்டின. ஒரு பக்கம் சித்ரா, ஒரு பக்கம் தந்தை; இருவருமாக அவன் மனதை வாட்டினார்கள். சித்ரா நிலைமை ஒன்றும் தெரியவில்லை. அவள் கஷ்டப்படத் தான் சுகமாக இருப்பதா? என்று நினைக்கும் பொழுது, தகப்பனார்? சகல ஸௌபாக்யங்களும் அளித்தவர், கடைசி வேண்டுகோள், ஈசா! என்னையேன் இவ்வித சோதனைக்கு ஆளாக்குகிறாய் என்று நினைக்கும் பொழுது ''அன்னையும் தந்தையும் தானே பாரில் அண்டசராசரம் கண்கண்ட தெய்வம்'' என்ற பாட்டு பக்கத்திலிருந்த ரேடியோவிலிருந்து எழும்பினது அவன் மனதைக் கவர்ந்தது. பாட்டு முடியுமட்டும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அது முடிவடையவும் அவன் மனமும் ஒரு முடிவை அடைந்து விட்டது.

௨௦௦௦ வருஷங்களுக்குமுன்

முன்னோர்கள் சந்தனத்தை குறைவற்ற தன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வர்க்கத்தின் "ரோல்ஸ் ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தனத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தனத்தைலம் இன்றியமையாததாக இருப்பதின் காரணம் அதன் சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனாண்ட காலத்தின் உண்மை என்றும் உண்மையே.

மைசூர் சந்தன சோப்

சந்தனம் குறிப்பது குற்றமற்ற குணமே

★ ★ மைஸூர் கவர்மெண்டு தயாரிப்பு ★ ★

"அப்பா! கவலைப்படாதேயுங்கள். உங்கள் இஷ்டப்படியே நடக்கிறேன்" என்றான் மனதில் எழும் புயலை அடக்கியவாறு.

"அப்பா! நீ ஸத்புத்ரன் என்பதைத் தெரிந்துதான் சொன்னேன்; பகவான் உனக்கு நன்மையைக் கொடுக்கட்டும்; வாழ்வில் சாந்தி ஏற்படட்டும்; சித்ரா உனக்குக் கிடைக்கும்படி ஈசனை வேண்டுகிறேன்" என்றார்.

* * *

சித்ராவின் குழந்தை சுபாஷ் காண்போர் மனதை கவரும் வனப்பும் சுறு சுறுப்பும் சாந்தமும் விளையாட்டுமுள்ளவனாக இருந்தான். தன் வீட்டில் குடியிருக்கும் குஜராத்தி பிராமணத்தியின் குழந்தையென்றும், அவள் புருஷனால் கைவிடப்பட்டதினால் படிப்பதாயும், குழந்தை எப்பொழுதும் தன்னிடமே இருக்குமாதலால் தான் எடுத்துக்கொண்டு வந்ததாகவும் சொல்லிக் கொண்டாள் சௌதாமினி.

சுகன்யா முதல், ஸீதாலக்ஷ்மிவரை குழந்தையைப் போற்றி வளர்த்தார்கள். வியாதிப் படுக்கையிலிருக்கும் தாத்தாவுக்குக்கூட சுபாஷிடம் தனி அன்பு ஏற்பட்டது. படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு பக்கத்தில் வைத்து விளையாடுவார். சௌதாமினியை 'அத்தை' என்று அழைக்கப் பழக்கியிருந்தாள். பிரபாகரன் சிலசமயம் அக்குழந்தையைத் தனியாக வைத்துக் கொஞ்சும் பொழுதும், நிலைக்கண்ணாடி முன் தோளில் வைத்துக்கொண்டு நிற்கும் பொழுதும் தன்னைப்போலவே இருக்கிறதே என்று ஆச்சரியப்படுவான். அவன் குழந்தையாக இருக்கும் பொழுது எடுத்த படமும், இக்குழந்தையும் ஒன்றாக இருப்பது என்ன ஆச்சர்யம் என்று, ஸீதாலக்ஷ்மி முதலியவர்கள் சொல்லிக்கொள்வதைக் கேட்ட, சௌதாமினியின் மனம் படபடக்கும். பல்லைக்கடித்துச் சமாளிப்பாள்.

கல்யாண ஏற்பாடு ஆனதும், ராகவன் சௌதாமினியிடம், "காரியம் மிஞ்சிவிடும் போலிருக்கிறதே? இன்னமுமா சத்யத்தைக் காப்பாற்ற வேண்டும்?" என்றான்.

"இது விஷயம் அவள் விரும்புவதுதானே; நடக்கட்டும். சத்யம் தவறக் கூடாது" என்றாள்.

"நான் அவளுக்கு விபரமாகத் தந்தி கொடுத்துக் கேட்டுவிடுகிறேன். ஏனென்றால் ஒரு சமயம் தெரியப் படுத்தினால் நான் வந்திருப்பேனென்று சொல்லலாம்; பெண் ஹ்ருதயம்" என்றான்.

"சரி" யென ஒத்துக்கொண்டாள்.

கல்யாணம் நடக்கப் போகுவதையும், அவள் வர சம்மதித்தால் கல்யாணத்தை நிறுத்தி விடலாமென்றும், ஸீதாலக்ஷ்மி கூட வரவேற்கத் தயாராக இருப்பாளென்றும் இருபத்தைந்து ரூபாய் செலவழித்துத் தந்தி அடித்தான். பதில் தன் சினேகிதன் வீட்டிற்கு அடிக்கும்படி விலாசம் கொடுத்திருந்தான்.

மறுதினம். "தீர ஆலோசித்தே பதில் கூறுகிறேன். கல்யாணம் நடக்கட்டும். சத்யத்தைக் காப்பாற்றுவீர்களென்று நம்புகிறேன்" என்று பதில் வந்து விட்டது.

"சௌதா? விதி அவள் மதியைக் கெடுக்கிறது. என்ன செய்யலாம்! சொர்ண விக்ரஹம் போன்ற குழந்தை. என்மனம் சஹிக்கவில்லை" என்று சொல்லி இடுப்பிலிருந்தசுபாஷின் கன்னத்தில் முத்தமிட்டான்.

"அவனுக்கென்ன. அன்பில் விளைந்த அமுதப்; அவனால் தான் அவள் இழந்த வாழ்வை அடையப் போகிறாள். இரண்டு தாரம் பிராரப்தம் போலும்" என்று அவளும் குழந்தையை முத்தமிட்டாள்.

"உம், 'அதிப்படித்த மூஞ்சோர் கழநீர்ப் பானையில் விழுந்ததாம்' என்பது போல், பிரும்மசர்யம், ஏகபத்தினி விரதம், கடமை, என்றெல்லாம் மிக மிகப் பிரசங்கம் செய்து புகழ் பெற்றான். அவனே இவ்விதம் நடக்க வேண்டி வருகிறது. நாம் என்ன செய்வது' என்று சமாதானம் செய்து கொண்டார்கள்.

நிச்சய தாம்பூலம் நடப்பதற்கு முன்னாக, பிரபாகரன் சுகன்யாவிற்கு ஒரு கடிதம் எழுதினான்:

சுகன்யா!

நான் இப்பொழுது செய்து கொள்ளுவது கல்யாணமல்ல. அது முன்னமே நடந்து விட்டது. கடமைக்கு ஒரு பெண்பலி, என் சம்மத மின்றி. சித்ரா இறந்து விட்டாள் என்ற முடிவிற்கு வந்தாலும் என் மனதை விட்டு அவள் அகலமாட்டாள். மற்றவர்களுக்கு அதில் இடமில்லை, நீ படித்த பெண். ஒரே செல்வம். உன் வாழ்நாளை வீண்நாளாக்கிக் கொள்ளாதே. இதற்கு வேறுயாராகிலும் வறுமையாலடிபட்டவராக இருந்தால் பணம் சுக ஸௌக்கியங்களில் மனம் திருப்தியடையக் கூடியவர்களாக வரட்டும். முன்னதாக உன்னை எச்சரித்து விட்டேன். பதில் அனுப்பிவிடு.

இப்படிக்கு,
பிரபாகரன்.

(தொடரும்)

விவாக ரத்து

து. ராஜகோபால்

அறையிற் பரவிய அகிற் கட்டையின் வாசனை மூக்கைத் துளைத்து மூளையைத் தாக்கிற்று, சட்டென்று கண் விழித்துப்பார்த்தேன். ஜன்னல் வழியாகப் பூரண சந்திரன் தன் வெண்கதிர்களைப் பரப்பி அறையிலிருந்த கட்டில், மேஜை முதலிய எல்லாப் பொருள்களையும் வெள்ளி மயமாக்கிப் புதுமெருகு கொடுத்துக் கொண்டிருந்தான். அறையில் வைக்கப் பட்டிருந்த சாமான்கள் ஏதோ லாகிரியில் கட்டுண்டு கிடப்பனபோல அசைவற்றுக் கிடந்தன. ஜல் ஜல் என்ற சதங்கையொலி இழைந்து வரும் வீணுகானமெனக் காதில் ஒலித்தது. கண்ணை மூடிக்கொண்டு, உள்ளத்தை ஒடுக்கிநிற்கப் பார்க்கும் யோகியைப் போல, அந்த இன்பப்பெருக்கின் மூலத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியி லீடுபட்டேன். பக்கத்தில் யாரோ நடமாடுவதனுலுண்டான புதுப் புடவையின் சல சலப்பு என் நிஷ்டையைக் கலைத்துக் கண்ணை விழிக்கச்செய்தது. அழகுத்தெய்வமென ஒருத்தி என் எதிரே நின்றிருந்தாள். என் கலையுணர்ச்சி தலைதூக்கியது. கையெடுத்துக் கும்பிட்டேன், அவளையல்ல. அவளுடைய அழகை.

நான் பேச ஆரம்பிக்கும்முன் அவளே ஆரம்பித்து விட்டாள். "நான் யாரென்பதைப் பற்றி அறிய நீ ஆவல்கொண்டிருப்பதை உன் கண்களில் ஒளிரும் பிரகாசமே எடுத்துக்காட்டுகிறது. நீ நினைப்பதுபோல் நான் தேவலோகத்துக் கன்னியல்ல, பூலோகத்துக் கன்னிதான். மகத சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தி சந்திர குப்தருடைய மனைவி. பெண்களுக்கு விவாகரத்துரிமை வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வருகிறுயென்று கேள்விப்பட்டேன். அதுதான் உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்'' என்று தேனினுமினிய குரலில் கூறினுள்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் பெண்களுக்கு விவாகரத்து உரிமை வேண்டுமென்று வாதாடும் சமூக சீர்திருத்த வாதிதான். ஆனுல் அதற்கும் அநேக நூற்றுண்டுகளுக்குமுன் பூலோகத்தில் ராணியாக வாழ்ந்ததாகச் சொல்லும் இவளுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியாமல் குழம்பினேன்.

என் குழப்பத்தைக் கண்டு அவளே கூற ஆரம்பித்தாள். "சம்பந்தம் உண்டு. இன்று மாலை நீ ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினுயல்லவா? சமீபத்தில் மேனுட்டில் நடந்த ஒரு ருசிகரமான விவாகரத்து வழக்கைப்பற்றிக் குறிப்பிட்டாயல்லவா? அது என்ன?'' என்று கேட்டாள்.

"ஆமாம், இன்று மாலைதான் பேசினேன். ஸௌதாம்ப்டன் என்ற இடத்தில் ஒரு யுவதி தன் கணவனிடம் விவாகரத்துக் கோரி அதைப்பெற்ற சமாசாரம் தானே. அவனும் அவளும் ஒரு படகில் உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்களாம். திடீரென்று உண்டாகிய புயற் காற்றினுல் படகு மூழ்க ஆரம்பித்தது. கணவன் மனைவியைக் காப்பாற்ற ஒரு வித முயற்சியும் செய்யாமலே தான் மட்டும் நீந்திக் கரைசேர்ந்து விட்டான். அதற்குள் ஜலத்தில் மூழ்கித் திக்குமுக்காடிக் கொண்டிருந்த மனைவியை, கரையிலிருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர் நீரில் குதித்துச் சென்று காப்பாற்றி விட்டார். ஆபத்துக் காலத்தில் மனைவியைக் காப்பாற்றத் தவறி, கோழையைப் போல் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள விரைந்த கணவனுடன் வாழமுடியாதென்பதும், கணவன் தன் கடமையிலிருந்து தவறி விட்டதால் விவாகரத்து அளிக்க வேண்டுமென்பதும் அவளுடைய வாதம். அதைத்தான் நான் இன்று பிரஸ்தாபித்தேன். இம்மாதிரி சமயாசமயமின்றி விவாகரத்துரிமையை துஷ்பிரயோகம் செய்வது கூடாதென்று கண்டித்தேன்.'' என்று கூறினேன்.

"ஆம், நீ கண்டித்தாயல்லவா? அதைப் பற்றிக் கூறத்தான் உன்னைத் தேடி வந்தேன். அதில் என்ன தப்பு? நான் சொல்லும் கதையைக் கேட்டுவிட்டு, முடிவுக்கு வா'' என்று கூறிவிட்டுத் தன்கதையை ஆரம்பித்துவிட்டாள். அவள் சொல்லிக்கொண்டே போனுள். நான் கேட்டுக்கொண்டே இருந்தேன். அவள் எப்பொழுது அறையை விட்டு வெளியே போனுள், எப்பொழுது பொழுது விடிந்தது என்பது ஒன்றுமே எனக்குத் தெரியாது. அவள் வந்தாளா என்பதே சந்தேகமாகத் தோன்றுகிறது எனக்கு. ஆனுல்

அவள் சொன்ன கதை. அதை எப்படி இல்லையென்று சொல்ல முடியும்?

1

மகத சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி ராமகுப்தன் நிலைகொள்ளாமல் கூண்டிலடைத்த புலிபோலத் தன் கூடாரத்தில் இங்குமங்கும் உலாவிக்கொண்டிருந்தான். ஜயமாலை சற்றுமுன் சொல்லிய விஷயம் அவனுடைய மனதைக் கலக்கிக் கொண்டிருந்தது. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்காதா?

ஜயமாலை கூறினாள்: "மகாராஜா! தங்கள் தேவி—துருவதேவி, தங்களை விரும்பவில்லை. அவள் மனம் தங்கள் தம்பியாகிய சந்திர குப்தரையே நாடுகிறது. அவள் தங்களை வெறுக்கிருளென்பதைச் சற்றும் ஒளிவு மறைவின்றி என்னிடம் கூறிவிட்டாள். நீங்கள் ஏமாற்றி, சூழ்ச்சி செய்து, அவளை மணந்துகொண்டீர்களாம். இதையெல்லாம் அவளே தன் வாயால் என்னிடம் கூறினாள்.

ஜயமாலை கூறியதில் தவறென்றுமில்லை என்பது ராமகுப்தனுக்கு நன்ருகத் தெரியும். மணமான இந்த ஒரு வருஷத்தில் அவள் அவனைத் தன்னிடத்தில் நெருங்கக்கூட விடவில்லை. அவனைக் கண்டால் சீறி விழும் அவளுடைய மனதில் கொஞ்சம்கூட காதல் இல்லையென்பதை அவன் அறிவான். ஆனால் உலகிலேயே மிகச் சிறந்த அழகு வாய்ந்த அவளைக் கசக்கி மோந்துபார்க்க விரும்பவில்லை. தானே கனியட்டுமென்று விட்டு வைத்திருந்தான்.

ராமகுப்தனின் தகப்பன் சமுத்திரகுப்தன் திக்விஜயத்திற்குப் புறப்பட்டபொழுது நடந்தது அது. மாளவ தேசத்து அரசன் தன் புத்திரி துருவதேவியை மகத சாம்ராஜ்யத்தின் ராணியாக்க விரும்பினுன். ஆகவே அவன் திக்விஜயத்திற்குச் சென்ற சமுத்திர குப்தனுக்கு மரியாதை செய்ய விரும்பி அவளையும் பரிசாக அனுப்பிவைத்தான், சமுத்திர குப்தனும் வெகு சந்தோஷத்துடன் அவளைத் தன் மருமகளாக ஏற்றுக்கொண்டு திரும்பினுன்.

சமுத்திர குப்தனின் இளைய மனைவிக்குப் பிறந்தவன் ராமகுப்தன். முதல் மனைவி—பட்டத்தரசிக்குப் — பிறந்தவன் சந்திரகுப்தன். ராமகுப்தன் சந்திரகுப்தனைக் காட்டிலும் நான்கு நாழிகை நேரம் பெரியவன். அதாவது ராமகுப்தன் பிறந்த நாலு நாழிகைக்குப் பிறகு சந்திரகுப்தன் பிறந்தான். சந்திரகுப்தன் இயற்கையிலேயே அரசனுக்குரிய குணங்களைப் படைத்தவன். சுத்த வீரன். கலங்காத உறுதி படைத்தவன். ஆனால் ராமகுப்தனே நேர் எதிர். மகா கோழை. குடியன். சிற்றின்பப் பிரியன்.

இயற்கையாகவே சமுத்திரகுப்தன் சந்திர குப்தனையே அதிகம் நேசித்து வந்தான். தனக்குப்பின் மகத சாம்ராஜ்யத்தின் வெற்றிக்கொடி விழாமல் காப்பாற்றக்கூடிய தோள்வலி அவனுக்குத்தான் உண்டென்று அடிக்கடி கூறி வந்தான். அவனையே இளவரசனுக்கவும் தீர்மானித்திருந்தான்.

விதி இளைய ராணியின் ரூபத்தில் குறுக்கிட்டது. இளைய ராணியின் அழகிலும், யௌவனத்திலும் மயங்கிக் கிடந்த சமுத்திர குப்தன் அவளுடைய பேச்சை எப்படித் தட்டிக் கழிப்பான்? அவள் கூறுவதும் வாஸ்தவம் தானே! என்ன இருந்தாலும் மூத்தவன், மூத்தவன்தானே. நாலு நாழிகையானுலென்ன? நாலு வருஷங்களானுலென்ன? அரசன் முதலில் பிடிவாதமாக மறுத்தான். ஆனுல் கடைசியில் இணங்கி விட்டான்.

துருவதேவி சந்திரகுப்தனின் அழகையும் வீரத்தையும் கேள்விப்பட்டிருந்தாள். அவளையுமறியாமலே அவளுடைய மனம் அவனை நாடியது. ஆனுல் விதி இம்மாதிரி சதி செய்யுமென்று கனவிலும் நினைக்கவில்லை, என்ன செய்வது?

கடந்த நாட்களின் நினைவு ராமகுப்தனின் மனத்தில் அலையலையாகப் பொங்கி வந்தது. இனி காலங்கடத்துவது வீண் என்றுபட்டது அவனுக்கு. மயிலே மயிலே என்ருல் இறகு போடுமா? அதோடுகூட ஜயமாலை கூறிய விஷயம் அவனுடைய மனதில் குழப்பத்தை உண்டாக்கியது. முன் தினம் மாலை அவளுடைய கூடாரத்திற்குச் சென்றிருந்தான். எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான். காரியம் கைகூடவில்லை. ஆனுல் அவள் மனம் சற்று இளகி இருக்கிறதென்பதற்குரிய அடையாளங்கள் இல்லாமற் போகவில்லை.

கொஞ்ச நேரம்வரை ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான். பிறகு ஏதோ தீர்மானத்திற்கு வந்தவன்போல் கூடாரத்தை விட்டு வெளியே வந்து துருவதேவியின் கூடாரத்தை நோக்கி நடந்தான்.

2

துருவதேவிக்கும் மனம் ஒரு நிலையில் இலலை. அலைகடற்பட்ட துரும்புபோல் அவள் மனம் அலைந்தது. சென்ற ஒரு வருஷ காலமாக நடந்த விஷயங்கள்

அழகின் சிறப்பு

சருமசுகத்தின் மகிமையே

உங்கள் வசீகரம் பெரும்பாலும் மேனியழகை பொறுத்திருக்கிறது. மேனியழகு சருமசுகத்தினால் மட்டுமே ஏற்படுகிறது. சருமத்தைப் போஷிக்கும் குணமுடையதும் ஆன்டிஸெப்டிக்குமான தைலங்கள் சேர்ந்துள்ள கேடில் ரெக்ஸோனாவில் அடங்கியிருப்பதால் அது சருமத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதுமல்லாமல் சரும அழகு ஏற்படவும் உதவுகிறது. அதிசீக்கிரத்தில் தாராளமாயுண்டாகும் ரெக்ஸோனாவின் நுரை சருமத்திற்குள் சுகமளிக்கும் கேடிலை சேர்த்து ஆற்றலுடன் அழகையும் கொடுக்கின்றது. கேடில் கலந்துள்ள விசேஷமான சோப் இது ஒன்றே. அதனாலேயே, சருமத்தை மச்ச மறுக்களிலிருந்து பாதுகாத்து ஆரோக்கியத்தையளித்து ஒவ்வொரு மங்கையும் விரும்பும் மேனியழகைத்தரும் குணத்தை இச்சோப்புப் பெற்றிருக்கிறது.

ஆரோக்கிய மிகுதியால் சோபையடையும் சருமத்தை முக்கியமாகக் கருதும் ஆடவர்கள், ரெக்ஸோனாவின் சுறுசுறுப்பளித்து சக்தியை ஊட்டும் திறமையை மெச்சுவார்கள். சுகமான சருமமேற்பட விரும்பும் ஆடவர்களுக்கு, ரெக்ஸோனா இன்றியமையாதது என்று உண்மையாக சொல்லலாம்.

குழந்தைக்கு ரெக்ஸோனா: குழந்தையின் மெல்லிய சருமத்தில் புண்கள், சினைப்புகள் ஏற்பட வழியுண்டு. ரெக்ஸோனாவின் மருந்து சேர்ந்த நுரை சிறு கைகால்களை சாதாரண சரும வியாதிகளிலிருந்து காப்பாற்றுகிறது.

★ ரெக்ஸோனாவிலுள்ள கேடில், ஆன்டிஸெப்டிக்கும் சுகமளித்துப் போஷிக்கும் தன்மையுடையதுமான தைலங்கள் சேர்ந்த விசேஷ கலப்பு மருந்து. இம்மருந்து சருமப் பாதுகாப்பிற்கு ரொம்பவும் உத்தமமானது.

சருமசுகத்திற்கு ரெக்ஸோனா

RP. 31A-23-40 TM REXONA PROPRIETARY LIMITED

ஒவ்வொன்றாக அவள் மனக்கண்முன் எழுந்தன. அவளுக்குத் தன் வாழ்க்கையின் மீதே வெறுப்பு உண்டாயிற்று. சந்திரகுப்தனை மணக்கப் போவதாகக் கண்டுகொண்டிருந்த அவள் கனவு பாழ்த்துப் போனது முதல் அவள் பைத்தியம் பிடித்தவள் போலவே ஆகிவிட்டாள். முதலில் எவ்வளவுதான் மனத்தைத்திருப்ப முயன்றாலும் முடியவில்லை. ஆனால் காலம் செல்லச் செல்ல அவளுடைய மனம் மாறித்தான் வந்தது. என்ன இருந்தாலும் அக்னி சாட்சியாகக் கைப்பிடித்த கணவனல்லவா? முதலில் எதிர்ப்பைக் காட்டிவிட்டுத் திடீரென்று அடங்கிப்போக அவளுடைய அகங்காரம் இடம் கொடுக்கவில்லை. என்ன இருந்தாலும் அரசவம்சத்தில் உதித்தவளல்லவா?

இயற்கையின் வனப்பில் ஈடுபடுத்தி இயற்கைக் காட்சிகளை அனுபவிக்கவைத்து அவளை வசப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் ராமகுப்தன் தன் நாட்டின் எல்லையில் வானளாவ விளங்கி நிற்கும் இமயமலைச் சாரலில் கூடாரமடித்திருந்தான். அவளை வசப்படுத்தச் செய்யாத முயற்சிகளில்லை. காரியம் ஓரிரண்டு நாளில் வசப்பட்டுவிடும் என்று நம்பிக்கையுடன் இருந்தான்.

அவனுடைய நம்பிக்கையும் வீண் போகவில்லை. துருவதேவியின் மனம் ராமகுப்தனுடைய நிலையைக் கண்டு இரங்கிவிட்டது. முதல்நாள் அவன் அவள்முன் மண்டியிட்டு இறைஞ்சியபோது அவள் மனம் மெழுகென உருகிவிட்டது, என்ன இருந்தாலும் பெண்தானே. இன்னும் பிணக்கம் கொண்டிருப்பதாக நடித்தாள். மனதில் பிணக்கொன்றுமில்லை. ஆனால் அவளுடைய அந்த அகங்காரம் வெளிப்படையாகத் தன் விருப்பத்தைத் தெரிவிக்காமல் தடுத்து விட்டது. ராமகுப்தன் துணிந்து அருகே சென்று அணைந்திருந்தால் ஒரு வினாடியில் பிணக்கு மலையேறி யிருக்கும். ஆனால் ராமகுப்தன் தவறிவிட்டான். சிறு தவறுதான். ஆனால் அதுவே அவனுக்கு எமனாக முடிந்துவிட்டது. ஆனால் சமயத்தில் செய்யத் தவறிய சிறு காரியம் இத்தனை விபரீத பலனையளிக்குமென்பது யாருக்குத் தெரியும்?

3

ராமகுப்தன் கூடாரத்தில் நுழைவதைக் கண்டதும் துருவதேவி சட்டென்று எழுந்தாள். அவளுடைய மனம் அன்று கட்டுக்கடங்கால் தவித்துக் கொண்டிருந்தது, முதல்நாளைய நிகழ்ச்சியின் இன்பக்கற்பனை அவள் மனத்தில் ஊற்றெடுத்துக் கொண்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் ராமகுப்தனின் வரவு அவளுக்கு ஆனந்தத்தையே அளித்தது.

''ப்ரியே'' என்று ஆரம்பித்த அவனுடைய குரல் கூடாரத்திற்கு வெளியில் கேட்ட அரற்றலினால் சட்டென்று தடைப்பட்டது. ''அரசே! அபாயம். அபாயம்!'' என்று மந்திரி தூமகேது கூவிக்கொண்டு வருவதைக் கண்ட அரசன் பிரமித்து நின்றுவிட்டான். அபாயம் என்ற சொல்லைக் கேட்டதுமே அவனுடைய கை கால்கள் வெடவெடவென்று நடுங்க ஆரம்பித்துவிட்டன. அவன் வாயிலிருந்து குரல் கிளம்ப மறுத்துவிட்டது. தட்டுத் தடுமாறி விஷயம் என்னவென்று கேட்டான்.

அமைச்சன்கூறிய விஷயம் அக்கினி வர்ஷமென அவன் காதில் புகுந்தது. அவன் மனம் குழம்பியது. செய்வதின்னதெனத் தெரியாது திகைத்து நின்றான்.

விஷயம் இதுதான். பக்கத்து நாட்டரசன் சகராஜன் திடீரென்று தன் படையுடன் வந்து வளைத்துக்கொண்டுவிட்டான். மூன்று பக்கமும் மலை. நான்காவது பக்கத்தில் சகராஜனுடைய முற்றுகை. இந்த நிலையில் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை. ராமகுப்தனுக்கும் சண்டைக்கும் வெகு தூரம். கத்தியைக் கண்டால் காத தூரம் ஓடும் ராமகுப்தன் சண்டையென்ன செய்வான்? ராஜ்ய காரியத்தைக் கவனிப்பது சந்திரகுப்தன்தான். ஆனால் அவன்தான் இப்பொழுது என்ன செய்ய முடியும்? பக்கத்துக் காட்டில் வேட்டைக்குச் சென்றிருக்கும் அவன் திரும்பிவந்தால் ஏதாவது செய்யலாம். அப்படித்தான் என்ன செய்துவிட முடியும். அவனுடன் இருக்கும் ஐம்பது வீரர்கள் என்ன செய்துவிடமுடியும்?

''தூமகேது! என்ன செய்வது? சரணடைவதா? அதைத் தவிர வேறு வழியில்லையா?'' என்றான் அரசன் தீனமான குரலில்.

''இல்லை மகாராஜா, சும்மா சரணடைவதை மட்டும் எதிரி விரும்பவில்லை. அவன் வேறொரு பொருளை விரும்புகிறான். அவன் விரும்பும் பொருளைக் கொடுத்துவிட்டால் நாம் தப்பிவிடலாம்'' என்று சிறிது ஆசை தோன்றக் கூறினான் தூமகேது.

அரசன் வெகு ஆவலுடன் அது என்ன பொருள் என்று கேட்டான்.

அமைச்சன் தயங்கிக் கொண்டே கூறினான். அவன் கூறியதைக் கேட்டதும் அரசனின் முகம் வெளுத்துவிட்டது.

துருவ தேவிக்குக் கல்யாணமாகுமுன் அவளை மணம் செய்துகொள்ளவேண்டுமென்று சகராஜன் மாளவ அரசனிடம் தூது அனுப்பியிருந்தான். துருவதேவியின் தகப்பனும் யோசிக்கிறேனென்று சொல்லியிருந்தான். ஆனால் பின்னால் நடந்த விஷயங்கள் சகராஜனுக்கு ஆத்திரமூட்டிவிட்டன. ஆகவே அவன் சமயம் பார்த்து அவளை அபகரிக்கத் திட்டம்போட்டு அதன்படி செய்தும்விட்டான். அவனுடைய நிபந்தனை இதுதான். துருவதேவி உடனே சகராஜனிடம் அனுப்பப்படவேண்டும். இன்றேல் ராமகுப்தன் இறப்பதும் நிச்சயம்; துருவ தேவி சிறை பிடிக்கப்படுவதும் நிச்சயம்.

தன் உயிருக் கேற்பட்ட ஆபத்தைக் கண்டதும் ராமகுப்தனின் காதல் கரைந்து விட்டது. அவனுடைய கோழை மனம் அருவருக்கத் தக்க அந்த நிபந்தனைக்கு ஆதரவளிக்க ஆரம்பித்தது. எப்படியிருந்தாலும் துருவதேவி தப்பப் போவதில்லை. அனாவசியமாக ஏன் உயிரைவிடவேண்டும்? உயிரோடிருந்தால் பிறகு சகராஜனைத் தோற்கடித்து துருவதேவியைச் சிறை மீட்கலாம் என்று கூறியது மனம்.

அமைச்சனும் அரசனும் அதைப்பற்றி விவாதித்து ஒரு முடிவிற்கு வந்துவிட்டனர்.

துருவதேவி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு நின்றுகொண்டிருந்தாள். அவள் மனம் துடிதுடித்தது. உடலும் பதை பதைத்தது. சகராஜனை அப்படியே குத்திக் கிழித்துவிட வேண்டுமென்று கோபம் வந்தது. ஆனால் அவள் என்ன செய்வாள்?

அரசன் கூறினான். 'தேவி' அமைச்சர் கூறியதை கேட்டாயல்லவா? உன்னை......'' அவனுடைய குரல் அவளுடைய காதில் நாராச மெனப்பாய்ந்தது. அவன் மீது அவளுக்கு உருவாயிருந்த அன்பு அந்த க்ஷணத்தில் வெறுப்பாக மாறியது. கோபங் கொண்ட காளியாக மாறி அவனை நோக்கி விழித்தாள்.

ராமகுப்தன் அவளுடைய அந்த நிலையைக் கண்டு சற்றே பயந்துவிட்டான். இருந்தாலும் சமாளித்துக்கொண்டு மறுபடியும் சொன்னான். ''நான் உன்னை அனுப்பி விடப்போகிறேன். தயாராகு.''

மிதியுண்ட நாகம்போலச் சீறினாள் அவள். ''என்ன? என்னை அனுப்பப் போகிறீர்களா? சீ! வெட்கமில்லை. நீங்களும் ஒரு அரசர்? உங்களுக்கொரு கிரீடம். அக்னி சாட்சியாக மணந்த மனைவியைக் கைவிட விரும்பும் நீங்களும் புருஷனென்று சொல்லிக்கொள்ள வெட்கமில்லை?'' எல்லையற்ற வெறுப்பினால் அவள் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள்.

''ஆம், மணந்தேன். மணந்ததைத் தவிர நான் வேறென்ன கண்டேன். என்வரையில் நீ என்மனைவியல்ல. நீ மனைவிக்குரிய கடமையைச் செய்யத் தவறிவிட்டாய்.''

துருவ தேவிக்குத் தான் செய்த பிழை மனதில் தைத்தது. வாஸ்தவம்தானே. மனைவி செய்ய வேண்டிய கடமையை மறந்தது தவறுதானே. அடுத்த க்ஷணம் அவள் மனம் மாறிவிட்டது. எப்படியிருந்தால் என்ன? அக்னி சாட்சியாக மணந்த கணவன் ஆபத்துக் காலத்தில் கைவிடுவது மட்டும் தருமமா? போனது போகட்டும். இந்த ஆபத்து நம்மிருவரையும் ஒன்று சேர்த்து வைக்கட்டுமே. இருவரும் சேர்ந்து வீர சொர்க்கமடைந்து குல கௌரவத்தைக் காப்பாற்றலாமே.

''ஏன் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லையா? முடிந்த வரையில் சண்டையிட்டு வீரசொர்க்கம் புகலாமே'' என்றாள்.

மன்னன் வாய்திறக்கவில்லை. அவன் சற்றும் தளர்ந்ததாகத் தெரியவில்லை.

துருவதேவியின் கண்களில் நீர் ததும்பியது. அவன் காலில் விழுந்து கெஞ்சினாள்.

''நான் இதுவரை செய்த குற்றத்தை மன்னித்து விடுங்கள். ஆபத்து நம்மிருவரையும்பிணைத்துவிட்டது. பெண்களுக்குக் கணவனைத்தவிரப் புகலிடம் வேறு எது? நான் உங்களை உதாசினம் செய்தேன் என்பதற்குப் பழிவாங்க விரும்பினால் இந்தாருங்கள், இந்தக் கத்தியினால் உங்கள் கையாலேயே என்தலையைத் துண்டித்துவிடுங்கள், பெண்களுக்கு மானம்தானே பெரிது? அது போனபின் உயிர் வாழ்ந்துதான் என்ன பயன்? என் அகந்தை பொடிப் பொடியாகி விட்டது. தயங்காதீர்கள். இதனால் உங்கள் குல கௌரவம் காப்பாற்றப்படும்.''

இதற்குள் தூமகேது தடுத்துக்கூறினான். ''இல்லை அரசே! கூடாது. இவளைக்கொல்வதால் லாபமில்லை. சகராஜன் ஆத்திரத்தினால் உங்களைக் கொன்று விடுவது நிச்சயம். அரசியல் சாஸ்திரப்படி அரசன் உயிர்தப்ப எந்த உபாயமும் செய்யலாம். ஆகவே யோசியாதீர்கள். இவளைச் சகராஜனிடம் அனுப்பிச் சமாதானம் செய்துகொள்வதே புத்திசாலித்தனம்.''

துருவதேவியின் கண்கள் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளின் கண்களையொப்பத்

தீப்பொறிகளைக் கக்கின. ஒரு கணம் யோசித்தாள், "சீ! வெட்கங் கெட்டபதரே! நீ என்னைக் கைவிட்டு விட்டாய். மனைவியை எந்தக் காலத்திலும் காப்பாற்றுவதாகக் கூறிக் கைப்பற்றிய வாக்கைத் தகர்த் தெறிந்தாய். இதோ. நானே என்னைக் காப்பாற்றிக் கொள்ளுகிறேன்." என்று கூறிக்கொண்டே கத்தியை ஓங்கிக் கொண்டு ராமகுப்தனின் மீது பாய்ந்தாள்.

4

வேட்டைக்குப் போயிருந்த சந்திர குப்தனுடைய மனம் அன்று அதில் ஈடுபடவில்லை. காரணமறியாமல் மனம் கலங்கிக் கொண்டிருந்தது. அண்ணன் ராமகுப்தனை நினைக்கும்பொழுது அவனுக்கு வருத்தமே உண்டாயிற்று. சுத்த வீரனுடைய குமாரனாக இந்தக் கோழை எங்கிருந்து பிறந்தான் என்று அவன் மனம் கேட்டது. சந்திரகுப்தனுக்குத் தான் பட்டத்துக்கு வருவது ஒன்றும் கஷ்டமான காரியமல்ல. ஆயினும் தந்தைக்களித்த வாக்குறுதியைத் தகர்க்க விரும்பவில்லை. எல்லாவிதத்திலும் ராமகுப்தனைக் காப்பாற்றுவதாகத் தந்தையிடம் வாக்குக் கொடுத்திருந்தான். ஆகவே சத்தியத்திற்குக் கட்டுப்பட்டிருக்கும் யானை தன் சக்தியெல்லாம் அடக்கிச் சும்மாவிருப்பது போல அவனும் இருந்தான். வேட்டையிலே மனம் செல்லாமற் போகவே அவன் கூடாரத்தை நோக்கித் திரும்பினான்.

துருவதேவியின் கூடாரத்தின் ஓரமாகச் செல்லும்போது உள்ளே ஏதோ கலவரம் நடப்பது போன்ற சப்தம் கேட்டுச் சற்று நின்றான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. துருவதேவியின் ஆவேசப் பேச்சுகள் மட்டும் ஸ்பஷ்டமாகக் காதில் விழுந்தன. அதைக்கேட்டு வேகமாகக் கூடாரவாயிலை நோக்கி நடந்தான்.

அவன் கூடாரத்தில் நுழைவதற்கும் துருவதேவி கத்தியை ஓங்கிக்கொண்டு ராமகுப்தனின் மேல் பாய்வதற்கும் சரியாக இருந்தது. சட்டென்று துருவதேவியின் கையைப்பிடித்து நிறுத்தினான்.

துருவதேவி தன் செய்கைக்காக வெட்கமடைந்தவள் போல் தலையைக்குனிந்து கொண்டாள். பொங்கிவந்த அழுகையை அடக்கமுடியாமல் முகத்தைக் கையினால் மூடிக்கொண்டு விம்ம ஆரம்பித்து விட்டாள்.

சந்திரகுப்தனைக் கண்டதும் ராமகுப்தன் சற்றுத் தைரியமடைந்தான்.

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்
நார்த் பீச் ரோட், மதராஸ்.

●

மதராஸ் ஆபீஸ்கள்:
எஸ்பிளனேட், மவுண்ட் ரோடு, திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம், எழும்பூர்.

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் - ரூ. 71,10,900
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 51,67,608
ரிஸர்வ் நிதி - - ரூ. 61,50,000
டிபாஸிட் ரூ. 17 கோடிக்குமேல்

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்.
செக்ரெடரி.

"இதெல்லாம் என்ன? என்றான் சந்திர குப்தன். அவனுடைய குரலில் தொனித்த கடுமை ராமகுப்தனின் வாயை அடைத்து விட்டது. கண்கள் மட்டும் கெஞ்சும் குரலில் அமைச்சனின் வாயை நாடின. அமைச்சன் நடந்தவற்றை ஆதியோடந்த மாகக் கூறினான்.

சந்திரகுப்தனுக்கு அமைச்சன் கூறிய தைக் கேட்டதும், உடல் துடித்தது. ரத்தம் கொதித்துக் குப்பென்று முகத்திற் பாய்ந்து முகத்தைச் சிவக்கச் செய்து விட்டது. "அந்தப் பேடி சகராஜன் இப் படியா செய்தான்? ஆண்மையிருந்தால் நேர்மையாக வல்லவா எதிர்க்கவேண்டும்." என்று கர்ஜித்தான்.

"இப்பொழுது என்ன செய்வது? நடந் தது நடந்து விட்டது. இன்று மாலைக்குள் நாம் அவனுக்குத் தகவல் தெரிவிக்கா விட்டால் அவன் நம்மைப் பிடித்துவிடுவான். இந்தச் சமயத்தில் அவன் கூறியபடி......"

"சீ! நீயும் ஒரு அமைச்சனா? வெட்க மில்லை"

சந்திரகுப்தன் ஏதோ யோசிப்பவன் போலச் சற்று அங்குமிங்கும் நடமாடினான். பிறகு ஏதோ தீர்மானத்திற்கு வந்தவன் போல் "ஹூம், அதுதான் சரி." என்று வாய்விட்டுக் கூறினான்.

ராமகுப்தனும், அமைச்சனும் அவன் வாயிலிருந்து வெளிவரப்போகும் வார்த் தைகளை, வைத்தியன் வாயிலிருந்து நம்பிக்கை யூட்டும் சொற்களை எதிர்பார்க் கும் நோயாளியைப் போல எதிர்பார்த் தனர்.

"அமைச்சரே! சகராஜனுடைய இஷ்டப் படி துருவதேவி இன்று மாலை அவனிடம் அனுப்பி வைக்கப் பெறுவாள். இந்தச் செய்தியைக் காலதாமதம் செய்யாமல் சகராஜனுக்குத் தெரிவித்துவிட ஏற்பாடு செய்யவும்" என்றான் கம்பீரமாக.

"என்ன! துருவதேவியை அனுப்புவதா?" என்று ஏககாலத்தில் இருவரும் கேட்டனர்.

"ஆம்" என்றான் அழுத்தந் திருத்தமாகச் சந்திரகுப்தன்.

சந்திரகுப்தன் தன்னுடைய ஏற்பாட் டைக் கூறக் கேட்டபோது ராமகுப்த னுடைய மனதில் ஆனந்தமே உண்டா யிற்று. ஆதிமுதல் ராமகுப்தனுக்குச் சந்திர குப்தனிடம் உள்ளூரப்பகை. சந்திரகுப்தன் ஒழிந்து விட்டால் நிம்மதியாக இருக்கலா மென்பதுதான் ராமகுப்தனின் எண்ணம். இப்பொழுது சந்திரகுப்தன் சொன்ன உபாயம் அவனுக்குக் கட்டாயம் ஆபத்தை உண்டாக்கு மென்று ராமகுப்தன் நினைத் தான். ஆகவே ஒழிந்தது சனி என்று நிம்மதியுடன் அந்த ஏற்பாட்டிற்கு இணங் கினான்.

5

சகராஜனுடைய கூடாரம் குதூகலக் களஞ்சியமாக விளங்கியது. நெடுநாட் களாகத்தான் கண்ட ஆசைக்கனவு பூர்த்தி யாகப்போகும் தருணத்தை எதிர்பார்த்து ஆனந்தக்கடலில் மூழ்கி யிருந்தான் அவன். துருவதேவியை அடைவது மட்டுமன்றி மகதசாம்ராஜ்யத்தின் மதிப்புக்கு மாசுண் டாகும் பெருமை அவனைச் சேருமல்லவா? உண்மையில் இந்த நிபந்தனைக்கு—வெட்கங் கட்ட நிபந்தனைக்கு ராமகுப்தன் இவ்வளவு லேசாக உடன்பட்டு விடுவா னென்று அவன் கனவிலும் கருதவில்லை. மகத மன்னனை அவமானப்படுத்தி எதிர்காலத் தில் தனக்குக் கிட்டப்போகும் சக்கரவர்த் திப் பதவியை நினைத்து, அவன் உள்ளம் ஆனந்தசாகரத்தில் அமிழ்ந்து திளைத்தது.

சந்திரன் உதித்து ஐந்துநாழிகையாகி விட்டது. இன்னும் அவர்களைக்காணோம். ஆகாயத்தில் பிரகாசிக்கும் பூர்ணசந்திரன் கூட சகராஜனுடைய ஆனந்தத்தில் பங் கெடுத்துக் கொண்டு மந்தகதியில் ஊர்ந்து கொண்டிருந்தான்.

அவனுடைய மனம் கட்டுக்கடங்காமல் தவித்தது. "என்ன! இன்னுமா வரவில்லை?" என்று கத்தினான். மறுநிமிஷம் காவலாளி ஓடோடியும் வந்து தெரிவித்தான். "அரசே அவர்கள் வந்துவிட்டார்கள்; பல்லக்குகள் வந்துகொண்டிருக்கின்றன"

அரசனுடைய கை மீசையின்மீது படிந்து முறுக்கிவிட்டது. "திராட்சைரசம்" என் றது அவன் வாய். ஒரு பணிப்பெண் தங்கக் கிண்ணத்தில் மதுவை வார்த்துக் கொடுத்தாள். அதைச் சொட்டுச் சொட் டாகப் பருகிக்கொண்டே உத்தரவிட்டான். "அவர்கள் வந்ததும் ராணியை இங்கே அனுப்பச்சொல்"

ஒரு நாழிகை நேரம் சென்றிருக்கும். சேனாதிபதி உள்ளே நுழைந்தான். "அரசே ராணியுடன் கூட ஒரு தோழியும் பதினைந்து பணிப் பெண்களும் வந்திருக்கிறார்கள். ராணி தோழியைவிட்டுப் பிரிய மாட்டா ளாம்" என்றான்.

"சரி, ராணியையும் தோழியையும் இங்கே அனுப்பு. தோழியைப் பிரிக்க எனக்கு வழி தெரியும்" என்று கூறிவிட்டுச் சிரித்தான் சகராஜன்.

மறு நிமிடம் ராணியும் தோழியும் உள்ளே நுழைந்தார்கள்.

"அரசே! அடியாள் துருவதேவி நமஸ்கரிக்கின்றேன்" என்று கூறி நமஸ்கரித்தாள் ஒருத்தி.

அதற்குள் மற்றொருத்தி "அரசே! பொய், பொய். அவள் துருவதேவி யல்ல. அவள் என் தோழி சந்திரிகா" என்றாள் அவசர அவசரமாக.

அரசனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. திகைத்துவிட்டான். இருவரும் அழகாகவே இருந்தனர். அவனுக்குத் துருவதேவி யார் என்பது விளங்கவில்லை. துருவதேவியின் அழகைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறானே தவிர நேரில் கண்டதில்லை. இதற்குள் இருவரும் பிரமாதமாகச் சண்டைபோட ஆரம்பித்துவிட்டனர். அரசன் இருவரையும் சமாதானப்படுத்த முயன்று அருகில் சென்றான். அதற்குள் ஒருத்தி மற்றவள் கையைப் பிடித்துக் கூந்தலை இழுத்தாள். என்ன ஆச்சரியம்! கூந்தல் கையோடு வந்துவிட்டது. அங்கே பெண்ணைக் காணோம். சந்திரகுப்தன் உருவியவாளுடன் நின்றான்.

சந்திரகுப்தனைக் கண்டதும் சகராஜன் சீறி யெழுந்தான். அவனுடைய கை வாளைத் தழுவியது. மறு நிமிடம் இருவருக்கும் கோர யுத்தம் மூண்டது. மின் வெட்டுப் போல, சந்திரகுப்தனின் வாள் சகராஜனின் மார்பில் ஊடுருவிப் பாய்ந்தது. அதே சமயத்தில் மற்றக் கூடாரங்களிலிருந்தும் தினக் குரல்கள் கிளம்பின.

துருவதேவியுடன் கூடவந்த பதினைந்து பணிப் பெண்கள் சந்திரகுப்தனுடைய தேர்ந்தெடுத்த வீரர்கள்தான். எதிரியைத் தாக்கப் பெண்ணுருக் கொண்டுவந்திருந்தனர். சகராஜன் இருநூறு பேர்களை மட்டும் அழைத்துக்கொண்டு அங்கே வந்திருந்தானென்பதை அறிந்த சந்திரகுப்தன் உயிருக்குத் துணிந்து அந்த ஏற்பாட்டைச் செய்தான். இதில் வெற்றி ஏற்படுமென்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஆனால் குல கௌரவத்தையாவது காப்பாற்றலாமென்பதுதான் அவன் எண்ணம்.

அரசனும் சேனாதிபதியும் இறந்த விஷயம் கேள்விப்பட்டதும் வீரர்கள் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிட்டனர். சந்திரகுப்தன் வெற்றி வீரனாக நின்றான். அவனுடைய ஏற்பாட்டின்படி அவனும் மற்ற வீரர்களும் மட்டுமே வருவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் துருவதேவி பிடிவாதமாகத் தானும் வருவேனென்று சொல்லி அவளும் வந்துவிட்டாள். சந்திரகுப்தனும் சம்மதித்து அவளையும் அழைத்து வந்திருந்தான்.

கொஞ்சதூரத்தில் மறைந்திருந்த ராமகுப்தனும் மற்ற வீரர்களும் அவ்விடத்தை நோக்கி வந்தார்கள். அவர்கள் சந்திரகுப்தனுக்கு உதவி செய்யவே வந்தனர். ஆனால் அதற்கு அவசியமேற்படாமலேயே காரியங்கள் நிகழ்ந்துவிட்டன.

6

ராமகுப்தன் கொண்ட ஆனந்தத்திற்கு அளவே யில்லை. அவன் சந்திரகுப்தனை வாயாரப் புகழ்ந்தான். அவனுடைய சாமர்த்தியத்தையும் வீரத்தையும் மெச்சினான்.

ஆபத்து நீங்கிவிட்டதை யறிந்த அவன் மனம் மறுபடியும் துருவதேவியை நாடியது.

கணவன் என்ற உணர்ச்சி தலைதூக்கியது. ஆகவே அவன் துருவதேவியின் அருகில் சென்று அவள் கையைப்பிடிக்க முயன்றான்.

வெடுக்கென்று விலகி நின்றாள் தேவி. ராமகுப்தன் புரிந்துகொண்டு விட்டான். சட்டென்று புன்னகையை வரவழைத்துக் கொண்டு சொன்னான்: "சென்றதை மறந்து விடு. இந்த ஆபத்து நம்மிருவரையும் பிணித்துவிட்டது என்று நீயே சொன்னாயல்லவா? நீ என் தர்மபத்தினியல்லவா?" அவனுடைய குரல் கெஞ்சும் பாவனையில் இருந்தது.

"சீ! தர்மபத்தினியாம். யார் தர்மபத்தினி? நானா? ஆம். நான் உன்னுடைய தர்ம பத்தினியாகத்தான் இருந்தேன், அக்னி சாட்சியாக மணந்துகொண்ட உன்னுடைய கட்டுக்குள் அடங்கித்தான் இருந்தேன். ஆனால் உன்னுடைய அந்தச் செய்கை—மானங்கெட்ட கோழைத்தனம் என்னை அந்தப் பந்தத்திலிருந்து விடுவித்து விட்டது. என்று சீறிக்கொணடு சொன்னாள் தேவி.

"இல்லை. நான் இனி ஒரு பொழுதும் அப்படி நடந்துகொள்ள மாட்டேன். அந்தப்புனிதமான பந்தத்தை, கல்யாணக் கட்டை அறுத்தெறியாதே."

"எது? கட்டு எது? ஆபத்துக்காலத்திலே கைவிடப்பட்ட நான் சுதந்திரமடைந்து

விட்டேன். நானே என்னைக்காத்துக் கொண்டேன். இனி நான் சுதந்திரமானவள். பராசரர் கூறியது பொய்யல்ல.

नष्टे मृते प्रव्रजिते क्लीवे च पतिते पतौ
पचं स्वापत्सु नारीणां पतिरन्यो विधीयते ।

காரண மின்றி நெடுநாள் கணவன் பிரிந்து சென்று விட்டாலும், இறந்துவிட்டாலும், சந்நியாசி யாகிவிட்டாலும், பேடியாகிவிட்டாலும், பதிதனாகிவிட்டாலும் ஸ்திரீகள் வேறு பதியை வரிக்கலாம் என்பது அவருடைய வாக்கு.

"நீ என்னைக் கைவிட்டு விட்டாய் பேடியாகிவிட்டாய், ஆண்மை யற்றுவிட்டாய்" என்று பட பட வென்று பொரிந்து தள்ளிவிட்டாள்.

ராமகுப்தனின் கண்கள் சிவந்தன. அவள் சந்திரகுப்தனின் மேல் கொண்டகாதல் தான் அவள் இப்படிப்பேசுவதற்குக்காரணமென்று அவனுக்குத் தோன்றியது. "பேடியென்றா சொன்னாய்? இந்தச் சந்திரகுப்தனிடம் கொண்ட காதல் வெறியல்லவா உன்னை இப்படிச் சொல்லச் செய்கிறது. இதோ பார்." என்று கூறிக்கொண்டு கோபாவேசத்துடன், கத்தியை உருவிக் கொண்டு சந்திரகுப்தனின் மீது பாய்ந்தான்.

சந்திரகுப்தன் இதை எதிர்பார்க்கவில்லை. அவன் தன்னைக் காத்துக் கொள்ளச் சற்றே விலகினான். அதற்குள் பக்கத்தில் நின்றிருந்த ஒரு வீரன் ராமகுப்தனின் நெஞ்சில் கத்தியைப் பாய்ச்சி விட்டான். ஹா வென்று அலறிக்கொண்டு சாய்ந்தான் ராமகுப்தன்.

"சந்திரகுப்தன் வாழ்க! துருவதேவி வாழ்க!" என்ற கோஷம் வானைப் பிளந்தது.

பின்னுரை

நான் இதை எழுதி என் மேஜையின் மீது வைத்திருந்ததை என்மனைவி எப்படியோ பார்த்துவிட்டாள், "வர வர உங்களுக்குப் பைத்தியம் தான் பிடித்து விட்டது. சாப்பாடு பலமாய்ப் போய் விட்டால் கன்னா பின்னா வென்று தான் சொப்பனம் வரும். இப்படியெல்லாம் ஒரு பொழுதும் நடந்திராது. இந்தமாதிரி சம்பவம் நடந்ததாகச் சரித்திரபூர்வமாக ஏதாவது ஆதாரம் உண்டா?" என்று கேட்கிறாள்.

ஆதாரம் இல்லையென்றால் என்ன? துருவதேவி வந்து தோன்றியது கனவாகவே இருந்தாலும் அவள் கூறுவதை மறுக்க முடியுமா? பராசரரையே துணைக்கு அழைத்துக் கொண்டு வந்து கூறும்போது நம்பாமல் இருக்கமுடியவில்லை. அவள் சொன்ன கதை ரஸமாயிருந்தது. எனக்கு அது பிடித்திருந்தது. ஆகவே அந்த இன்பத்தை உங்களுக்கும் அளித்து விட்டேன். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே என் கருத்து.

மௌன மண்டபம்

ரா. ஸ்ரீ.
தேசிகன்



இரவு சுமார் எட்டு மணி இருக்கும். வான வீதியில் நக்ஷத்திர தீபங்கள் விளங்கின. கடற்கரை அமைதியைப் பாழ்படுத்திய நகரத்தாரின் சந்தடிகள் மாய்ந்து விட்டன. கடல் இன்பமாய் ஒலித்துக் கொண்டிருந்தது. இரவின் தெய்வீக அமைதியைப் பருகிய படியே இரண்டு முனிசிபல் கவுன்சிலர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

"என்ன கோபால்ராவ், ஆகாயத்தை நோக்கியிருப்பது எத்தனை இன்பமாயிருக்கிறது பார்த்தீர்களா!" என்றார் வியாசராவ்.

"இந்த இன்பத்திற்கு எல்லையுண்டோ. நமது சிறுமை யெல்லாம் அகன்று விடும் ஆகாயத்தை நோக்குந் தோறும்"

'செலக்காண் கிற்பார் காணு மளவும்
செல்லும் கீர்த்தியாய்,
உலப்பிலானே, எல்லாவுலகு
முடைய ஒருமூர்த்தி
நலத்தால் மிக்கார் குடந்தைக் கிடந்தாய்,
உன்னைக் காண்பான் நான்
அலப்பாய் ஆகாசத்தை நோக்கி
அழுவன் தொழுவனே

என்று நம்மாழ்வார் பாடிய பாட்டு என் மனத்தகத்தே பாயும். அதைப் பார்ப்பதற்கு வேண்டிய அவகாசம் கிடைக்கவில்லையே. ஓய்வின் பெருமையை யார் உரைக்கப் போகின்றார்கள்'' என்றார் கோபால்ராவ்.

''பெட்ரண் ரசல் எழுதின புத்தகத்தைப் பார்த்திருக்கிறீர்களா?'' என்று வினவினார் வியாசராவ்.

''இல்லையே, இப்பொழுதுதான் மேற்றிசை நாட்டில் இத்தகைய உணர்ச்சி வந்திருக்கிறது போலிருக்கிறது. நம்முடைய முன்னோர்கள் உயர்ந்த மலைச்சிகரங்கள் மீதும், பரந்த நதிக்கரைகள் மீதும், நெருங்கிய நடுக்காட்டின் இடைவெளிகளின் மீதும், கடற்கரைகள் மீதும் படர்ந்துள்ள அமைதியிலே தோய்ந்து வேதகானஞ் செய்தார்களே. அதெல்லாம் பழங்கதையாய் மெல்லப் போய் விட்டனவே. அவர்கள் உலகங் கேட்க முரசடித்த தத்துவத்தில் உண்மையில்லாமற் போகவில்லை. ஆனால் வாழ்க்கைப் போராட்டத்தில் நிரம்பப் பின்தங்கி யிருக்கிற நம்மவர்களுக்கு ஓய்வைப்பற்றிச் சொல்லலாமா?''

''சொல்லக் கூடாதது தான், கர்மத்தின் மஹிமையைப்பற்றித்தான் கூறவேண்டும். ஆனாலும் மேனாட்டார் போல நாமும் ஆகிக் கொண்டு வருகிறோம். நாமும் அமைதி, ஓய்வு—இவைகளைப் பற்றிப் பேசவும் நேரிடும். வருமோ, வராதோ?''

''இல்லையென்று நான் சொல்ல வரவில்லை. இந்தப் புவனேச்வர பட்டணத்தைப் பாருங்கள். புற்றீசல்கள் போல ஜனங்கள் அதிகரித்து விட்டனர். ஏழுலக்ஷம் பத்து லக்ஷங்களாக ஆகிவிட்டன, குடியிருக்க வீடு கிடையாது. வண்டிகளின் சத்தங்களுக்கோ எல்லையில்லை. மோட்டாரின் ஓலம், காதைச் செவிடு படுத்தும் டிராமின் இடையறாத சத்தம், குதிரை கோச்சு வண்டிகளின் கட கட ஒலி, விளம்பரக்காரர்களின் ஊதல், நிதம் நடக்கிற கலியாண ஊர்வலங்களின் மேளதாளங்களின் முழக்கம், கோயிலில் நடக்கும் திருவிழாக்களின் கோலாஹலங்கள், அவைகளைப் பார்க்க வருகின்ற ஜனத்திரள்களின் பேரிரைச்சல், சாக்காட்டின் சங்கொலி, பிண ஊர்வலத்தின் முன் நடனம், அதற்கேற்ற பறைக்கொட்டு—இவையெல்லாம் நம்முடைய அமைதியைக் கலைக்கவில்லையா? நாமறியாமலேயே, நரம்புகளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டு விடும்; அதனால் மக்களுக்கு ஆயுசு குறையுமன்றோ'' என்றார் கோபால்ராவ்.

''ஆமாம், அது மெய்யே. அதற்கென்ன செய்யலாம்''

''நோவு நொடிகள் தீர்வதற்காக ஆஸ்பத்திரிகள் கட்டியிருக்கிறோம்; தினவெடுத்துத் திரிகிற கண்களுக்கு விருந்தளித்திருக்கிறோம்; மிருகக்காட்சிச் சாலைகளை அமைத்திருக்கிறோம்; ஓடி விளையாட மைதானத்தை வளைத்துக் கட்டியிருக்கிறோம்; குடைந்து நீராட, குட்டைகள் வெட்டியிருக்கிறோம்; அந்திப் பொழுதை உல்லாசமாகக் கழிக்கப் படகுகள்விட வசதிகள் அமைத்திருக்கிறோம்; அறிவை வளர்க்கப் புத்தகாலயங்களை நிறுவியிருக்கிறோம்; ஆராய்ச்சிச் சாலைகளை அமைத்திருக்கிறோம். இதற்காக நம்மூர் முனிசிபாலிட்டியை உலகம் மிகவும் மெச்சுகின்றது, ஆனால் இதெல்லாம் போதுமா? என் மனதில் வெகு காலமாய் ஒரு கனவு உருக்கொண்டிருக்கிறது'' என்றார் கோபால்ராவ்.

''அதென்ன''

''ஒரு மௌன மண்டபம் சமைத்தால் என்ன''

''அபூர்வமான அபிப்ராயமாயிருக்கிறதே; அடுத்த கூட்டத்தில் பேசுங்கள். நான் ஆமோதிக்கின்றேன்'' என்றார் வியாசராவ்.

இரவும் தேய்ந்தது. இவ்விருவர்களும் மௌனத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே வீடு திரும்பினார்கள்.

சில நாட்கள் சென்றன. ஒருநாள் திடீரென்று மௌன மௌலி என்ற தலையங்கங்கள் காணப்பட்டன. மௌனத்தைப்பற்றிய ஆரவாரங்கள் பத்திரிகை உலகத்தில் எழுந்தன. வியாசராவ் கோபால்ராவ்-இவ்விருவர்களைப்பற்றிப் புகழ்மாலைகள் வந்து கொண்டிருந்தன.

அஞ்சன கிரிக்குப் பக்கத்திலுள்ள ஒரு மைதானத்தில் ஒரு கட்டிடம் மெல்ல எழ ஆரம்பித்தது. அமைதியே கோயில்கொண்ட இடத்தில் செங்கல்கள் கொண்டு வருகிற லாரிகளின் சப்தங்கள், பல்லாயிரக் கணக்கான கூலியாட்களின் அரவங்கள்—இவைகள் கேட்க ஆரம்பித்துவிட்டன, இருபது லக்ஷம் செலவழித்து அக் கட்டிடத்தை எழுப்பினர். புவனேச்வர பட்டணத்தில் அத்தகைய கட்டிடம் இல்லையென்று அதைக் கண்டோர்கள் சொல்லத் தொடங்கினர்.

அதன் திறப்பு விழாவுக்காக எத்தனையோ ஆடம்பரமான சாமான்களைச் சேகரித்தனர். கனதனவான்களுக்கு ஒரு விருந்துத்

திட்டம் போடப்பட்டது. பங்களூர் புவன சுந்தரி பாட்டுக் கச்சேரி, நல்லுக்குரிச்சி வேலுப் பிள்ளை நாயனம், அம்பப்பாழ் ஆரோக்கியசாமிபிள்ளை பாண்டு. இவைகளுக்கான திட்டங்களை வகுத்தனர். கல்வி மந்திரி கோடையிடி குமரப்ப செட்டியார் திறக்க இசைந்துள்ளார். அவருடைய காரியதரிசி ஒரு பெரும் உபந்நியாசத்தை எழுதித் தந்து விட்டார். அதை நிதம் தம்முடைய உரத்த குரலில் பாராயணம் பண்ண ஆரம்பித்து விட்டார். நடுவில் மறந்து விட்டால் கல்வி மந்திரி என்ன செய்வார், முன் சாக்கிரதை வேண்டாமா?

குறித்த தினம் விடிந்து கொண்டிருந்தது. மௌன மண்டபத்தை அலங்கரித்தனர். தோரணங்கள் தொங்கின. கொடிகள் காற்றில் அசைந்தன. ஒரு பெரிய ஊர்வலம் அம்மண்டபத்தை நோக்கிக் கிளம்பிற்று. குமரப்பசெட்டியார் யானை மீது ஏறினார். அவருடைய சரிகைத் தலைப்பா, சரிகை வேஷ்டி, காதுக்கடுக்கன்கள் எல்லாம் இளங்கதிர்களால் மின்னின. பின்புறத்தில் நகரத்திலுள்ள பெரியோர்கள் அடிபெயர்த்தனர், முன்பு மேளம், பாண்டு முதலியன சென்றன. நானும் இந்தக் காட்சியைக் காணச் சென்றேன்.

மண்டபத்தை அணுகியவுடன் குமரப்ப செட்டியார் பெரிய ஆரவாரத்திற்கிடையே யானை மேலிருந்து கீழே இறங்கினார். எல்லோரும் அவரை வரவேற்றனர். அவரவர் தம் தம் இடங்களில் அமர்ந்தனர். குமரப்பசெட்டியாருக்கு மாலை யிட்டனர். உபசாரப் பத்திரங்களை வாசித்துக் கொடுத்தனர். 'குமரப்ப செட்டியார் வந்தது முதற் கொண்டு அஞ்ஞான இருள் அகன்று விட்டது' என்று சொன்னவுடனே மௌன மண்டபம் அதிரும்படி கரகோஷம் எழுந்தது. மாலையை ஒரு நிமிஷத்திற் கொருதரம் பார்த்துக்கொண்டே தம்முடைய காரியதரிசி எழுதித்தந்த சொற்பொழிவை உரத்த குரலில் படிக்க முயன்றார்.

''சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது'' என்ற வரி வந்தவுடன் சும்மா, சும்மா, சும்மா என்று சொல்லிச் சொல்லித் திகைத்தார். காரியதரிசியைப் பார்த்தார். காரியதரிசி அவரைக் கைவிட்டு விடுவாரா? ''சபையோர்களே, சுற்றுப் பிரயாணம் செய்ததால் மந்திரி அவர்களுக்கு அதிகச் சோர்வு ஏற்பட்டுவிட்டது; தாமே படிக்கவேண்டும் என்ற ஆவல் அவருக்குண்டு. முடியாததால் வருந்துகின்றார். அதை நானே படித்துவிடலாம் என்று நினைக்கிறேன்.''

''அதற்கென்ன செய்கிறது. யார் வாசித்தால் என்ன, எங்களுக்கு விஷயந்தானே வேணும்'' என்று அருகில் இருந்தவர் சொன்னார். மந்திரியின் முன்னுரை ஒருவாறு முடிவடைந்தது. மௌனத்தைப்பற்றி—தக்ஷிணாமூர்த்தி முறையில் அன்று—அநேக உபந்நியாசங்கள் நடந்தன. பேசினதால் எழுந்த சோர்வைப் போக்க வேண்டாமா? ஒரு பெரிய விருந்து நடந்தது. விருந்து முடிந்ததும் மந்திரியும் அவர் காரியதரிசியும் மௌன மண்டபத்தை விட்டகன்றனர்.

தொலையிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்துத் திறப்பு விழாவுக்கு அவர்கள் போகவேண்டுமாம்.

விருந்தானதும் பங்களூர் புவனசுந்தரி பாட ஆரம்பித்தாள். இதற்குள் பகற்பொழுதும் தேய்ந்துவிட்டது. இருண்டதும் ஒரு பெரிய நிலாச் சாப்பாடு நடந்தது. பிறகு நாயனக் கச்சேரி தொடங்கிற்று. கோபால்ராவ், வியாசராவ்—இவ்விருவருக்கும் ஒரு பெரிய ஏமாற்றம் வந்துவிட்டது. நாமொன்று எண்ண இதற்குமாறாய் எல்லாம் நிகழ்ந்துவிட்டனவே என்று உள்ளம் வெதும்பினர். மௌன மண்டபத்தைவிட்டு வியாசராவும் கோபால்ராவும் — நானும் மெல்ல வெளிக்கிளம்பி விட்டோம். அஞ்சனகிரி ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போனோம். இரவு இரண்டு மணி வரையில் நாயனக் கச்சேரி ஓய்ந்த பாடில்லை. கவலை படர்ந்த முகத்தோடு இரண்டு முனிசிபல் கவுன்சிலர்கள் படுத்திருந்தனர்.

சூழ்நிலை அமைதியில் நாயனத்தின் மதுர ஒலியும் மாய்ந்து விட்டது. நிலவின் அழகில் எல்லாம் தோய்ந்து கிடந்தன.

விடியற்காலம் ஐந்து மணியிருக்கும். அவர்களைப் பார்த்து ''மௌன மண்டபத்தின் நிலையைப் பார்த்தீர்களா'' என்றேன்.

''பிள்ளையார் பிடிக்க, குரங்காய் முடிந்த கதையாய்ப் போய்விட்டதே'' என்றார்கள்.

''மௌமண்டபம் கட்டவேண்டியது முக்கியந்தான்; இந்த மாதிரியா கட்டுகிறது''

''எப்படிக் கட்டுகிறது''

''ஆநந்ததீர்த்தர்தான் சொல்லவேண்டும்''

''ஆநந்த தீர்த்தர் யார்?''

''நம்மோடு படித்த வெங்குட்டுதான்''

''வெங்குட்டுவா, ஆநந்ததீர்த்தர் என்ற பெயர் வைத்திருக்கிறார்?''

''ஆமாம்''

"அவர் எங்கே இருக்கிறார்?"

"ரிஷிகேசில்"

"எப்பொழுது வருவார்?"

"ஐந்தாறு மாதங்களில் வருவதாக எழுதியிருக்கிறார்"

"அப்பொழுது அங்கே கூடுவோமா?"

"அப்படியே செய்கிறது"

* * *

புவனேச்வரபுரிக்கு வருகிறவர்கள் மௌனமண்டபத்திற்குப் போகாமல்திரும்பார்கள். அத்தனை பேர்களின் உள்ளத்தையும் அது கவர்ந்து விட்டது. யாத்திரிகர்கள் அலைக்குமேல் அலைகளாகத் திரண்டு வந்து கொண்டிருந்தனர்.

என் நண்பரும் குறித்த தினத்தில் வந்து சேர்ந்தார்.

"மௌன மண்டபம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று நம்முடைய நண்பர்களுக்கு உதயமாயிற்றே. கோபால்ராவ், வியாசராவ்—நம்மோடு படித்த இவர்களைப் பார்க்க வேண்டுமே" என்றார் என் நண்பர்.

"அவர்களை ஆஞ்சநேயர் கோவிலுக்கு வரச்சொல்லி யிருக்கிறேன்" என்றேன்.

"மௌன மண்டபத்தைப் பார்க்கப் போகலாமா?" என்றார்.

"அப்படியே செய்கிறது என்றேன்"

எத்தனையோவிதமாக மௌன மண்டபத்தைத் தம் மனத்திரையில் சித்திரித்துக் கொண்டே வந்தார். தம் அந்திப் பொழுதின் தியானத்தை மௌன மண்டபத்தில் முடிக்கலாம் என்ற எண்ணத்தோடுதான் அவர் என்னைத் தொடர்ந்தார் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

தூரத்தில் வானளாவி நின்ற மௌன மண்டபத்தின் மீது என் நண்பரின் பார்வை விழுந்தது.

"அதோ தெரிகிறதே அதுதானே மண்டபம்"

"ஆமாம்"

"அழகான இடத்தில்தான் அதுஅமைக்கப் பட்டிருக்கிறது"

இன்னும் சிறிது தூரம் போனதும் சங்கீதத்தின் மதுர ஒலி காற்றின்மீது மிதந்து வந்தது.

"இங்கே என்ன? சங்கீதம் கேட்கின்றதே!" என்றார் என் நண்பர்.

நான் பதில் சொல்லவில்லை.

"என்ன கார்களை நிறுத்தி யிருக்கிறார்களே?"

மௌனந்தான்.

"என்ன நடனசாலையாக ஆகிவிட்டதே?"

அதற்கும் மௌனந்தான்.

சதங்கைச் சத்தம், பாட்டு, கூத்து எல்லாம் எழுந்தன.

என் நண்பர் முகத்தில் ஏமாற்றம் சோகம், வியசனம் முதலிய குறிகள் மாறி மாறி வரக்கண்டேன்.

"மலையின் சிகரத்திலுள்ள ஆஞ்சநேயர் கோயிலுக்குப் போவோமோ?"

"ஆமாம்" என்று தலையை அசைத்தேன். அமைதி துயிலும் ஆஞ்சநேயர் கோயில்—அழகு வழிந்தோடும் வரைக்காட்சி—இவைகள் எங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

நிலவு போர்த்த அம் மலைச் சாரலில் உட்கார்ந்திருந்த வியாசராவ், கோபால்ராவ் ஆனந்த தீர்த்தரைக் கண்டதும் அவர்கள் உள்ளங்களில் பழைய ஞாபகங்கள் மின்னலடித்தன. பண்டை ஞாபகத்தரங்கங்கள் மீது தவழ்ந்து சென்றோம்.

"மௌன மண்டபம் என்ற கருத்து உங்களுக்கு உதயமாயிற்றே, அது உயர்ந்த கருத்துத்தான். ஆனால் எப்படி விபரீதமாய்ப் போய்விட்டது பார்த்தீர்களா? இக்காலத்தில்—அதுவும் பௌதிக சாத்திரம் தலையெடுத்த காலத்தில்—காலதேசச் சுவர்கள் எல்லாம் அழிந்த இக் காலத்தில் எந்த இடத்தில் மௌன மண்டபம் கட்டமுடியும். உத்தர துருவம் போனாலும் உங்களைத் தொடர ஆகாய விமானங்கள் காத்துக் கொண்டிருககின்றன.

"அப்படியானால் எங்கே கட்டுகிறது மௌன மண்டபத்தை"

"உள்ளத்தினில்" என்றார்.

"நீங்களேன் இமயமலைச் சாரலில் உறைகின்றீர்"

உள்ளக் கோயிலைக் கட்டவேண்டிய காலம் வேண்டாமா. இப்பொழுது அது முடிவடைந்தது. நான் எங்கேயும் திரியலாம். வாழ்வுப் புயல், இடி, இருட்டு, மின்னல் ஒன்றும் என்னை அணுகாது. அந்த அழிவிலாக் கோட்டைக்குள் புகுந்து விடுவேன் என்று கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்துவிட்டார். பழைய வெங்குட்டு காட்சி அளிக்கவில்லை. உபசாந்தத்தை அடைந்த வேதகாலத்து மஹரிஷியின் முகப்பொலிவை அவரிடம் அவர்கள் கண்டனர். ஆச்சரியத்தில் கைம்மறித்து நின்றனர். நிலவின் வெள்ளம் மலை மீது பாய்ந்துகொண்டிருந்தது.

தர்மத்தின் வெற்றி

"ஜய்லன்"

தௌலியிலிருந்த புத்த விஹாரத்தின் தலைவரான ஸத்திய தேவருக்கு அன்று மிகவும் கடுமையான நாள். கலிங்கத்திற்கும், மௌரிய சாம்ராஜ்யத்திற்கும் யுத்தம் மூண்டதிலிருந்து புத்தமடத்தின் வேலை பதின்மடங்கு அதிகரித்து விட்டது. யுத்த அரக்கியின் கொடுமையான கடாட்சத்திற்கு உள்ளான பக்கத்துப் பிரதேசத்தி லிருந்து ஜனங்களின் தணியாத வெள்ளம் வந்துகொண்டிருந்தது. எப்பொழுதும் ஏழை எளியவர்களும், பிணியால் பீடிக்கப்பட்டவர்களும் ஸத்திய தேவருடைய உதவியையும், புத்தபிக்ஷுக்களுடைய சகாயத்தையும் வேண்டி, புத்த விஹாரத்தை நாடி வருவார்கள். ஆனால் இப்பொழுதோ முன் பணக்காரர்களாக இருந்தவர்களும் சொத்து, சுதந்திரம் இழந்து, வீடுவாசலைப் பறிகொடுத்து விட்டு புத்தமடத்தில் ஆச்ரயம் புகவேண்டியதாயிற்று.

புத்தபிக்ஷுக்களும் யுத்தத்தினால் நிர்க்கதியான ஜனங்களின் நிவாரணத்திற்காக, ஓய்வு ஒழிவில்லாமல் தங்களால் முடிந்ததைச் செய்தனர். விஹாரத்திலுள்ள எல்லா அறைகளிலும் ஒரு அடி இடமும் இல்லாமல் ஜனங்கள் கிரப்பி விட்டனர். அதைச் சுற்றிப் போடப்பட்டிருந்த கொட்டகைகளிலும் ஜனங்கள் குழுமி இருந்தனர். இதைவிட அவர்களுக்கு உணவு அளிப்பதுதான் பெரிய பிரச்னையாக இருந்தது. நாட்டில் இருந்த உணவெல்லாம் ராணுவத்திற்காகச் சேகரிக்கப்பட்டு விட்டன. கலிங்கப்படை விட்டிருந்த கொஞ்சம் நஞ்சம் உணவையும் ஆக்கிரமிப்புப்படை விழுங்கிவிட்டது.

அதிருஷ்டவசமாக விஹாரம் கொஞ்சம் தானியம் சேகரித்து வைத்திருந்தது. ஸத்திய தேவரும், மற்ற பிக்ஷுக்களும் தங்களுடைய உணவைக் குறைத்துக் கொண்டு அன்றுவரை ஜனங்களுக்குச் சாப்பாடு போட்டுவிட்டனர். எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருந்த ஸத்திய தேவருக்கு இது தீராக் கவலையாக இருந்தது. ஆனால் ஜனங்களுக்கு இதைப் பற்றி ஒன்றும் தெரியாது. அடுத்த சாப்பாடு வரும் என்று எதிர்பார்த்திருந்தனர். புத்த மடாதிபதியின்மேல் அவர்கள் வைத்திருந்த அளவில்லாத நம்பிக்கை பார்ப்பதற்கு மிகவும் பரிதாபமாக இருந்தது.

சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொள்ள மரப் பலகையின்மேல் படுத்திருந்தார். அவருடைய சரீரமும் மனமும் அசதியுற்றிருந்தன. அவருடைய கவலைக்கு அன்று முக்கிய காரணம் இருந்தது. சற்று நேரத்திற்குமுன் அவருடைய காரியதரிசியான ரக்ஷிதா, சாப்பாடு இன்னும் ஒரு நாளைக்குத்தான் இருக்குமென்று அறிவித்திருந்தார்.

"நாம் ஜனங்களிடம் சொல்லிவிடலாமா?" என்று ரக்ஷிதா கேட்டார்.

"கூடவே கூடாது" சற்றும் தயங்காமல் பதிலளித்தார் சத்தியதேவர். "ஜனங்கள் எதற்காகக் கஷ்டப்படவேண்டும்? நாம் அவர்களைக் காப்பாற்றுவோம் என்று எதிர்பார்க்கின்றனர். நாம் நமது கடமையை விடமுடியாது." சற்றுநேரம் யோசித்து விட்டுச் சொன்னார். "நாம் இன்று உபவாசம் இருந்தால் ஏதாவது லாபமிருக்குமா?

"பிக்ஷுக்கள் எல்லோரும் பட்டினி இருந்தால் இன்னும் ஒருவேளை சாப்பாடு போடலாம்"

"அப்படியானால் நாம் உபவாச விரதத்தை மேற்கொள்ளுவோம். நமக்குப் பட்டினி இருப்பது சுலபம். ஜனங்களுக்குக் கஷ்டமாக இருக்கும். அதுவும் குழந்தைகள் என்ன செய்வார்கள்?"

இப்படி மற்றொரு வேளை சாப்பாடு போடப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு? ஸத்தியதேவர் உணவு தானியங்களைச் சேகரித்து வரும்படி பல தூதர்களை நாலு திக்குகளிலும் அனுப்பி இருந்தார். சில தினங்களுக்குமுன் தானியங்களை ஏற்றிக்கொண்டு பன்னிரண்டு வண்டிகள் வந்துகொண்டிருப்பதாக ஒரு செய்தி சத்திய தேவருக்குக் கிடைத்திருந்தது. அவர் இதைத்தான் நம்பி இருந்தார். ஆனால் இதைப்பற்றிப் பிறகு ஒன்றும் செய்தி வரவில்லை.

உணவுப் பிரச்னையைத் தவிர சத்திய தேவருக்கு மற்றொரு கவலையும் இருந்தது. எதிரிகள் விஹாரத்தை ஆக்கிரமித்துக் கொள்ளமாட்டார்களென்று எல்லோரும்

உறுதியாயிருந்தனர். அதனுடைய பவித்திரத் தன்மைக்கு எப்பொழுதும் அவமரியாதை நேராமல் இருக்குமா? சத்தியதேவர் சம்ராட் அசோகனின் குணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்ததார். அவர் பட்டத்திற்கு நேர் வாரிசு இல்லை. தம்முடைய சஹோதரர்களுடன் கொடூரமாகச்சண்டையிட்டுச் சிம்மாசனத்தில் ஏறினார். சென்ற இரண்டு வருடங்களாகப் பௌத்த மதத்தைக் கடைப் பிடித்திருந்தார். பேருக்கு மாத்திரந்தான் போலும். இன்றும் தம்முடைய ஆக்கிரமிப்புக் கொள்கையை விடவில்லை.

"தம்முடைய ஆசைக்கு அசோகர் இப்பொழுதும் அடிமை. அவருக்கு இன்னும் ஞானோதயம் உண்டாகவில்லை" என்று முரட்டுப்படுக்கையில் படுத்துக்கொண்டு யோசித்தார் சத்திய தேவர்.

ரக்ஷிதா மறுபடியும் வந்தார்: "நமக்குக் கெட்டசெய்தி வந்திருக்கிறது. உணவு வண்டிகள் இங்கிருந்து மூன்று மைல் தூரத்தில் வந்துகொண்டிருந்த பொழுது மௌரியப்படையைச் சேர்ந்த குதிரை வீரர்கள் வழிமறித்து, எல்லாத் தானியங்களையும் எடுத்துச் சென்று விட்டனராம்."

சத்தியதேவர் அமைதியுடன் செய்தியைக் கேட்டார். ஐம்புலன்களையும் அடக்கிப் பழக்கப்பட்டவர்கள் எந்த ஆபத்திலும் பொறுமையை இழப்பதில்லை.

"இது மிகவும் கெட்ட செய்திதான் ரக்ஷிதா. ஆனால் என்ன நடந்தாலும் நாம் சரியான பாதையிலேயே செல்வோம்."

"நாம் ஜனங்களுக்கு என்ன சொல்லுவது? கடைசிவேளை சாப்பாடு போட்டு அனுப்பிவிடுவதா?"

"உணவு அளித்தபின் அதைப்பற்றி யோசித்துப் பார்ப்போம்."

அப்பொழுது ஒரு வேலையாள் மேல் மூச்சு வாங்க, கலக்கத்துடன் ஓடிவந்தான்.

"பெரிய ஆபத்து வந்திருக்கிறது. தானியங்களைக் கொள்ளையடித்த மௌரியக் குதிரை வீரர்கள், வந்திருக்கிறார்கள். நாலுபுறமும் விஹாரத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தலைவன் உங்களை வரச்சொல்லுகிறான்."

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை. நஞ்சன்கூடு.
"நஞ்சன்கூடு பல்பொடி"
1 ந. ட நெ 61, மெடிகேட்ட [பல் உபாதைகளுக்கு]
குழந்தைகளுக்கு
காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் பேதியாக மாத்திரை
ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிஞ்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]
கவனிப்பு:- மாதர்களுடைய சூதக, கெர்ப்பாயச உபாதைகளுக்கு விபரம் எழுதி சிகிச்சை பெறலாம்
ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸும் கூந்தல் செழிப்புக்கு நீங்களே தைலம் செய்ய உதவுகிறது.
மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்.
'அகர்ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷிமி'
யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதறாஸ்.

சத்தியதேவர் எழுந்தார். வெளிப்பார்வைக்கு இன்னும் அமைதியாகவே காணப்பட்டார்.

"அவர்கள் மடத்திற்குள் நுழைந்து விட்டார்களா?"

"இல்லை. மடத்தைச் சுற்றி நின்று கொண்டிருக்கிறார்கள்"

"நல்லது. அத்தலைவனை வரச்சொல்"

தலைவன் உள்ளே வந்து வணங்கிவிட்டு விஷயத்தை உடனே ஆரம்பித்தான்:

"நான் மௌரிய இராணுவத்தைச் சேர்ந்த குதிரை வீரன். சம்ராட் அசோகரின் உத்தரவினால் வந்திருக்கிறேன். அவர் தம்முடைய எதிரியைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி கேட்கிறார். எங்களுக்கு ஒற்றர் மூலம் கடைசியாக வந்த செய்தியில் கலிங்க தேசத்து அரசன் இங்கேதான் ஒளிந்து கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது"

ரக்ஷிதா ஆச்சரியமும், திகிலும் ஒருங்கே தொனிக்க, "ஆ!" என்றார். ஆனால் சத்திய தேவர் சாந்தமாகவே இருந்தார்.

"கலிங்கதேசத்து அரசனை உன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்றுதானே கேட்கிறாய்?"

"ஆம்"

"என்னால் இவ்வுத்தரவுக்குக் கீழ்ப்படிய முடியாது"

"கீழ்ப்படிய முடியாதா? கேளுங்கள் பிக்ஷு! இம்மடத்தின் பவித்திரத் தன்மைக்குத் தீங்கு செய்யக்கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறோம். ஆயினும் எதிர்ப்பு இருந்தால் சண்டையிட்டுக் கீழ்ப்படியச்செய்ய எங்களுக்கு அனுமதி இருக்கிறது."

"அப்பா, உதவியை நாடிவந்த ஜனங்களை ஜாதி மத பேதம் பார்க்காமல் இம்மடத்தில் அனுமதித்திருக்கிறோம். எங்களுக்கு எல்லோரும் சமம்தான். பெண்களானாலும், குழந்தைகளானாலும், கிழவர்களானாலும், அரசனாயிருந்தாலும், பிச்சைக்காரனாயினும் எல்லோருக்கும் உணவும், நிற்க நிழலும் அளிக்கப்படுகிறது. ஆச்ரமமடைந்த எவரையும் சரியான காரணமின்றி, பிறர் கையில் ஒப்படைப்பது எங்கள் தர்மத்திற்கு உகந்தது அல்ல. கலிங்கதேசத்து அரசன் எங்களுடைய உதவியைக் கோரியிருந்தால் அவனுக்கு உதவி செய்ய மறுப்பது எங்களுடைய கடமைக்கு விரோதமாகும்"

"அவனை ஒப்படைக்க மாட்டீரோ?"

"என்னைத் தப்பாக அர்த்தம் செய்து கொள்ளாதே. நான் சொல்வதெல்லாம் இதுதான்; கலிங்கத்து அரசனும் கஷ்ட தசையில் இருக்கும் மற்ற மனிதர்களைப் போல் இம் மடத்திற்கு வருவதற்கு நியாயம் இருக்கிறது. அவனை எங்கள் கையினாலேயே அவனுடைய எதிரியிடத்தில் ஒப்படைப்பது அநியாயம். உன்னை அனுப்பியவர்களிடம் போய்ச் சொல். அரசனிடம் பயந்தோ, அல்லது அவருடைய விருப்பத்திற்காகவோ, தர்மத்தைக் கடைப்பிடிக்கும் இந்த ஏழைகள் சரியான வழியினின்று பிறழமாட்டோமென்று"

தலைவன் யோசித்தான். பலாத்காரம் செய்வதா, வேண்டாமா என்பதுதான் அவனுடைய பிரச்னை. தான் எவ்வளவு தூரம் போகலாமென்று அவனுக்கு நிச்சயமாகத் தெரியாது. இப்பொழுது சண்டையிட்டால், பிறகு அரசன் கடிந்துகொண்டால்? சக்கரவர்த்தி அசோகர் பௌத்தர் என்பது அவனுடைய ஞாபகத்திற்கு வந்தது.

உத்தியோகஸ்தன் தயங்குவதைப்பார்த்து ஸத்தியதேவர் ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்துச் சொன்னார்: "நான் ஒரு உடன்படிக்கைக்கு வரத் தயாராக இருக்கிறேன். கலிங்க தேசத்து அரசன் இங்கிருந்தால் சம்ராட் அசோகரே அவனைக் கைது செய்ய வந்தால் நான் கலிங்கத்து அரசனை ஒப்படைக்கத் தயார்"

"என்ன!" படைத் தலைவன் கத்தினான். "உம்முடைய அதிகப்பிரசங்கித்தனத்தினால் வரும் தீமைகளை அனுபவிக்கத் தயாரா?"

"நாங்கள் தயார்"

"ஏன், அவர் இந்த விஹாரத்தையே அழிக்க உத்தரவிட்டு, இதில் இருப்பவர்களையும் கொன்றுவிடச் சொல்லலாம்"

"பேராசை என்னும் பிசாசின் இரும்புப் பிடியில் இருப்பவன், இதையும் செய்வான் இன்னமும் செய்வான்."

"சரி, உம்முடைய செய்தியை அரசரிடம் அறிவிக்கிறேன். இதனால் தீமை விளைந்தால், உங்களுடைய செய்கையின் பலன்தான்."

அவன் திரும்பிச் செல்ல ஆரம்பித்தான்.

"நீ போவதற்கு முன்னால் நான் ஒன்று சொல்லவேண்டி இருக்கிறது. உன்னைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்துகொண்டிருந்த தானிய வண்டிகளை எடுத்துப் போய்விட்டனராம். அவர்களைத் தயவுசெய்து திருப்பி தரச்சொல்லி—

"முடியவே முடியாது" அவன் தீர்மானமாகச் சொன்னான். "தேசத்திலிருக்கும் உணவை எடுத்துக்கொள்ள நாங்கள் உத்தரவிடப்பட்டிருக்கிறோம்."

"ஆனால் ஏழை ஜனங்களைப்பற்றி நினைக்க வேண்டாமா? கிழவர்கள், அபலை ஸ்திரீகள், சின்னஞ்சிறு குழந்தைகள்—எல்லோரும் பட்டினியாயிருக்க—

"ஜனங்களைப்பற்றி நினைக்க எங்களுக்கு உத்தரவில்லை. இராணுவத்தைப் பற்றித்தான் நாங்கள் நினைக்கவேண்டும். இராணுவம் முதலில் வருகிறது"

படை வீரன் போய்விட்டான். அறையில் சற்றுநேரம் மௌனம் நிலவியது. ரக்ஷிதா மௌனத்தைக் கலைத்தார்.

"அசோகன் என்ன செய்வார்?" பயந்தொனிக்கக் கேட்டார்.

"அவர் மிகவும் கோபமடையலாம்."

சத்தியதேவர் சொன்னதைச் சேனை வீரன் கூடாரத்திலிருந்த அசோகரிடம் சொன்ன பொழுது, அரசரின் கோபத்திற்கு எல்லை இல்லாமலிருந்தது.

"அவனை ஒப்படைக்க மாட்டானா? நானே போகவேண்டுமா அவனிடம்? நல்லது, நானேபோகிறேன். என்னுடைய குதிரையைத் தயார்செய். ஆயிரம் குதிரை வீரர்களும், இரண்டாயிரம் காலாட்படையினரும் என்னுடன் வரட்டும். இந்த முட்டாள் பிக்ஷு என்னுடைய கட்டளையை எப்படி மீறுகிறானென்று பார்ப்போம்.

ஒரு மணி நேரத்திற்குள் விஹாரத்தையடைந்தார். விஹாரத்தின் தலைவரை எப்படித் தண்டிப்பது என்று ஒன்றும் நிச்சயம் செய்துகொள்ளவில்லை. மடத்தைச் சேர்ந்தவர்கள் விஹாரத்தின் சுற்றுச் சுவரின் கதவிற்கு முன்னால் நின்றுகொண்டிருந்தனர். அரசன் வந்தவுடன் தலைகுனிந்து வணங்கினர். சத்திய தேவர் அரசனுக்கருகில் சென்று "புத்தருடைய ஆசி உங்களுக்கு மங்களமுண்டாக்கட்டும்" என்றார். அரசன் குதிரைமேலிருந்தே கவனித்தார். சத்திய தேவருடைய முகத்தில் கர்வமோ எதிர்ப்போ காணப்படவில்லை. அவருடைய தோற்றத்தில் பயமின்மையும், கம்பீரமும் தென்பட்டன.

"இந்த மடத்திற்கு அதிபதியா நீ" அதிகாரத்துடன் கேட்

டார். "ஏ பிக்ஷு! என் வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் அரசர்களும் நடுங்குகிறார்கள்? நீ கேட்க மாட்டாயா? கலிங்க தேசத்து அரசனை என் முன்னே உடனே கொண்டுவா? உனக்கு என்ன தண்டனை விதிப்பதென்பதைப்பற்றிப் பிறகு யோசிக்கிறேன்."

"அரசே!" சத்திய தேவர் வணங்கிவிட்டுச் சொன்னார். "இந்த மடத்தையும் இதில் இருப்பவர்களையும் உங்களிடத்தில் ஒப்படைக்கிறேன். இங்கு அடைக்கலம் புகுந்திருப்பதாகச் சொல்லும் கலிங்கத்து அரசனை ஒப்படைக்க மறுத்ததைத் தப்பாக அர்த்தம் செய்துகொள்ளப் பட்டது. சாதாரண சிப்பாய்கள் விஹாரத்திற்குள் நுழைந்து ஜனங்களை வீணாகக் கஷ்டப்படுத்துவார்களென்று தான் அனுமதிக்கவில்லை. மேன்மை தங்கிய நீங்களே வந்திருப்பது தைரியத்தை யளிக்கிறது."

"பிக்ஷு, நீ தேனொழுகப்பேசுகிறாய்; உன் பேச்சினால் என்னை மயக்கிவிடலாமென்று பார்க்கிறாயோ?"

"வெறும் வார்த்தைகளினாலல்ல. என்னுடைய காரியங்களினால் என்னுடைய நடத்தையின் நியாயத்தை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். இங்கு அடைக்கலம் அடைந்திருக்கும் எல்லா ஜனங்களையும் ஒவ்வொருவராக உங்கள் எதிரே வரச் சொல்லி இருக்கிறேன். அவர்களில் கலிங்கத்து அரசனிருந்தால் கண்டு பிடித்துக் கைது செய்யுங்கள். அவனை நான் பார்த்திருந்தால் உங்களுக்கு இவ்வளவு தொந்தரவு கொடுத்திருக்க மாட்டேன். நான் அவனைப் பார்த்ததில்லை. இதைத் தவிர அவன் கட்டாயம் மாறுவேடத்திலிருப்பான்; ஆனால் உங்களுடைய கூரியகண்கள் எந்த மாறு வேடத்திலும் அவனைக்கண்டுபிடித்து விடுமென்று நினைக்கிறேன்"

அப்பொழுதுதான் புத்தவிஹாரத்தின் வெளிச்சுவருக்குப்பின் இருந்த பிரம்மாண்டமான ஜனக்கூட்டம் கண்ணில் பட்டது. கூட்டத்தில் ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் எல்லா வயதினரும் இருந்தனர். அசோகன் அவர்களை உற்றுப்பார்த்தார். அவர்களுடைய கண்களுக்கு உகந்த காட்சி யல்லவே.

சத்தியதேவர் சைகை காட்டினார். ஜனங்கள் வெளியில் வர ஆரம்பித்தனர். முதலில் குழந்தைகள் வந்தனர். அவர்களுடைய காய்ந்து உலர்ந்த கால்கள் உயிரில்லாமல் தள்ளாடிக் கொண்டு முன் சென்று கொண்டிருந்தன. அவர்களுடைய அழுக்கடைந்த முகத்தில் அவர்களுடைய சிறு பிராயத்திற்கு ஒவ்வாத ஒரு சோகத்திரை தென்பட்டது. பஞ்சடைந்த கண்கள் பயத்தினால் அகல விரிந்தன. சிலர் அழ ஆரம்பித்தனர். சிறிய குழந்தைகள் பெரிய குழந்தைகளைக் கட்டிக் கொண்டன.

"வாருங்கள் குழந்தைகளே, பயப்படாதீர்கள்". என்று சத்தியதேவர் தைரிய மூட்டினார். "இதோ உங்களுடைய அரசன் ஸம்ராட் அசோகன். உங்களை ரக்ஷிப்பவர். "அரசே! இவர்களில் அநேகர் அனாதைகள். இவர்களுடைய தகப்பன்மார் சண்டையில் கொல்லப்பட்டனர். அவர்களுடைய தாயார்களில் சிலர் இறந்து விட்டனர். சிலர் தங்களுடைய மானத்தைக் காத்துக் கொள்ளுவதற்காகத் தற்கொலை செய்து கொண்டனர். அவர்கள் அப்படிச் செய்திருக்கக்கூடாதுதான். யுத்தத்தில் மானமிழப்பது முதலியன சகஜந்தானே.

"கொலையும், கற்பழித்தலும் நடக்கும். இவைகளைத் தடுக்க முடியாது. ஆனால் அந்த மூளையில்லாத பெண்மணிகள் சரியாகப் புரிந்து கொள்ளாமல் தற்கொலை செய்து கொண்டனர். இக் குழந்தைகளின் பாரம் எங்கள்மேல் விழுந்திருக்கிறது. எங்களாலானதைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆயினும் எங்களால் கணக்கில்லாத ஜனங்களுக்குச் சாப்பாடு போட முடியுமா? அதுவும் இச்சமயத்தில், எங்களால் சேகரிக்கப்பட்ட உணவுப் பதார்த்தங்கள் பட்டாளத்தின் உபயோகத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன. சந்தேக மில்லாமல் உங்களுடைய இராணுவம் மற்ற எல்லாவற்றிற்கும்முன் முதல் ஸ்தானம் பெறுகிறது. ஆனால் இந்த அசட்டுக் குழந்தைகள் புரிந்துகொள்ள மாட்டோமென்கிறார்கள். இவர்களுக்குப் பசிப்பிணி வந்து விடுகிறது. ஆனால் எங்களுக்கு இவர்கள் அதிககாலம் பாரமாக இருக்கமாட்டார்கள். வியாதியும், பசிப்பிணியும் இவர்களை எல்லாத் துக்கத்திலிருந்தும் விடுவித்துவிடும்." பின்னால் இருப்பவர்களுக்கு வழி விடுங்கள் குழந்தைகளே!

நோயுற்ற குழந்தைகளுக்குப் பிறகு ஒட்டி உலர்ந்த பெண்களும், ஆண்களும் வந்தனர். சக்கரவர்த்தியுடைய முகத்தில் வெறுப்புக் கோடு இன்னும் ஆழமாகப் போயிற்று. நாற்றம் பொறுக்க முடியாததாக இருந்தது. சத்தியதேவர் மன்னிப்புக் கேட்கும் பாவனையில் சொன்னார்: "இங்கு வந்ததிலிருந்து இவர்கள் குளிக்கவில்லை. இவர்களுக்குக்

குடிக்கத் தண்ணீர் கூட எங்களால் கொடுக்க முடியவில்லை. இராணுவத்தைச் சேர்ந்த மனிதர்களும், குதிரைகளும் குளங்களுடைய தண்ணீரைக் குடிப்பதற்கியலாதவாறு செய்திருக்கின்றனர். ஆனால் கவலைப் படவேண்டாம். ஏதாவதொரு நோய் பரவி இவ்வளவு பேரையும் எடுத்துப் போய் விடும்.

"அந்தச் சிறிய பெண்ணைப் பார்க்க முடிகிறதா?" சத்தியதேவர் ஆரம்பித்தார். அப்பெண்ணின் வறட்டு மார்பைக் கடித்துக் கொண்டிருந்தது ஒரு குழந்தை. கண்களால் காணச் சகியாத காட்சி. "தங்களுடைய மானத்தைக் காத்துக்கொள்ளுவதற்காக மாதர்கள் தற்கொலை செய்துகொண்டனர் என்று சொன்னேனல்லவா? வீட்டைக் காவல் புரிந்துகொண்டிருந்த இவளுடைய சகோதரனையும், கிழத் தகப்பனாரையும் கொன்றுவிட்டு, இவளைத் தற்கொலைசெய்து கொள்ளும் பாபத்திலிருந்து உங்களுடைய சிப்பாய்கள் காப்பாற்றினர்.

"அவள் பிரக்ஞையற்றுக் கிடந்தபொழுது கண்டெடுத்தோம். எங்கள் சிச்ருஷையால் தேறி இக்குழந்தையைப் பெற்றெடுத்தாள். அவளுக்குச் சுயபுத்தி இன்னும் வரவில்லை. இந்த மாதிரி விஷயங்கள் நடக்கத்தான் நடக்கும். யுத்தம் யுத்தம்தான். இவளைப் போல் இன்னும் அநேகர் இருக்கின்றனர். நாங்கள் இந்தமாதிரி விஷயங்களை வெளியிடுவதில்லை. இவைகள் சகஜந்தான். சிப்பாய்களுடைய வேலை ஜனங்களை மாய்ப்பது. பிறருடைய உயிரையே கொள்ளையடிப்பது சரியாகிவிட்டால், பிறருடைய சொத்தையும், கற்பையும் கொள்ளையடித்தால் யாரும் அவர்மேல் பழிபோட முடியாது. யுத்தத்திற்குப்பின் பஞ்சமும், பிணியும் உண்டாவதுபோல், கொள்ளையடித்தலும் கற்பழித்தலும் சேனை முன்னேறிச் செல்வதை அறிவிக்கின்றன.

"இக்கூட்டத்தில் யுவர்கள் அதிகம் காணப்படவில்லை," சத்தியதேவர் சொல்லிக்கொண்டே போனார்: "அநேகர் சண்டையில் மடிந்தனர். யுத்தகளத்திலிருந்து சிலரைக் கொண்டு வந்தோம். அதோ பாருங்கள், அந்த மனிதன் ஒரு காலினால் தத்திப் போகிறான். அவனுக்குப் பக்கத்திலிருப்பவனுக்கு இரண்டு கைகளும் போய் விட்டன. இவன் கொஞ்சம் அதிருஷ்டசாலி; இவனுக்கு ஒரு கண்ணும் காதும் போயிருக்கின்றன. அடுத்தவனுக்கு இரண்டு கண்களும் போய்விட்டன.

"ஆ, இவனைப்பாருங்கள், தூக்கிச் செல்லுகின்றனர். இவனுக்கு இரண்டு கண்களும் கைகளும் ஒரு காலும் போய்விட்டன. இவன், ஜனங்களுக்கு யுத்தம் குழந்தை விளையாட்டல்லவென்று நினைவு படுத்திக் கொண்டு பல வருஷங்கள் உயிருடன் இருக்கலாம். சில மாதங்களுக்கு முன்தான் இவர்களெல்லோரும் ஆரோக்கியமும் பலமும், ஆண்மையும், அழகும் உடையவர்களாக இருந்தார்களென்று நினைக்கும்பொழுது? யுத்தம் அதிசயமான மாறுதல்களைச் செய்கிறது; நீங்கள் மாறுதல்களைப் பார்த்தீர்கள்.

"உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. கலிங்கத்து அரசனை மறந்தே விட்டேன். நீங்களும் மறந்து இக்கூட்டத்தில் நழுவ விட்டிருக்க மாட்டீர்களென்று நினைக்கிறேன். சாப்பாடு போடுவதற்கு எவ்வளவு பேர் இருக்கின்றனர். இராணுவம் எடுத்துக்கொண்டது போக, எங்களுக்கு உணவுப்பொருள்கள் ஒன்றும் கிடைப்பதில்லை.

"இதோ ஊர்வலத்தின் கடைசிப் பாகம் எவ்வளவு பரிதாபமாக இருக்கிறது. பூமிக்குப் பாரமாக இவர்கள் வெகுநாட்கள் இருக்க மாட்டார்கள். துக்கத்தையே கொடுத்து, கெடுதல்களையே விளைவித்த இப்பூமியை விட்டுப்போக அவர்கள் வருத்தப்பட மாட்டார்கள்."

அதிசய ஊர்வலம் முடிவடைந்தது. இதுவரையில் குதிரை மேலிருந்தே மௌனமாகப்பார்த்துக் கொண்டிருந்த அசோகன், கண்களில் கோபம் நிருத்தியமாட சத்தியதேவரைப் பார்த்தார்.

"பிக்ஷு, எங்களுடைய சமயத்தை வீணாக்கி விட்டாய். கலிங்கத்து அரசனின் ஜாடையாக யாருமில்லை."

"எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது."

"இல்லை உனக்கு வருத்தம் இல்லை." அசோகன் உரத்துக் கூறினார். "உலகம் என்னைப் பார்த்துச் சிரிக்கிறது. இந்த விளையாட்டு அபாயகரமானது." அவருடைய கண்கள் கோபத்தினால் சுழன்றன. சத்திய தேவரின் முகம்கூட வெளுத்து விட்டது.

"பிக்ஷு, சொல்; இந்த ஜனங்களை என் முன்னால் நடக்க வைத்ததின் உத்தேசம் என்ன?"

"அரசே! உங்களுக்குத் தெரியும்," சத்தியதேவர் அமைதியாகப் பதிலளித்தார். "எனக்கு உங்கள் சேவையையும், நன்மை

யையும் செய்வதைத் தவிர வேறு உத்தேசமில்லை......"

"போதும்! நான் முட்டாளல்ல. அதிகப் பிரசங்கித் தனம்."

அசோகன் வாளைப் பாதி வெளியில் எடுத்தார். ஒரு சண நேரம் தெளலி புத்த விஹாரத்தின் தலைவர் மரணத்திற்கு மிகவும் சமீபத்திலிருந்தார். ஸம்ராட்டின் சிவந்த கண்கள் உணர்ச்சிகளை வெளியில் காட்டாமல் அமைதியாக நின்ற சத்திய தேவரையும், புத்த பிக்ஷுக்களையும், ஒரு பக்கத்தில் குழுமியிருந்த பரிதாபமான ஜனங்களையும் வட்டமிட்டன. அசோகன் தயங்கினார். வாள் உறையில் போய்விட்டது. குதிரையைத் திருப்பிக்கொண்டு போய்விட்டார். அவருடன் வந்த சேனையும் அவரைப் பின் தொடர்ந்தன.

"சத்தியதேவரே, அரசனின்முன் ஜனங்களை ஏன் நடக்கவைத்தீர்." என்று ரக்ஷிதா சற்று நேரத்திற்குப் பிறகு கேட்டார். அவர்களில் நிஜமாகவே கலிங்கத்து அரசன் இருப்பானென்று நினைத்தீர்களா?"

"இல்லை, அப்படி நினைக்கவில்லை. அசோகருடைய ஒற்றர்கள் தப்பாக அறிவித்துவிட்டார்கள்"

"பின் ஏன்........."

"ரக்ஷிதா, அவருடைய ஏகாதிபத்திய வெறியினால் விளைந்த கஷ்டத்தையும், துக்கத்தையும், நஷ்டத்தையும் அவர் தம் கண்களினால் பார்க்க வேண்டுமென விரும்பினேன். மகா வீரர்கள் தங்களுடைய புகழைப்பற்றிப் பெருமை யடைகிறார்கள்; தங்களுடைய ராஜ்யத்திற்குச் சேர்க்கப்பட்ட பிரதேசங்களை எண்ணிப் பெருமிதமடைகிறார்கள்; ஆனால் மனித சமூகத்திற்கிழைக்கப்பட்ட துக்கம், கஷ்டம், வேதனை இவைகளைப் பற்றி நினைப்பதில்லை. அசோகனால் தீங்கிழைக்கப்பட்ட ஜனங்களை அவன் முன் அனுப்பினேன்; அவருடைய கண்களைத் திறப்பதற்காக.

"எனக்கு வரவிருந்த அபாயத்தைப்பற்றி எனக்குத் தெரிந்திருந்தது. அரசர்களும், ஒருவருமே தாங்கள் செய்த கெடுதல்களைப் பார்க்க விரும்புவதில்லை. என்னை வெட்டி வீழ்த்தி விடுவாரென்று நினைத்தேன். ஊர்வலக் காட்சி அவனுடைய மனதில் பதிந்து விட்டது. அவருடைய முகத்தைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அதில் பலவித உணர்ச்சிகளின் யுத்தம் நடந்து கொண்டிருந்தது—கர்வமும் அதிகார வெறியும், அனுதாபத்துடனும் தாம் விளைவித்த கஷ்ட நஷ்டங்களுக்காக உண்டான பச்சாத்தாபத்துடனும் சண்டையிட்டன. எது ஜயிக்குமென்பதைக் காலந்தான் காட்டவேண்டும்."

அப்பொழுது வேலையாள் வந்து முன் வந்த சேனைத் தலைவன் வந்திருப்பதாக அறிவித்தான்.

"தடுத்து நிறுத்தப்பட்ட உணவுத் தானிய வண்டிகளை உங்களிடம் சேர்ப்பிக்கச் சொல்லி யிருக்கிறார் அரசர். என்னுடன் கொண்டுவந்திருக்கிறேன்" என்றான் தலைவன்.

"நாம் காப்பாற்றப் பட்டோம்" என்று உத்சாகத்துடன் கூவினார் ரக்ஷிதா.

"இது தர்மத்தின் வெற்றி" என்றார் சத்திய தேவர்.

பம்பாயில்

"காவேரி" கிடைக்குமிடம்

M/s சரோஜினி ஸ்டோர்ஸ்

ஜெனரல் மர்ச்செண்ட்ஸ்

பீம்டிவாலா பில்டிங்ஸ்

மட்டுங்கா G. I. P.

பாழும் பணம்

கௌரீ

"ஐயையோ! பாபம்டாப்பா! மகாபாபம்! ஏ அம்பி! கடங்காரா! கூப்பிட்டா வந்து துலைச்சான்னு? எங்கேடா அந்த பிரும்மஹத்தி?"

"எந்த பிரும்மஹத்திம்மா? பொழுது விடிஞ்சதும் விடியாததுமாய் ஏன் இப்படி அடிச்சுக்கறே?"

"நாசமாய்ப் போக நீ! வான்னு, உக்காண்டு கேள்வி கேக்கறது துக்குறி! எங்கேடா அந்தப் பூனை? அங்கே எங்கேயாவது இருக்கா பார்; சனி!"

"ஆமாம்மா! உனக்கு எப்ப பாத்தாலும் இதுதான் வேலை! இந்தச் சனி எல்லாத்தையும் யார் கொஞ்சச் சொன்னு உன்னை? காலமே எழுந்து இதைத்தேடிண்டு போவா ஒத்தர்! நான் ஒண்ணும் மாட்டேன்"

"ஏண்டா காலமே எழுந்து நீயும் வயித்தெரிச்சக் கொட்டிக்கறே? பிரும்மேத்தி அதைப் பார்த்துத் துலைக்கணும்டா! பொழுது விடிந்து நல்ல முகத்தில் முழிச்சேன் போ!"

"எந்த மூஞ்சிலே முழிக்கறது என்ன? இருக்கோ இல்லையோ வரிசையாய் தரித்திரம்! என்னிக்கித் தொலையப் போறதோ எல்லாம் வீட்டை விட்டு?"

"அடே சொன்னல் கேளுடா சித்தே. பார்த்துண்டு வாடா எங்கே போச்சுன்னு"

"முடியாதும்மா"

"என்னடா அவ்வளவு தீர்மானம்? அப்பாவிடம் சொல்றேன் பார்"

"நன்னு சொல்லுபோ! எனக்கு ஒண்ணும் பயமில்லை. உன்னைத்தான் வைய்யப்போரு"

இச்சம்பாஷணை ராதைக்கும் அம்பிக்கும் நடந்து கொண்டிருந்தது, சேஷய்யர் செவியிலும் விழுந்தது. கையிலிருந்த பத்திரிகையை மேஜைமீது வைத்து விட்டு,

"என்னடா அது அம்பீ! சண்டை பொழுது விடிந்து?" என்று கேட்டுக்கொண்டே கூடத்துப் பக்கம் வந்தார்.

"பாரேம்பா, விடிஞ்சதும் விடியாததுமா பூனையைத் தேடிண்டு போகணுமாம்! இது தானே வேலை. ஒன்பது மணிக்குப் பரீக்ஷை. பூனையோடு ஓடிண்டு நின்னு நன்னு சுழிச்சுப்புட்டு வரலாம்" என்றுன் அம்பி கோபத்தோடு.

இதைக் கேட்டதும் சேஷய்யருக்கும் கோபம் வந்துவிட்டது.

"என்னடா செய்யறது? புள்ளையில்லா சொத்து கொள்ளை போகிறது. வீட்டில் பால் வீணாய்ப் போறதோ இல்லையோ?" என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்றுர். அடுப்பு மூட்டிக் கொண்டிருந்த அவர் சம்சாரம் ஒன்றும் பேசவில்லை.

"பொழுது விடிஞ்சதும் விடியாததுமா அவனைப்போய் ஏன் கழுத்தறக்கிறே? ஒன்பது மணிக்குப் பரீக்ஷையாம். அதுக்கு ஏதாவது பொங்கிப் போடப் போறயோ இல்லியோ? அடுப்பு மூட்டலாமா வேண்டாமான்னு யோஜிச்சுண்டு இருக்கே போலிருக்கே?" என்றுர்.

"என்னன்னு செய்யச் சொல்றேள்? அதுக்குத்தான் அவசர அவசரமாய் ரெண்டு சொம்பு தண்ணியை விட்டுண்டு வந்தேன். வென்னீர்கூட சுடவில்லை. எல்லாம் மனசுக்கு வேதனையாத்தான் ஏதாவது நேர்றது இப்போ வந்துடுவனே பறக்கடிக்கன்னு நினைச்சுண்டு. இந்தப் பாழும் பிரும்மேதத்தி இப்படி பழி கொட்டிக்கப் போறதுன்னு கண்டேனு? நெருப்பை வாரிண்டு வந்து அதுமேல் போட்டுத் தொலச்சேன்" என்று ராதை முடிப்பதற்குள் சேஷய்யருக்குத் தாங்கவில்லை.

"பிரும்மேத்தின்னு யார்மேலே, போட்டுத் தொலைச்சுட்டே? உன் வேலையே இப்படித் தானே. போயிடுத்தா ஒரு வழியா செத்து?" என்றுர் ஆத்திரத்துடன்.

"அதைத்தான் சித்தே பாத்துத் தொலைடாங்கறேன். நெருப்பைப் போட்டேனே இல்லையோ 'குபீர்னு" எரிஞ்சுடுத்து. கட்டையிலே வைக்க அதை! இப்படிப் பண்ணப் போறதுன்னு யார்கண்டா?"

"ஆச்சோ இல்லையோ? இது ஒண்ணு தான்பாக்கி. இன்னும் ரெண்டைக்கொண்டு வந்து வச்சுக்கோ வீட்டிலே அதும் பாட்டிலே ஏறிண்டு வறது பால் கணக்கு. உனக்கு என்ன? பெரிய மகாராஜி. ஊரிலே இருக்கறதை எல்லாம் கொண்டுவந்து வச்சுண்டு என் கழுத்தை அறுத்தால்; போச்சு என்ன பால் கணக்குத் தெரியுமா இந்த மாசம்?', என்றுர்.

ராதை ஒன்றுமே பேசவில்லை. பூனையைப் பற்றிய கவலை அவளுக்கு அதிகமாய் இருந்ததே ஒழிய, பால் கணக்கிற்கு எட்டவில்லை புத்தி, என்ன செய்வது? அவசரமாய்ச் சமைக்க வேண்டுமென்று இங்கும் அங்கும் போனுளே ஒழிய ஒன்றும் தோன்றவில்லை. எல்லாவற்றையும் எடுப்பதும் கீழே வைப்பதுமாய் ஏதோ செய்து கொண்டிருந்தாள்.

"டேய் அம்பீ" என்று சத்தம் போட்டார் சேஷய்யர்.

புஸ்தகத்தை ஆத்திரத்துடன் மேஜைமீது எறிந்து விட்டு "ஏம்பா?" என்றான் அவன்.

"பார்த்துத் தொலைச்சயாடா அந்த இழவை? இருக்கா போயிடுத்தா, ஒரு வழியா?"

"ஏம்பா நீயும் அமக்களப் படுத்தறே? எல்லாம் இருக்கு. இந்த மேஜையின் கீழே"

"இருக்கா?" ராதை ஒரே ஓட்டமாய் அங்கு ஓடினாள். பூனை குண்டுபோல் உட்கார்ந்திருந்தது. இவளைக் கண்டதும் "மியாவ்" என்றது.

"ஆமாம்! மியாவ்! சனி, பீடை!" என்றான் அம்பி

"இதோ வந்தேன் பார், தொலைச்சுட்டு மறுகாரியம் பார்க்கிறேன். புடிடா அம்பி அந்தத்துக்குறியை. எங்கேயாவது கொண்டுபோய் விட்டு விட்டு மறுகாரியம் பார்க்கலாம்" என்று சொல்லிக்கொண்டே ஒரு சிறு கோணியை எடுத்து வந்தார் சேஷய்யர். அம்பி ஓட, இவர் ஓட ஒரே அமக்களம்.

"அப்பாடா, எப்படியாவது பிழைத்ததே பிராணனை விடாமல் கண்காணாமல் எங்கேயாவது போய்த்தொலைக்கட்டும்" என்று தோன்றியது ராதைக்கு.

"எதற்கு இவ்வளவு அமக்களம்? கோணியும் வேண்டாம். குந்தாணியும் வேண்டாம். ஒரு பூனையைப் பிடிக்கறத்துக்கு நன்னா அம்மானத்துக்கு திம்மானம் குதிக்கறேள்! நகருங்கோ" என்று சொல்லிக்கொண்டே வந்தவள் பூனையைப் பிடித்தாள்.

"மியாவ்" என்று அதன் பரிதாபத்தைக் கூறும் பொழுது ராதைக்கு மிகவும் வேதனையாக இருந்தது. எங்கேயாவது தீ பட்டு வெந்துபோய் விட்டதா என்று அதைத் தடவித் தடவிப் பார்த்தாள். காலை இன்னும் பால் சாப்பிடவில்லை. அதை வைக்க வேண்டுமென்ற அஞ்ஞானம் அவளுக்கு. சற்றுத் தயங்குவதற்குள்,

"ஏய்! இந்தாடி குட்டீ, எங்கேயாவது கொண்டுபோய்த் தொலைச்சுட்டுவா இதை! மறுபடியும் இந்தப் பக்கம் வரப்படாது. தூர எங்கேயாவது கண் காணாமே விட்டுட்டு வா! தெரிஞ்சுதா?" என்று வீடு கூட்டும் குட்டியைக் கூப்பிட்டுச் சொன்னார் சேஷய்யர்.

"சரி தாங்க" என்று பூனையை அவள் வாங்கும்பொழுது, ராதையால் ஒன்றும் கூறமுடியவில்லை. போகத்தான் போகிறது, கொஞ்சம் பாலைக் கூடவா கொடுத்து அனுப்பக்கூடாது? வேதனைக்குமேல் வேதனை இன்னும் அதிகரித்தது.

பூனை ஒழிந்துவிட்டது. சேஷய்யர் பேச்சு இன்னும் ஓயவில்லை.

அம்பி சாப்பிட்டுவிட்டுப் பரீக்ஷைக்குக் கூடப் போய்விட்டான். மணி ஒன்பதுக்கு மேலாகிவிட்டது. சேஷய்யர் அலமாரியைத் திறந்து எதையோ தேடிக்கொண்டிருந்தார். தேடும் மும்முரத்தில் சந்தானம் உள்ளே நுழைந்தது கூடத் தெரியவில்லை.

"என்ன? ரொம்ப முடையாய்த் தேடியாகிறதே? எதையாவது எடுத்துண்டு போனாலும்கூடத் தெரியாதுபோலிருக்கிறதே!" என்றதும் திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தார்.

"நீயா? யாரோன்னு பார்த்தேன். வா— வைபோகம்தான்" என்றார் வெள்ளைத் துணி ஒன்றைக் கிழித்துக்கொண்டே.

"என்ன வந்துடுத்து இப்போ வைபோகம்? எப்பொழுதும் உங்காத்தில் அமக்களம்தானே?" என்றார் சந்தானம் சிரித்துக்கொண்டே.

முழங்காலில் காயம்பட்டு இரத்தம் வழிந்து கொண்டிருந்தது:

"என்னப்பா இப்படிப் பொழுது விடிவதற்குள் ரத்தக் களரி? எங்கே விழுந்தே?"

"அதை ஏன் கேட்கறே போ! இந்த தரித்திரங்கள் இருக்கும் வரையில் உருப்படப் போகிறது ஏது? வரவர எங்கேயாவது தொலைஞ்சு போயிட்டாத் தேவலைபோல் இருக்கு"

"ஏனப்பா இப்படித் தாறுமாறுமாய்ப் பேசறே? என்ன நடந்தது? விஷயத்தைச் சொல்லேன்"

"என்னத்தைச் சொல்லச் சொல்றே? போறாத்துக்கு நீயும் வந்து சேர்ந்தே! வீட்டிலே இந்த தரித்திரம் இரண்டு பூனைக் குட்டி இருக்கோ இல்லையோ! அது படுத்துகிற பாடுதான். விழுந்து காலை ஒடிச்சிண்டேன்"

"அதா ஒடிச்சுக்கச் சொல்லித்து? கண்ணை மூடிண்டு ஏன் ஓடினையாம்? இந்தப் பூனைக் குட்டி மனுஷனிடம் அகப்பட்டுக்கொண்டு முழிக்கிறது உண்டோனோ? மகா பாபம்!" என்று சந்தானம் முடிப்பதற்குள் சேஷுவிற்குப் பிரமாத கோபம் வந்துவிட்டது.

"ஆமாண்டா! வந்துட்டயாக்கும் தர்ம சாஸ்திரம் பேச! வேணும்னா உன் வீட்டிலே கொண்டுபோய் வச்சுக்கறது தானே எல்லாத்தையும்? இங்கே ஏதாவது பேசினையானால் தெரியுமா அதைப்பத்தி?" என்று சீறி விழுந்தார்.

சந்தானம் சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டு விட்டு,

"உலகத்திலேயே இந்த மனுஷன் தாண்டா ரொம்பப் பொல்லாதவன், தன்னுடைய சவுகரியத்தையும் சுகத்தையும் பார்க்கிறானே ஒழிய மற்றது எதையும்

எண்ணிக் கூடப் பார்க்கிறதில்லை. காசு தாண்டா பிரதானம். ஒரு உயிர்னுகூட எண்ணுகிறதில்லை என்ன காசுடா? பாழுங் காசு'' என்றார்.

"ஆரம்பிச்சுட்டயே உன் வியாக்யானத்துக்கு. பணத்தையும் காசையும் பத்தி யார்டா பேசினா இப்போ?''

"யார் பேச வேணும்? உலகத்தில் நடக்கிறதைப் பார்த்துத்தான் சொல்றது. வரச்சே வழியிலே ஒரு கண்ராவி கண்ணிலேபட்டது. இதைஎல்லாம் பார்த்தா சங்கடமாய்த் தானே இருக்கு சொல்லு?''

"என்ன பண்ணினே பூனைக்குட்டியே? கொடுத்தனுப்பிச்சுட்டயா வெளியில்?''

"உனக்கு வேணுமோ அது? தெரிந்தால் பத்துநாள் முந்தியே கொடுத்தனுப்பி இருப்பேனேப்பா. இப்போதான் கொண்டு போய்த் துலைச்சுட்டு வான்னு அனுப்பினேன். கொண்டுவந்துடச் சொல்லட்டுமா? இப்படிப் பூனைக்குட்டியையும் எலிக்குட்டியையும் கட்டிண்டு அழுகிறவர்களை நான் பார்த்ததே இல்லை''

"அடே ஏண்டா அதுக்குள்ளே இப்படிக் கோவிச்சுக்கறே? அதுக்காகவா சொன்னேன் இப்போ?

"எனக்குப் பூனைக்குட்டியும் வேண்டாம்; எலிக்குட்டியும் வேண்டாம். வழியில் இரண்டு பூனைக்குட்டிகளைப் பார்த்தேன்; என்னமோ சங்கடமா யிருந்தது. உன்னுடையது தானான்னு கேட்டேனப்பா''

"அடப்பா அதைப் பார்த்ததும் அப்படியே உருகிப்போய் விட்டயாக்கும் பாவம்! நீ ஒரு பித்துக்குளி. அப்படியே வாங்கிண்டு வந்து விடுகிறதுதானே?''

"வாங்கிண்டு வந்துடலாம்னுகூடத்தான் பார்த்தேன், இருந்தாலும் என்ன உலகம் போடா. பணம்தானடா பிரதானம் மனுஷனுக்கு?''

அப்பொழுதுதான் சேஷுவிற்கு முழுங் கால் கட்டு பிளாஸ்திரி எல்லாம் முடிந்தது. நாற்காலியில் வந்து உட்கார்ந்தார். சந்தானத்தின் மீது அவருக்குப் பெருங்கோபம் வந்தது.

"பொழுது விடிந்ததும் விடியாததுமாய் ரத்தக்களரியுடன் உட்கார்ந்துருக்கேன் நான். நீ வந்துட்டாயாக்கும் பாவம் புண்ணியம் பேச! எதையாவது வாய் கொடுத்தாயானால் தெரியுமா என்னிடம்?'' என்று பாய்ந்தார்.

சந்தானம் இன்னும் ஒரு பெருமூச்சு விட்டார்.

"இல்லையபபா, உலகத்துப் போக்கைத் தானே சொன்னேன். பாழுங்காசு ஜீவ காருண்யம் என்பதையேன்றா ஒழித்து விடுகிறது? பூனைக்குட்டியை என்ன செய்யச் சொன்னே? கொண்டுபோய் விடத் தானே சொன்னே?''

"வேறு என்ன செய்வா எல்லாரும்? கண்காணாதே எங்கேயாவது துலைச்சுட்டு வரச்சொன்னேன்''

"யாரிடம் கொடுத்தே?''

"இதென்னடா துன்பமாயிருக்கு! யார் எல்லாம் கைகட்டித் காத்துண்டு இருக்கா இங்கே? அந்தக்குட்டி ஒண்ணு இருக்கோ இல்லியோ? அதுதான் எடுத்துண்டு துலைந்தது.''

"சேஷு! சொன்னால் கோபித்துக்கொள்ளாதே. என்ன நடந்ததுன்னு அதையே கூப்பிட்டுக்கேளேன். குறவன் ஒருவனிடம் கால் ரூபாய்டா! அதை வாங்கிண்டு இது ரெண்டையும் கொடுத்துட்டு வந்துடுத்துடா! மகா பாவம்! அதுவும் ஒரு ஜீவன் இல்லியா? விட்டால் எங்கேயாவது பிழைத்து விட்டுப் போறது. ஒரு உயிரைவிட கால் ரூபாய் காசுதானேடா பெரிசாய் தோன்றுகிறது மனுஷர்களுக்கு. கொஞ்சம் கண்டிப்பாய் சொல்லி அனுப்பிக்கக் கூடாது?''

"ஆமாண்டா! இனிமேல் பூனைக்குட்டியைத் தூக்கிண்டு நான் போகணும், இல்லியா? அதைக்கொண்டு போய்க் குறவனிடம் கொடு என்றா சொல்லி அனுப்பினேன் நான் மட்டும்? இதை எல்லாம் காவல் காத்துக்கொண்டிருப்பது தான் எல்லோருக்கும் வேலையோ? பாவம்! புண்ணியம்! அததுக்கு எவ்வளவு எழுதி இருக்கோ அதுதானே இருக்கும்? அவன் கையிலிருந்து வாங்கி விட்டாயானால் இன்னும் யாராவது பிடித்துக்கொண்டு போகிறான். நான் படுகிறபாடு எனக்குத் தெரியும். பாவத்தையும் புண்யத்தையும் பற்றிப் பேசினயானால் தெரியுமா?''

'போடா! இங்கிருந்து எடுத்துபோய் உயிரோடு தின்கிறவனிடம் கொடுத்து விட்டு வருகிறதாம். அதைக் கூப்பிட்டுக் கண்டிக்க வேண்டும் என்று கூட உனக்குத் தோன்றவில்லையே? மனிதனே இவ்வளவு தாண்டா. தன் சுகம்தான் பிரதானம்.

"பணம் என்றால் எதைவேணுமானாலும் பார்க்கமாட்டான். பணத்தைப் பார்க்கவில்லை! பாழும் பணம்!'' என்று சந்தானத்திற்கும் மிகுந்த கோபமும் வருத்தமும் தாங்கவில்லை.

"மணி என்ன இருக்கும்? நான் போயிட்டு வறேன். இன்னிக்கி நல்ல முகத்தில் முழிக்கலே'' என்று சொல்லிக்கொண்டு எழுந்தார்.

சேஷுவும் அவரைத் தடுக்கவில்லை. ஏதோமுணகிக் கொண்டிருந்தார். அதற்குள் ராதையம்மாள் உள்ளே நுழைந்தாள். சந்தானத்தைக் கண்டதும் அவளுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை.

"எப்பொழுது வந்தேள்? சந்தடியா ஒன்று காணோமே? வந்துருக்கேள்னுகூட இவர் சொல்லலேயே?'' என்பதற்குள்,

"ஆமாம்! சொல்றது! பொழுதுவிடிந்த அழகு கால் ஒடிந்து கிடக்கறதே! வந்து பார்த்தயாக்கும் கரிசனமாய் மூணுநாள் கழித்து!" என்று அவள் பேரில் சீறினர் சேஷு.

ராதை ஒன்றும் பேசவில்லை. எதாவது பதில் கொடுத்தால் இன்னும் அதிகமாவது நிச்சயம் என்பது தெரியும்.

"நான் வந்து எவ்வளவோ நாழியாய் விட்டது. ஏது இந்தப்பக்கமே வரலையேன்னு நினைச்சேன். உள்ளே ஜோலியாக்கும்" என்ருர் சந்தானம்.

"குழந்தைக்குப் பரீக்ஷையோன்னோ? எல்லாம் சுருக்க ஆகவேண்டியிருந்தது. கொஞ்சம் காப்பி கொண்டுவறேன். உக்காருங்கோ" என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்றவள் கொஞ்சம் காப்பியை எடுத்து வந்து சந்தானத்திற்கும் சேஷுவிற்கும் கொடுத்தாள்.

"இன்னிக்குப் பூனைக்குட்டி வேட்டையாக்கும் வீட்டில்?" என்ருர் சந்தானம் நிதானமான குரலில் ராதையைப் பார்த்துக் கொண்டே.

"அதை ஏன் கேக்கறய? எதையோ நான் பாட்டிலே கத்திண்டு கிடந்துட்டுப் போறேன்னு இவரை யார் ஓடிப் பிடிச்சு தடுக்கி விழச் சொன்னு? எல்லாம் போராத வேளை தான்" என்ருள் ராதை.

"சே, போராதவேளைடீ! எல்லாம் உன்னுலேதான். இன்னும் ஊரில் இருக்கும் பூனைக் குட்டிகளை எல்லாம் கட்டிண்டு அழு! வீடு லக்ஷணமாய் இருக்கும்! மூதேவி!"

"அதுதான் தொலைஞ்சு போயிடுத்தே கண் காணுதே. இன்னும் எதுக்காக எரிச்சப்படுகிறேளாம்?" என்ருள் ராதை சந்தானத்தைப் பார்த்துக்கொண்டே.

சந்தானம் சேஷுவின் குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவர். நெருங்கிப் பழகுபவர். சேஷுவையோ ராதையையோ அவருக்கு நன்ருகத் தெரியும். அன்பும் தயாதாக்ஷண்யமும் நிறைந்தவர். இவர்கள் நடுவில் அவரால் ஒன்றும் பேசமுடியவில்லை. மௌனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்.

"இரண்டு வாரமாச்சு. இந்தப் பூனைக் குட்டியும் குழந்தையும் இவரிடம் மாட்டிண்டு முழிக்கிறது உண்டோன்னோ? ஈச்வரா! அந்தப் புள்ளையைப் போட்டு வாட்டுகிற வாட்டல்லே உடம்பு துரும்பாப் போயிடுத்து. பூனைக்குட்டியை இவரா கண்ணிலே காண விட்டேங்கருர். அவனு அது இறந்தாலொழிய, படிக்க மாட்டேங்கருன். இந்த சங்கடத்துக்கு என்ன செய்யறது? படி! படி! படின்னு அந்தப் புள்ளையைப் போட்டுப் பிரளயம்; பள்ளிக் கூடம் போறத்துக்குள்ளேயோ இன்னிக்கின்னு ஒரே அமக்களம். தலையை வேறே சுத்தறதுன்னு சொல்லிண்டு போயிருக்கு. உடம்பு ஒண்ணுமில்லாமே இருக்கணுமின்னு விஜாரமாய் இருக்கு. பூனைக் குட்டியை காணும்னு அதுவேறே அமக்களம் இருக்கு இன்னும். பூனைக்குட்டியாலே எவ்வளவு சிலவழிந்துவிடப் போகிறது எல்லாங் கிடக்க? பொழுது விடிந்தால் பணம் பணம் பணம்னு எதுக்குத்தான், இப்படிக் கத்தணும்? ஒரு பூனைக்குட்டி இருந்தா ஆயிரம் ருபாயா சிலவழிந்து விடும்?" என்றுராதை மேலும் கூறுவதற்குள்'

"தட தட" வென்று யாரோ ஓடி வரும் சத்தம் கேட்டது. அம்பி பதைக்கப் பதைக்க ஓடி வந்தான்.

"என்னடா அதுக்குள்ளே வந்துட்டே? ஒண்ணும் எழுதலையா என்ன?" என்ருள் ராதை.

"இந்த மூதேவியோடே விளையாடிண்டு இருந்தா என்னத்தை எழுதறது? நன்னு கழிக்க வேண்டியதுதான்" என்று முணுமுணுத்தார் சேஷு.

"ஏண்டா அம்பீ? இப்படி வா. உன்னைப் பற்றி விஜாரப் படருளே அம்மா?" என்ருர் சந்தானம்.

"பரீக்ஷை பேபர் எல்லாம் வெளியாயிடுத்தாம் மாமா! பரீக்ஷை இப்போ இல்லை அப்பறந்தான்னு சொல்லிட்டா" என்று பிரமை பிடித்தவன் போல் நின்ருன் அம்பி.

"அப்படின்னு திருப்பியும் எல்லாம் படிக்கணுமா? எல்லா பரீக்ஷையுமா திருப்பி எழுதணும்? இப்பவே உடம்பைப்பார்க்க வேண்டியிருக்கலையே?" என்ருள் ராதை.

"அட முண்டமே! பணம் கட்டியாகணுமாடா மறுபடியும்? நம்ம பிராணனை வாங்கன்னு எல்லாம் வந்துருக்கு!" என்று அம்பியின் பேரில் பாய்ந்தார் சேஷு.

சப்தநாடியும் ஒடுங்கி நிற்கும் அம்பியையும் சேஷுவையும் பார்த்தாள். அவளுடைய கண்களில் கோபக்கனல் வீசியது.

"பணம்! பாழும் பணம்! நம்மோடு வரப் போகிறது! குழந்தை உடம்பு போயிருக்கிறது. கண்தெரியல்லே! பணம்!" என்று சொல்லிக் கொண்டே அவ்விடத்தைவிட்டு அகன்ருள்.

"பணம் பொல்லாதுடாப்பா! பொல்லாது!" என்று சந்தானமும் எழுந்தார்.

உள்ளே ஓடிவந்தவன் "அம்மா! பூனைக் குட்டியை எங்கே விட்டாளம்மா; பாவம்மா!" என்ருன் அம்பி.

யாருக்கு யார் பதில் கூறுவது? ராதை ஒன்றும் பேசவில்லை. கண்களில் நீர் ததும்ப, சந்தானம் கண்ணிற்கு மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"பணம்! பேய்!" என்றது அவன் உள்ளம்.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam

18082